உ

கணபதி துணை

# வேல் உண்டு வினை இல்லை

★

செ. தனபாலசிங்கன் B. A. (Lond.)

முதற்பதிப்பு 1973

உரிமை நூலாசிரியருக்கு உரியது

## சமர்ப்பணம்

அமரர்களான என் சோதரர்
திரு. செ. சுப்பிரமணியம்
திரு. செ. வடிவேல்
திரு. செ. இராசரத்தினம்
மூவருக்கும் இந்நூல் சமர்ப்பணம்

விலை ரூபா 5/-

அச்சுப்பதிவு :
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

# முன்னுரை

யாம்ஓ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனல்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே

நல்லாசிரியர்களிடத்தே ஓதி உணர்ந்த கல்வி அறிவையும், நமக்கு இயல்பாக உள்ள அறிவையும் முருகப்பெருமானே தந்தான். வேலவன் தந்ததனல் அக் கல்வியையும் அறிவையும் அப்பெருமானுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். வேலவர் தாமே பெறத்தந்தவை அவை! 'பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதனைத் தேவாரத்திலேயே மிகத் தெளிவாகச் சொல்லிப் புலவர்களுக்குப் புத்தி புகட்டி இருக்கிறார்.

நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
சீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு

என்று வள்ளலாரும் இதனை இன்னொரு பாணியிலே பேசுவார்.

கண்டகண்ட பொருள்களிலே உங்கள் கல்வியையும் அறிவையும் செலவிட்டுவிடாமல் நான் காட்டிய வழியிலே நடவுங்கள். நடவுங்கள் என்பது கருணைக்கு அருணகிரியின் பரம உபதேசம் இந்த அநுபூதியைப் படிக்கிறபோதெல்லாம் எளியேன் உள்ளத்திலே ஓர் எழுச்சி உண்டாகும். அதனல் மகிழ்ச்சி அடைவேன்.

"அறிவியலை வரவேற்போம்; அறியாத ஒன்றை அரியணையில் ஏற்றமாட்டோம். பக்தி என்ற பைத்தியக் காரத்தனத்தையும் சிந்தனை அற்ற கட்டைத்தனத்தையும் மதம் நமக்குக் கொடுத்து மண்டி இடச் செய்திருக்கிறது. மணிஓசையும் பாடல்களும் செபமணியும் வேதபாராயண மும் முழங்குவதனால் மகிழ்ச்சியுறும் கடவுளை நாம் நம்புவ தில்லை" என்று ஒருசாரார் குரல் எழுப்புகிறார்கள். நாவில் நடவுங்கள்; நடவுங்கள் என்று அருணகிரியார் முழங்குகிறார். இந்த இக்கட்டான நிலையிலே நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற விவாதம் இன்று நேற்று உண்டானதன்று. மனிதன் தோன்றி அறிவு வளரத் தொடங்கிய நாளிலிருந்தே இந்த விவா தம் வளர்ந்து வந்திருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்தது திரு முருகாற்றுப்படை. அங்கே ஒரு நிகழ்ச்சி. நாத்திகர் களை நக்கீரர் பாடும் காட்சி. முருகப்பெருமானுக்கு விழா எடுக்கிறார்கள். மக்கள் திரண்டு மலைச்சாரலில் உள்ள பல ஊர்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். இந்த ஊர்கள் எல்லாம் வாழவேண்டும்; முருகன் திருக் கோயில் வாழவேண்டும் என்று குறவர்கள் வாழ்த்து கிறார்கள். பசியும் பிணியும் பகையும் ஒழிய வேண்டும் என்று குறிஞ்சிப்பண்ணைப் பாடுகிறாள் குறமகள். மலை யில் இருந்து அருவி விழுகிறது. அதன் இனிய ஓசை சுருதிபோடுகிறது. ஓம் என்ற ஓசை அங்கே எழுகிறது. இனிய வாத்தியங்களைப் பலர் வாசிக்கிறார்கள். கண்ணில் காணும் காட்சிகள் அத்தனையும் முருகனையே எண்ணச் செய்கின்றன. காதில் விழும் ஒலிகள் அவன் நினைவை எழுப்புகின்றன. தூபதீபங்களால் எழுகின்ற நறுமணம் தெய்விக உணர்ச்சியை நாசி வழியே ஏற்றுகிறது. பாடிக் கொண்டே இருக்கும் குறமகள் பல பூக்களைத் தூவு கிறாள். இரத்தத்தோடு கலந்த தினையை முன்னாலே பரப்பி இருக்கிறாள். முருகனுக்கு உரிய துடியும் தொண்டகமும் உரக்க ஒலிக்கின்றன. இந்த இடம் முரு

கன் வருகைக்குப் பழுத்த நிலையமாகி விடுகிறது. அந்தக் குறமகள் ஆவேச உருவத்திலே 'ஆ' என்று முழங்கிக் கொண்டு வந்து ஆடுகிறாள். கன்னத்தில் போடுவார் ஒரு புறம். கும்பிடுவார் ஒரு புறம். அழுபவர், நடுங்கு பவர் ஒரு புறம். கீழே விழுந்து வணங்குபவர்கள் மற் றொரு புறம். 'முருகா முருகா' என்று கதறுகிறார்கள். சிலர் கூத்தாடுகிறார்கள். எங்கு பார்த்தாலும் ஒரே ஆடலும் பாடலும்.

தெய்வநம்பிக்கை இல்லாத ஒரு சிலரும் அங்கே வந்திருக்கிறார்கள். பைத்தியம் பைத்தியம் என்று பூசை வழிபாடுகளைப் பரிகாசம் செய்பவர்கள் அவர்கள். வேடிக்கை பார்க்க அங்கே வந்திருக்கிறார்கள் நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்துகின்ற கூட்டத்தோடு சேர்ந்து கொள்ளாது சற்றே ஒதுங்கி நிற்கிறார்கள். அற்புதம்! அற்புதம்!! அங்கே பொங்கி வந்த உணர்ச்சி கொந்தளித்து இந்தப் 'பகுத்தறிவாளர் களை'யும் ஆட்கொள்கிறது. குறமகள் திடீரென்று ஆவேசம் வந்து குரல் எழுப்புகிறபோது அவர்களும் தம்மை அறியாது 'அரோகரா அரோகரா' என்று ஏத்து கிறார்கள்; போற்றுகிறார்கள்; கன்னத்திலே போட்டுக் கொள்கிறார்கள். தெய்வம் தம்மை ஏதும் செய்து விடுமோ என்று நெஞ்சு படபடக்க நினைவு இழந்து நிற் கிறார்கள். கோயிலாவது ஏதடா, குளங்களாவது ஏதடா என்று இருந்தவர்களும் இவ்வாறு அஞ்சி நடுங்கும்படி முருகனைக் குறமகள் வரவழைத்து இருக்கிறாள். இதோ திருமுருகாற்றுப்படை

நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொடு இன்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்

(முரணினர் — இறைப்பொருள் உண்டு என்பாரோடு மாறுபட்டு அஃது இன்று என்போர்.)

ஆகவே, நாத்திகம் இன்றைய படைப்பு அன்று. அது அன்று இருந்தது: இன்று இருக்கிறது. என்றும் இருக்கும். நாத்திகர்கள் எழுப்புகின்ற குரல்களுக்கும் பொருள் இல்லாமலும் இல்லை.

நாம் கடவுளைக் கோயிலிலே மட்டும் காட்டத் தலைப்படுகிறோம். கடவுளை வாழ்த்துப் பொருள் என்று எண்ணுகிறோம்; அவன் வாழ்த்துப் பொருள் மட்டும் அல்ல; வாழ்வுப் பொருள் என்ற நினைவு இரத்தத்தில் ஓடி இருதயத்தில் அடிக்க வேண்டும். நம்முடைய சமய நெறி கற்பனையில் கருக்கொள்ளவில்லை; அந்த அருள் நெறி நம்பிக்கைக்கும் நல்வாழ்வுக்கும் ஏற்றது: அச் செந்நெறி சிந்தனையிலே செழித்து வளர வேண்டும்: அது "சிந்தையுள் தெளிவுமாகி தெளிவினுள் சிவமுமாகி" என்று அருள் பழுத்த நெஞ்சினராகிய அப்பரடிகள் குரல் எழுப்பிச் சிறப்பித்த திருநெறி. இந்நெறியைக் கடவுள் இல்லை என்று வாதாடுவார் உள்ளபடி உணர வில்லை. பக்தி என்ற ஆதார சுருதியை அடிப்படையிற் கொண்டு வளர்ந்த நம்முடைய சமய இலக்கியங்களிற் பொதிந்து கிடக்கும் பொன்னன கருத்துக்களை — தத்து வங்களை நாம் அறிய வேண்டும்.

"பகுத்தறிவை இரவல் கொடுத்துவிட்டுச் செல்வக் குழந்தையைத் தேர்க்காலின் கீழ் வைத்துக் கொன்ற மன்னனைப் பாராட்டி ஒரு புராணமே எழுந்திருக்கிறது. அவனைச் செங்கோல் மன்னனாக்கி மனுநீதிகண்ட சோழன் என்ற காரணப் பெயரையுஞ் சூட்டி இருக் கிறார்கள். இதனை இன்றைய உலகம் ஏற்றுக்கொள் ளுமா" என்பது நம்முன் நிற்கும் ஒரு வினா.

'அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தம் நோய்போல் போற்றாக்கடை' என்ற பொய்யாமொழி

நீதிகண்ட சோழனின் நெஞ்சத்திலே நீங்காத இடம் பெற்றிருந்திருக்கிறது. பிறர்படும் துன்பத்தைப் போக்க முடியவில்லை என்றால் அத்துன்பத்தைத் தானும் அநுப விக்க வேண்டும் என்ற நீதி மேன்மைகொள் சைவநீதி. தருமம் தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன் மேல் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன். இது செய்யானாயின் தருமம் தன்னோடு வழி அற்று நின்று விடும். தனக்குப் பின்னும் அது நிலவ வேண்டும் என்று அவன் கண்ட நீதி அறநெறியின் உண்மைத் திறம். "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை" என்று குறள் கண்ட நெறியைப் போற்றினான் மன்னன். 'பூமியிலே வெளிப் படப் பாவஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அரச னுக்கும், வெளிப்படாமல் பாவஞ் செய்தவர்களையும் வெளிப்படப் பாவஞ் செய்தவர்களுள் அரசனாலே தண் டிக்கப்படாதவர்களையும் மறுமையிலே நரகத்திலே தண் டித்தல் இயமனுக்கும் கடன்; தாம் செய்த பாவத்தின் பொருட்டு இம்மையிலே அரசனாலே தண்டிக்கப்பட்ட வர்கள் அப்பாவத்தின் பொருட்டு மறுமையில் நரகத் திலே தண்டிக்கப்படார்கள். தன்னுடைய மகன் பசுக் கொலைக் குற்றத்தின் பொருட்டு மறுமையில் நரகத் துன்பம் அடையாவண்ணம் தானே இம்மையில் அவனைத் தண்டித்து அப்பாவத்தை ஒழித்தான். ஆதலால் அவ் வுயிர்த் தண்டத்துக்குக் காரணம் அவனிடத்திலே வைத்த இரக்கம் என்றே துணியப்படும்.' நாவலர் பெருமானின் இந்த விளக்கம் மிக அற்புதமானது. பசுவின் நெஞ்சத்திலே குடிகொண்டிருந்த வேதனையை முற்றாக முழுதாக உணர்ந்து அப்பசுவாகவே உள்ளத்தால் மாறி விட்ட சோழனின் நீதி நினைக்க முடியாத நீதி!

புராணங்களிலுள்ள உண்மைகளைப் பிரித்தறியாது புராணங்களைத் திரிபாய் விளங்குவதாலேயே வேண்டா வினாக்கள் எழுகின்றன. இந்த வேதனை — நாத்திகரின் குரல்'— அலை எறியும் நேரத்திலே 'வேல் உண்டு வினை இல்லை' என்ற இந்நூல் செந்தமிழ்ச் சைவச் செந்நெறிச்

செல்வர்களிடம் வருகிறது; நம்மிடையே நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ வந்த கேடுகள் அத்தனையையும் நீக்கிவிட வல்ல பெருமான் செந்திற்குமரன். விண்ணோர் சிறைமீட்ட வீரவேல் ஞானவேல். அது நம்மையும் அறியாமைச் சிறையினின்றும் நீக்கி வாழ்வாங்கு வாழ வழிகாட்டும். உலகப் போக்கு, கேள்விக் குறியில் இருக்கிறது. வாழ்வதே ஒரு கலை. வாழ்க்கைக் கலை வளர வேண்டுமானால், அது இலட்சிய நோக்கு உடையதாக இருக்க வேண்டும். "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று அப்பரடிகளே பாடுவார் என்றால் நாம் என்ன சொல்ல இருக்கிறது.

வேல் உண்டு வினை இல்லை என்று தொடங்கும் இந் நூல் திருக்கல்யாணத்திலே நிறைவு பெறுகிறது. ஆணவம் நம்மைச் சுவரிட்டு இருட்படுத்தி இடர்ப்படுத்தும். மூலமலமாகிய ஆணவத்தினாலேயே எல்லாத் துன்பங்களும் நமக்கு விளைகின்றன. சூரபன்மன் ஆணவ மலம்; வேல் ஞான சக்தி. ஆணவமலத்தை ஞானத்தால் வலிகெடச் செய்வதே சூரசங்காரம். வேலை நினைப்பவர்க்கு வினைப்பகை ஒழியும். வினை விலங்கு அறுந்தால், உடம்பாகிய சிறையினின்றும் விடுதலை பெறுவோம். உயிர்க்கூட்டங்கள் பாசத்தினின்றும் விடுதலை பெற்று, சிவலோக இன்பம் அநுபவிக்க வேண்டும் என்பது முருகன் திருவுள்ளம். நாம் அதனை அறியாத படுபொல்லாத பிள்ளைகள். "ஏகபோகமாய் நீயும் நானுமாய் இறுகும்வகை பரமசுகம் அதனை அருள்" என்று கேட்க முடியாத நிலையில் வாழ்கின்றோம். நமக்கும் திருக்கல்யாணம் நடக்குமா?

"பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும்தான் இன்றைய பௌராணிகர்கள் (புராணங்களைப் பிரசாரம் செய்பவர்கள்). சூதரும் மற்றப் பௌராணிகரும் எப்படித் தர்மங்களை ரசமான கதைகள் மூலம் பொது ஜனங்களிடையே பிரசாரம் செய்தார்களோ, அவ்விதமே செய்ய வேண்டியது இன்றைய பத்திரிகையாளர்கள்,

எழுத்தாளர்களின் கடமை; ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டும் சொல்வது என்று வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை உயர்த்துகிற விஷயங்களையே எழுதவேண்டும். இதைச் சுவாரசியமாகச் செய்ய வேண்டும். புதுப்புது விதங்களில் உத்தமமான விஷயங்களை உணர்த்த வேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ் நாள் முழுவதும் மாணுக்கர்களாகவே இருந்தால்தான் தாங்களும் இப்படிப் புதுப்புது விஷயங்களை அறிந்து மற்றவர்களுக்குப் பிரசாரம் செய்யமுடியும். சத்தியத்தைச் சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தர வேண்டும். சர்க்கரை பூச்சுத்தானே ஒழிய, முழுக்கவும் சர்க்கரையாகி விடக்கூடாது. வெறும் சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாசாரங்களில்தான் ஜனங்களுக்கு அதிக கவர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு இவ்விதமே எழுதுவது சரியல்ல. இருதய பூர்வமாக ஜனங்களுக்கு ஆத்மாபிவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்குப் பத்திரிகையாளர்கள் முனைந்தால், தானுகவே ஜனங்களுக்கு அதில் ருசி பிறக்கும். நம்மையும் உயர்த்திக் கொண்டு நம் வாசகர்களையும் உயர்த்த வேண்டும் என்கிற கடமை உணர்ச்சியைப் பெறவேண்டும்.'' இவ்வாறு ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் சொல்வார்கள்.

இவற்றை எல்லாம் சிந்தனையிற் தேக்கித் 'தினகரனை' வளர்க்கும் இருவரை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. தினகரன் ஆசிரியர் திரு. R. சிவகுருநாதன், துணை ஆசிரியர் திரு. M. R. சுப்பிரமணியம் இருவரும் நல்ல சிந்தனையாளர்கள்; செந்தமிழ்ச் சைவப் பெருமக்களின் இரத்தத்திலே ஊறி உள்ளத்திற் கலந்துபோய் இருக்கும் தர்மசிந்தனை நண்பன் திரு. சிவகுருநாதனிடம், இருக்கும் அற்புத சத்தி. அவரின் எழுத்தில் வீரம் இருக்கும்; அன்பின் ஈரம் இருக்கும். அவர் தமிழ்ப் பண்பாட்டின் சிறந்த பிரதிநிதி. ஐம்பது வயதைக் கடந்த வாலிபர் திரு. M. R. சுப்பிரமணியம். அவர்

தமிழ் எழுத்தாளர் பரம்பரைக்குத் தாயாகித் தந்தையாகித் தாங்குகின்ற தலைமகன்; ஐயம் அறப் பன்னூல் ஆய்ந்து கற்ற பேரறிவாளன்; அடக்கத்தின் உருவம்; அன்பின் சிகரம். இருவரும் எளியேனை வளர்த்துவரும் பண்புக்குக் கைம்மாறு செய்ய வல்லேன் அல்லன்.

பன்னிருதிருமுறைகள், பதினன்கு சாத்திரங்கள், பண்டைத் தமிழ் இலக்கியங்கள் என்பனவற்றை ஆர அமர்ந்து கற்றவர் திரு. மு. வைத்தியலிங்கம். எளிமையும் பெரும்புலமையும் அவரின் அணிகலன்கள். நூல்களைத் துருவிப் படிப்பார். சித்தாந்த சைவத்திலும் செந்தமிழ்க் கவிதைகளிலும் அவருக்கு இருக்கும் பற்று சொல்ல முடியாதது; சொல்லி முடியாதது. அவர் நட்புக்கு உகந்தவர். இன்முகம் காட்டும் இயல்பினர். இந்நூலினை அச்சுவாகனம் ஏற்ற அரும்பாடுபட்டார்.

அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும் அருள் மொழி வாசகரும் பக்திச் செல்வத்தைப் பரப்பிய பைந்தமிழ் நாட்டில் நாத்திகம் பரவ விடாது ஆத்திகமும் தவநெறியும் தெய்வத் திருவருளும் தழைத்தோங்க அமைதியாகத் தொண்டாற்றுபவர் திரு. மு. சிவராசா. அவர் சங்க நூல்கள், பெரிய புராணம், தேவார திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்கள் முதலிய தெய்விகத் தமிழ் நூல்களைத் துறைபோகக் கற்றவர்; கற்று அடங்கியவர்; விளம்பரம் இல்லாது வாழ விரும்புவர்; அவ்வப்போது பயனுள்ள ஆலோசனைகள் கூறி, எளியேனை வழிப்படுத்தி வருகிறார்.

'கலைமகள்' ஆசிரியர் வாகீசகலாநிதி, வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்களின் அணிந்துரை எளியேன் நூல்களுக்கு அணிகலம். உலகம் மாறலாம்; மக்கள் மனப்போக்கு மாறலாம்; பொன்னும் தன் மாற்றுக் குறையலாம். ஆனல், கி. வா. ஜ. ஐயா அவர்கள் என்பால் கொண்ட அன்பு மாறவில்லை. மாறவும் முடியாது. காரணம் என்ன? அது வள்ளிக்கு வாய்த்த

பெருமான்தேடி வைத்த அன்பு. விஞ்ஞான உலகத்திலே மெய்ஞ்ஞானத்தைப் பரப்பி வருவன அவரின் மணியான எழுத்து. அமுததாரை போன்ற பேச்சு. அவரின் எழுத்திலும், பேச்சிலும் பேரின்பநெறி மணக்கும். இந்தத் தெய்வீக மனிதரிடம் இருக்கும் ஒரு தனிச் சக்தி ஆழம் காணமுடியாதது. ஊர் எல்லாம் அவர் ஊர்; உலகம் எல்லாம் அவர் சுற்றம். 'விடையவன்' புகழ் காலம் கடந்தது; இடம் கடந்தது. அவர் அன்புக்கும் எளியேனை வளர்த்து வரும் பண்புக்கும் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி ஆயிரம் பல்லாயிரம் வணக்கம் சொல்கின்றேன்.

செந்தமிழ்ச் சைவச் செந்நெறிச் செல்வர், செஞ்சொற் கொண்டல், வித்துவான், கலாநிதி சொ. சிங்காரவேலன் M. A. Ph. D. அவர்கள் என்பால் பேரன்பு பூண்டவர். 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ' என்று எடுத்துச் சொல்லி நல்லவற்றைச் சிந்திக்க, நல்லவற்றைச் செய்ய, நல்லவற்றைச் சொல்ல வழி காட்டும் அவரின் பெரும் பண்புக்கு எவரும் தலை வணங்காமல் இருக்கமுடியாது. முரணினர் உட்க உண்மை ஆத்திகம் பரப்பும் சிங்காரவேலனார் அறிவால் அறிந்து இரு தாள் இறைஞ்சும் இன்தமிழ்ப் பேரறிஞர்; மூதறிஞர். 'இந்நூல் வாழ்க; எளியேன் வாழ்க' என்று அன்புடன் வாழ்த்துகிறார். அவர் அன்புக்கு ஆயிரம் பல்லாயிரம் வணக்கம் உரித்தாகுக.

யாழ்ப்பாணம் புலோலி நகர் சைவத்திருவாளர் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய 'கந்த புராண விளக்கம்' எனப் பெயரிய நூலிலிருந்து சில பகுதிகள் மனைவி ஏது கல்யாணம் ஏது என்ற கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. 'கந்தபுராண விளக்கம்' என்ற இந்த அரிய நூலினைச் செந்தமிழ்ச் சைவஉலகம் படித்து உய்யுமாறு வெளியிட்ட பெருமை கொழும்பு விவேகானந்த சபையினரைச் சென்று சாரும். குறிப்பிட்ட பகுதிகளை எடுத்தாள அநுமதி தந்த விவேகானந்த சபையினர்க்கு உளம் கனிந்த நன்றி.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வதுமன்' என்ற பொய்யா மொழியைப் படிக்கிற போதெல்லாம் யாழ்ப்பாணம், ஸ்ரீ சண்முகநாத அச்சக உரிமையாளர் திரு. சி. ச. குமாரசுவாமியின் நினைவே வரும். அவர் ஒரு தெய்வப்பிறப்பு. சிரித்த முகம்; நீறு நிறைந்த நெற்றி; கனிவு நிறைந்த கண்கள், வாணிபக் கண்ணோட்டம் இல்லாத வளமான நெஞ்சம். மிகமிகச் சிறந்த பிரசுரகர்த்தாவாகிய இவர் எனக்குக் கிடைத்தது பண்ணிய புண்ணியம்! அவரும் கண்ணியம் மிக்க அச்சக ஊழியர்களும் என் நெஞ்சில் நிலைத்த இடத்தைப் பிடித்து விட்டார்கள்.

இந்நூல் கட்டுரைகளின் தொகுப்பு. அதனால் கூறியது கூறல், மிகைபடக்கூறல் என்ற இன்னோரன்ன குற்றங்களுக்குச் சில இடங்களில் நான் ஆளாகி இருக்கலாம். குற்றங்கள், முரண்பாடுகளை ஒரு புறத்தே ஒதுக்கி வைத்துவிட்டு, எளியேன் உள்ளத்தை இந்நூலில் கண்டு பிடிக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

காலத்தினாற் செய்த பேருதவிகளுக்கு எல்லோர்க்கும் நன்றி சொல்ல நா ஒன்று போதாது; யாவருக்கும் திருமுருகன் திருவருள் பெருக வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

ஒன்றுக்கும் பற்றாத எளியேனைத் தமிழ்க் கருணைத் தெய்வமாய், என் ஆன்ம நாயகனாய் விளங்கும் சிதம்பரசுப்பிரமணியப் பெருமான் இந்நல்வினை முயற்சியில் ஈடுபடுத்தினான். எல்லாம் முருகன் திருவருள்!

வரம்கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட
செவ்வாயும்
பரம்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரம்கொண்ட மறைஇறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரம்கொண்ட வேலும் என்தன் கண்ணைவிட்டு
நீங்காவே.

செ. தனபாலசிங்கன்

# அணிந்துரை

'கலைமகள்' ஆசிரியர்
வாகீசகலாநிதி, வித்துவான்
திரு கி. வா. ஜகந்நாதன் M. A.

வேலெடுத்த அருளாளன் திருவருளே துணையென்று
மெய்யாய் நம்பி
நூலெடுத்துப் படித்தவன்றன் புகழறிந்து
மிகத்தெரிந்து நூலியற்றி
ஞாலமுறு புகழ்படைத்த தனபால சிங்கனெனும்
நம்பிக்கெம்மான்
சீல அரு ளால்நலங்கள் மிகுகஎன வாழ்த்தியிது
செப்புகின்றேன்.

மனிதன் வாழப் பிறந்தவன்; வாழ்வு என்பது உடம்பிலே உயிரை வைத்துக்கொண்டு இருப்பது மட்டும் அன்று. கவலை இன்றி இன்பத்துடன் வாழ்வதைத்தான் வாழ்வு என்று சொல்ல வேண்டும். இன்ப வாழ்வு வாழ்வதே மனிதப் பிறவியின் நோக்கம்; இன்ப வாழ்வு என்பது எது? உடலோடு சார்ந்த இன்பங்களைப் பெற்று வாழ்வது இன்ப வாழ்வு என்று சொல்லலாம். ஆனால், அது நிலையான இன்ப வாழ்வு ஆகாது.

கொய்யாப்பழத்தை நோய்வாய்ப்பட்டு எழுந்த குழந்தை உண்கிறது. வாய்க்கு இனிமையாக இருக்கிறது. அது இனிய கனி. ஆனால், அதனை உண்ட பிறகு சில மணி கழித்து வயிற்று வலி வந்துவிடுகிறது. உண்ணும் போது இனிதாக இருந்தது. பின்பு இன்னாததாக விளைகிறது. பலவகையில் மகளிர் இன்பத்தை நுகர்ந்த ஒருவன் அந்தச் சமயங்களில் இன்ப வாழ்வு வாழ்ந்ததாக நினைக்கிறான். ஆனால், சில ஆண்டுகள் கழிந்தால் அவன் உடலில் நோய்கள் வந்து மூள்கின்றன; ஒவ்

வொரு கணமும் துன்பத்தை அநுபவிக்கிறான். ஐந்து ஆண்டுகள் நுகர்ந்த இன்பம் உண்மையில் இன்பந்தானா? அதனால் துன்பம் அல்லவா விளைந்தது?

இதற்கு நேர்மாறாக மற்றொன்று உண்டு. நோய் வாய்ப்பட்டவன் கைப்பு மருந்து உண்ணுகிறான். அதை உண்ணும்போது அவன் மிகவும் அருவருப்புடன் உண்ணுகிறான்; துன்பப்படுகிறான்; ஆனால், பிறகு அவன் இன்பம் அடைகிறான். அறுவை மருத்துவம் செய்யும்போது உடம்பு வேதனைக்கு ஆளாகிறது. ஆனால், அதன் விளைவு இன்பம் இப்படி முதலில் இன்பமாக இருந்து பிறகு துன்பமாக முடியும் வாழ்வு ஒருவகையாகவும், முதலில் துன்பமாக இருந்து இன்பமாக முடியும் வாழ்வு ஒரு வகையாகவும் இருப்பதை உலகில் பார்க்கிறோம். இந்த இரண்டில் எது சிறந்தது? முதலில் துன்பம் துய்த்தாலும் பிறகு இன்பம் விளைந்தால் அதனைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது.

இந்த இரண்டையும் விட மூன்றாவது வகை வாழ்வு ஒன்று இருக்கிறது. அது முதலும் இன்பம், முடிவும் இன்பமாகத் திகழ்வது. அப்படி ஒரு வாழ்வு இருப்பதாக நாம் எண்ணுவதில்லை; அது சாத்தியம் என்றும் தோன்றவில்லை. அப்படி என்றும் இன்பமாக வாழ முடியுமானால் எப்படி இருக்கும்?

என்றும் இன்பமாக வாழ முடியுமா? உழைக்காமல் உண்ண முடியுமா? நெற்றி வேர்வை நிலத்தில் விழச் சிரமப்பட்டால்தானே பிறகு இளைப்பாறி உண்ணலாம்? வெயிலும் நிழலும் போலே துன்பமும் இன்பமும் ஒன்றனை ஒன்று தொடர்வது உலக நியதி அல்லவா?

ஆம்; இந்த வினாக்களெல்லாம் நியாயமாகத் தோன்றுகின்றன. உழைத்தால்தான் உணவு பெறலாம். அப்படிச் சொல்வதனால் நாம் என்ன நினைக்கிறோம் தெரியுமா? உழைப்பது துன்பம்; உண்பது இன்பம் என்ற கருத்தை வைத்தே அப்படிச் சொல்கிறோம்.

உழைப்பதும் இன்பமாக உண்பதும் இன்பமாக அமைந்தால், என்றும் இன்பம் துய்க்கும் நிலை உண்டாகாதா? உழைப்பது எப்படி இன்பமாகும் என்ற கேள்வி பிறக்கலாம். உழைப்பதில் இன்பம் பெற வேண்டுமானால், உழைப்பவனுடைய மனநிலை மாற வேண்டும். ஓர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம்:

மண்வெட்டி கொண்டு கூலிக்கு நிலத்தில் வெட்டி வேலை செய்கிறான் ஒருவன். அப்போது அவன் உழைக்கிறான்; நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைக்கிறான். கைகால்கள் வலி எடுக்க உழைக்கிறான். எப்போது இந்த வேலையை முடித்துக் கூலியை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போவோம் என்று அவன் எண்ணிக்கொண்டே வேலை செய்கிறான். அவனுக்கு இன்பந் தருவது கூலிப் பணம். அதைப் பெறுவதற்குரிய உழைப்பை அவன் சிரமமென்று உணர்கிறான்.

கிறிக்கெற் விளையாட்டு விளையாடுகிறார்கள். ஓடியும் சாடியும் விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய கையும் காலும் எப்படி எப்படியோ அசைகின்றன; மோதுகின்றன. உடலெல்லாம் வேர்க்கிறது. உழைப்பாளி எப்படிக் கைகாலால் உழைத்து வேர்வை பாய நிற்கிறானோ, அப்படியே நிற்கிறார்கள் இவர்கள்; இவர்களுக்கும் கைகால் வலி எடுக்கும். ஆனால், உழைப்பாளி அதை உணர்கிறான். இவர்கள் உணர்வதில்லை. இத்தனை சிரமமும் இன்பமாகவே இருக்கிறது. உழைப்பாளிக்குக் கைகால் இயக்கமும் ஆட்டமும் துன்பத்தைத் தர, விளையாட்டுக்காரருக்கு அவையே இன்பத்தைத் தருகின்றன. அவன் வினைஆட்டம் புரிகிறான். இவர்கள் விளையாட்டு ஆடுகிறார்கள். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு உடலால் நிகழும் செய்கையில் இல்லை. உள்ளப் பாங்கில்தான் இருக்கிறது.

வாழ்க்கையையும் விளையாட்டாக நடத்தத் தெரிந்து கொண்டால், எப்போதும் இன்பத்தை அடையலாம்.

வழியும் இன்பம், முடிவும் இன்பமாக இருக்கும் அநுபவம் உண்டாகும்; இறைவன் செய்யும் செய்கைகளை விளையாடல் என்று சொல்கிறோம். அவை அவனுக்கும் இன்பம் தருகின்றன; மற்றவர்களுக்கும் இன்பந் தருகின்றன. கிறிக்கெற்றை ஆடிக் களிப்பவர்கள் பன்னிரண்டு பேர்; அதைப் பார்த்துக் களிப்பவர்கள் பன்னீராயிரம் பேர்.

நாம் வாழ்க்கையை விளையாட்டாக அநுபவிக்க வேண்டுமானால், குழந்தையாக மாறவேண்டும்; மெய்ஞ் ஞானிகள் குழந்தை மனப்பான்மைகொண்டு வாழ்வார்கள்.

"சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை
ஞானம் தெளிந்தவரே"

என்பார் பட்டினத்தடிகள். "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்ற நிலையில் அவர்கள் வாழ்வார்கள்.

நாம் உடம்பால் குழந்தைப் பருவம் கடந்து முதியவர்களாகி வந்தாலும், உள்ளத்தால் குழந்தை ஆகலாம். அப்போது உலக வாழ்வை விளையாட்டாக அநுபவிக்கலாம்.

மனம் குழந்தைமனம் ஆவதற்கு வழி என்ன? குழந்தைகளோடு கொஞ்சி விளையாடும்போது மனிதன் குழந்தை போலவே ஆகிவிடுகிறான்; குழந்தையைப் போல அதனுடன் பேசுகிறான். மனிதக் குழந்தையோடு பழகும்போதே இந்த நிலை வருமானால், தெய்வக் குழந்தையோடு பழகும்படியான வாய்ப்புக் கிடைத்தால் அவன் எப்போதுமே குழந்தையாகி விடலாம். ஆனால், தெய்வக் குழந்தை நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. எப்படிப் பழகுவது?

மனந்தானே குழந்தையாக வேண்டும். அதற்கு மனம் தெய்வக் குழந்தையோடு பழகினால் போதுமே.

"தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்-மனக்கவலை மாற்றல் அரிது" என்ற குறளின் உரையில், 'சேர்தலாவது இடைவிடாது நினைத்தல்' என்று பரிமேலழகர் எழுதுகிறார்; எனவே, நம் மனம் தெய்வக் குழந்தையை இடைவிடாது நினைத்தால் குழந்தை மனப்பான்மை நமக்கு வந்துவிடும். "யத் பாவம் தத் பவதி" என்பது வடமொழி வாக்கியம். எதை இடைவிடாமல் எண்ணுகிறோமோ, அதன் தன்மையை நாம் அடையலாம். "யாதொன்று பாவிக்க நானது வாதலால்" என்பார் தாயுமானவர்.

இப்போது ஓர் உண்மை நமக்குப் புலனாகிறது. உலக வாழ்வில் முதலில் துன்பமுற்றாலும் பின்னாலே இன்பமுறுவது நல்லது. அதை விட எப்போதுமே இன்பத்தை அடைவது மிக மிக நல்லது. விளையாட்டிலேதான் எப்போதும் இன்பம் உண்டு. உலக வாழ்வே விளையாட்டாக அமைந்தால், வாழ்வு முழுவதும் இன்ப வாழ்வாகும். அப்படி அமைவதற்கு மனம் மாறவேண்டும். குழந்தை மனம் வந்தால், உலக வாழ்வு விளையாட்டாகும். மனம் தெய்வக் குழந்தையோடு ஒட்டிக் கொண்டால் எந்நாளும் இன்பத்தையே பெறலாம்.

இறைவன் செய்வன யாவும் விளையாடல் என்று சொல்கிறோம். அவனே குழந்தையாக நின்றால் நிச்சயமாக அவன் செய்வன விளையாட்டுக்கள் என்பது மனத்தில் உறுதியாகப்படும். அப்படி அவன் நிற்கிறான். தெய்வமே குழந்தையாக உருக்காட்டி, "என்னைப் பார்; என் அழகைப் பார்; என் வேலைப் பார்; என் மயிலைப் பார்" என்று சொல்கிறது. அந்த தெய்வக் குழந்தையை மனத்திலே இணைத்துப் பழகி விளையாடக் கற்றுக்கொண்டால் இந்த வாழ்வே இன்ப வாழ்வு ஆகிவிடும்; இகலோகமே பரலோகமாகிவிடும்; இம்மையே மறுமையின்பத்தைத் தரும்; அதைத்தானே அருணகிரியார் சொல்கிறார்;

"ஆனபய பக்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பக்தஜன வாரக் காரனும்"

என்ற அரிய திருவாக்கு, பக்தர்கள் தம் வாழ்வு முழுவதையும் வழிபாடாக்கி, அந்த வழிபாடே முத்தியின்ப வாழ்வாக நிகழ்கிற பரம பாக்கியசாலிகள் என்பதைப் புலப்படுத்துகிறது.

உள்ளத்தே முருகக் குழந்தை விளையாடினால் நாமும் அவனோடு குழந்தையாக விளையாடலாம். ஆனால், அவனை நம் உள்ளத்தே விளையாடச் செய்ய வேண்டுமே! அதற்கு வழி என்ன? புறத்தே உள்ள அவன் உருவைக் கண்டும், அவன் திருநாமத்தைக் கூறியும், அவன் புகழைப் பாடியும், அவனுடைய கருணைச் செயல்களை உணர்ந்தும், அவனுடைய தத்துவத்தைத் தெளிந்தும் பழகினால் அவன் நம் உள்ளச்சாலையிலே விளையாட வருவான்.

அந்தத் தெய்வக் குழந்தையுடன் உண்முகத்தே விளையாடினவர் அருணகிரிநாதர். அந்த விளையாட்டிலே இட எல்லை தெரியவில்லை; கால எல்லை தெரியவில்லை; எல்லாம் கடந்த தனி மோன இன்பநிலை சித்திக்கிறது.

"சாடும் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்
போய்ப்
பாடும் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கும் அதீதத்திலே"

அங்கே எத்தனை ஆட்டம்! கவுரி ஆடுகிறாள்; பசுபதி ஆடுகிறார். எல்லாம் ஆனந்தக் கூத்து. அந்த இன்பக் கூத்துக் களத்திலே நாமும் கலந்து ஒன்றாகி விடுகிறோம்.

இந்த விளையாட்டை விளையாட வழிகாட்டுகிறது இந்தப் புத்தகத்திலுள்ள கட்டுரைகள். நாமும் குழந்தையாக மாறுவதற்குத் தெய்வக் குழந்தையை உள்

ளத்தே தரிசிக்க வேண்டும் அல்லவா? அதற்கு ஏற்ற உபாயங்களைச் சொல்லுகிறது இந்நூல்.

தெய்வக் குழந்தையாகிய முருகனுக்கும் பன்னிரண்டுக்கும் நல்ல பொருத்தம்; அவன் கைகள் பன்னிரண்டு; அவன் கண்கள் பன்னிரண்டு. இந்த நூலும் பன்னிரண்டு கட்டுரைகள் அமைந்த தொகுதி.

முருகப்பெருமானுடைய உருவம், அவனிடம் உள்ள அங்க உபாங்கப் பிரத்தியங்கங்கள் எல்லாம் தத்துவங்கள். அவன் எப்போதும் வேலைத் தாங்கியிருக்கிறான். "வேலை விளங்கு கையான்" அவன். அந்த வேல் ஞானசக்தி. அது அசுரரை அழிக்கும்போது அவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்குகிறது. அன்பர்களுக்கு அருள் தந்து இன்பத்தை வழங்குகிறது. பூனை தன் குட்டியை வாயினால் கவ்விக்கொண்டு செல்லும். அந்தக் குட்டியை, "உன் தாயின் பல் எப்படி இருக்கிறது?" என்று கேட்டால், "ஆ ஆ! மிகவும் இதமாக இருக்கிறது!" என்று சொல்லும். ஆனால், அந்தப் பல்லின் பெருமையைப் பற்றி எலியைக் கேட்டுப் பாருங்கள். "ஐயையோ! அது எங்களுக்கு யமனாக இருக்கிறது. வதம் பண்ணுகிறது" என்று சொல்லும். பூனையின் பல் இதம் செய்வதா? வதம் செய்வதா? இரண்டும் செய்கிறது என்றும் சொல்லலாம்; இரண்டும் செய்யவில்லை என்றும் சொல்லலாம்; யாரிடம் அது செயல்படுகிறதோ அதற்கு ஏற்ற விளைவு உண்டாகிறது. வேலும், அத்தகையதுதான். அன்பர்களுக்கு வினை ஓடவிடும் கதிர்வேல் அது; அசுரர்களுக்கு அச்சந்தரும் கூர்வேல் அது. "வேல் உண்டு வினை இல்லை" என்ற முதற்கட்டுரை வேலின் சிறப்பையெல்லாம் எடுத்துக் காட்டுகிறது.

'முருகா எனும் நாமங்கள்', "விழிக்குத் துணை" என்ற கந்தரலங்காரப் பாட்டுக்கு விளக்கமாக அமைகிறது. பயந்த தனி வழி, தொலையா வழி என்ற ஜீவ

யாத்திரையிலே இவை இவை துணையாக இருக்கும் என்பதைத் தெளிய வைக்கிறது இந்தக் கட்டுரை.

தெய்வக் குழந்தை மிகவும் அழகிய குழந்தை. மனிதன் அழகான பொருளில் எளிதாக ஈடுபடுவான். ஆதலால் முருகனாகிய அழகனை மனத்திலே தியானிப்பது எளிது. உள்ளமெனும் கூடத்தில் அவனை அழைத்து வந்து விளையாட அவன் அழகைச் சிந்திக்க வேண்டும். அவனுடைய மங்காத, மாறாத அழகை மூன்றாவது கட்டுரை சொல்கிறது. பகையுணர்ச்சியோடு வந்த சூரபன்மன்கூட அந்த அழகிலே மயங்கிப் போனான்.

இந்த உடம்போடு இருக்கும்போதே பேரின்பம் பெறலாம் என்பது இந்த நாட்டு ஞானியர் கண்ட உண்மை; "அம்ருதம் இஹபவதி" என்பது சுருதி. 'சும்மா இருக்கச் சுகம்' என்பார்கள். கருவி கரணம் கழன்ற நிலையில் உயிர் இறைவனோடு இணைந்து இன்பத் துயில் கொள்கிறது. அந்த அநுபூதி பேசா அநுபூதி. அதைப் பற்றி நான்காவது கட்டுரை விரிக்கிறது. அடியார்க்கு நல்ல பெருமாளாகவும், வெற்றி வேற் பெருமாளாகவும் விளங்கும் முருகனுடைய கருணையை ஒரு கட்டுரை கூறுகிறது. அருணகிரியார் முருகனுடன் விளையாடுகிறவர். விளையாட்டில் அசதியாடுவது இயற்கை. "வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே" என்று தோழமை உணர்வு பொலிய அவர் பாடுகிறார். சுந்தரராகிய தம்பிரான் தோழரும், "வாழ்ந்து போதீரே" என்று இறைவனிடம் கூறுகிறார். இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி உயர்ந்த அநுபூதிமான்களுடைய அநுபவநிலை ஒத்திருக்கும் என்ற உண்மையைப் புலப்பட வைக்கிறது ஒரு கட்டுரை.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதே பெரும்பான்மையான நியதி. பொதுவிதிக்கு விலக்கு உண்டு. எங்கும் பனி பரவிக் குளிர் அடர்ந்திருந்தாலும் கம்பளிச் சட்டை அணிந்தவன் தன்னளவில் அந்தக் குளிரின் கடுமையை உணராதது போல, இறை

வன் திருவருளைப் பெற்றவர்கள் ஊழின் உறைப்பை உணரமாட்டார்கள். "வினைதான் என்செயும்" என்று மிடுக்குடன் பேசுவார்கள். "அவன் கால்பட்டு அழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே" என்று பெருமிதத்துடன் சொல்வார்கள். இந்த அரிய உண்மையை ஏழாவது கட்டுரை தெரிவிக்கிறது.

உயிர்களை ஆட்கொள்ள வேண்டும் என்ற கவலை இறைவனுக்கு இருக்கிறது. அவனால் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்று நமக்குக் கவலை இல்லை. ஒருகால் இருந்தாலும் நம்மை ஆட்கொள்ளவேண்டும் என்று அவன் படும் கவலைக்கு நாம் படும் கவலை கோடியில் ஒரு பங்குகூட இராது. "தீர்ந்த அன்பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி" என்ற மணிவாசகம் இந்த உண்மையைக் காட்டுகிறது. இந்தக் கருணையையே வள்ளியின் திருமணம் குறிப்பிக்கிறது. ஆன்மாவைப் பரமான்மா வேட்டைநாய் போலத் துரத்தி வருகிறதென்று ஒரு மேல்நாட்டுக் கவிஞர் பாடினார். (Hound of Heaven) அந்த அழகிய உருவகமும் இந்த உண்மையையே சொல்கிறது. வள்ளியை நினைந்து 'வியாகுல மனத்தினொடு போம் விற்கான'கிய முருகன நமக்காகப்படும் கவலையை ஒரு கட்டுரை காட்டுகிறது.

கந்தரலங்காரத்தில் "மைவரும் கண்டத்தர்" என்ற பாட்டு வருகிறது. அதை நான் உயிர்நிலைப் பாட்டு என்று கருதுகிறவன்; நான் தியானிக்கும் போதெல்லாம் அந்தப் பாட்டை மனத்தால் பலமுறை சிந்திப்பேன். கைவருந்தொண்டை அது சொல்கிறது; கற்பனையை அன்று.

"மைவரும் கண்டத்தர் மைந்தகந் தாளன்று
வாழ்த்தும்இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற
கல்வியும்போய்ப்

பைவரும் கேளும் பதியும் கதறப்
பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன்
அடைக்கலமே''

என்பதே அந்த அற்புதப் பாட்டு. அந்த விளக்கத்தை ஒரு கட்டுரை தருகிறது.

உண்மையான இன்பம் இறைவன் கழலேத்தும் இன்பமே என்பதை ஒரு கட்டுரையும், முருகனுக்கும் சூரபன்மனுக்கும் நிகழ்ந்த புறப்போராகிய பழம்போர், அறிவுக்கும் அறியாமைக்கும் நிகழும் அகப்போராகிய புதுப்போரின் உருவகம் என்பதை ஒரு கட்டுரையும்; அப்படியே பசுவும் பதியும் பக்குவம் முதிரும் நிலையில் இணைந்து இன்புறும் நிலையே வள்ளி திருமணம் என்பதை ஒரு கட்டுரையும் விளக்குகின்றன.

இந்தப் பன்னிரண்டு கட்டுரைகளிலும் எத்தனையோ சமயக் கருத்துக்களும், புராண உண்மைகளும், நடைமுறைக்கேற்ற சாதனவகைகளும் உள்ளன. முருகன் அங்கங்களின் பெருமையை உணர்கிறோம்; அவன் அழகிலே சொக்கி நிற்கிறோம்; அவன் கருணையை அறிந்து மனம் நெகிழ்கிறோம்; அவன் வீரத்தை எண்ணித் தைரியம் அடைகிறோம். நாமும் வள்ளியாக மாற வேண்டும் என்ற ஆசை உண்டாகிறது.

முருகனைப் பற்றிய கட்டுரைகளாக இருந்தாலும் சமரச உணர்வுள்ள இந்த ஆசிரியர் மூர்த்தி வேறுபாடின்றிக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார். திருப்புகழ், அலங்காரம், அநுபூதி முதலிய முருகன் புகழ் பாடும் நூல்களிலிருந்து பல மேற்கோள்கள் இதிற் காண்பது இயல்பு. தேவாரம், திருவாசகம் முதலியன அவற்றின் இனமாக அமைகின்றன. ஆனால், இவரோ திவ்யப் பிரபந்தத்திலிருந்தும் கருத்தை எடுத்துப் பின்னி

யிருக்கிறார்; கீதையையும் இணைக்கிறார். உண்மை எந்த வடிவில் இருந்தால் என்ன?

முருகபக்தி என்பது எந்த மூர்த்தியையும் வெறுப்பது அன்று. அநுபவநிலையில் எல்லா மூர்த்தியாகவும் விளங்குபவன் அவனே என்பது புலனாகும்.

இந்த நூலில் முருகப்பெருமானுடைய கருணைத் திறத்தை எடுத்துக் காட்டும் இடங்கள் பல. அவனுடைய அழகை உணர்த்தும் பகுதிகள் பல. அவனுடைய அங்க உபாங்கப் பிரத்தியங்கங்களின் தத்துவத்தை விளக்கும் பகுதிகள் பல. அருணகிரிநாதர் முதலிய அருளாளர்களின் வாக்கில் உள்ள நயங்களைக் காட்டும் இடங்கள் பல. செந்தமிழ் இன்பம் செறிய அடுக்கடுக்காகச் செய்திகளைத் தொடுத்துக் காட்டும் பகுதிகள் பலப்பல. இவ்வாறு ஐந்து வகையில் இந்த நூலைச் சுவை அறிந்து படித்துணரலாம். முருகனுக்குப் பஞ்சாமிர்த அபிஷேகம் மிகவும் விருப்பமானது. முருகன் அடியார்கள் அந்தப் பஞ்சாமிர்தத்தை அமுதப்பிரசாதமாகவே உண்பார்கள். இந்த நூலும் மேலே சொன்ன ஐந்து அமைதிகளை உடையதாய்ப் பஞ்சாமிர்தம்போலவே விளங்குகிறது. அன்பர்கள் தாராளமாக இதனுள் புகுந்து சுவையுணரலாம்.

அன்பர் திரு. தனபாலசிங்கன் இலக்கியங்களை நன்கு படித்தவர். புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து இவர் காட்டும் பாடல்களும் கருத்துக்களும் இதற்குச் சான்று பகரும். திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் நல்ல பயிற்சி உடையவர்; இதற்கு எடுத்துக் காட்டாகப் பல இடங்கள் இந்நூலில் உண்டு. அருணகிரியார் திருவாக்கில் உள்ளத்தைப் பறிகொடுத்தவர். இதற்குச் சான்றே தேவையில்லை. இந்த நூல் முழுவதுமே இதற்குச் சான்று.

தமிழ் அறிவும், முருகனிடத்தில் இடையறாத அன்பும், அடியார்களுடைய கூட்டுறவும் இந்த நூலை எழுதும் தகுதியை என் நண்பருக்கு உண்டாக்கி இருக்கின்றன. அந்தப் பண்புகளால் இவர் எழுத்தில் தெளிவும் சுவையும் பயனும் அமைகின்றன. இதனை எழுதியதற்காக இவரை மிகவும் பாராட்டுகிறேன். இவருக்கு எல்லா நலன்களும் முருகன் திருவருளால் உண்டாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமண்யன் தாளை
உளத்தேந்தி நாடோறும் உருகுகின்ற பண்பன்
விரும்பிஎழில் தமிழ்நூல்கள் பலபயின்ற அறிவன்
விளங்குசுவை நூல்கள்பல எழுதி அளித்திட்டோன்
கரும்பனைய சொல்லுடையான் உபநிடதம் கீதை
கந்தரலங் காரமநு பூதிதே வாரம்
அரும்பியஞா னப்பனுவல் சித்தியா ராதி
அறிந்தவன்பேர் தனபால சிங்கனெனும் அண்ணல்.

என்பாலே அன்புடையான் நல்லோர்தம் நண்பன்
எழிற்கோயில் திருப்பணிக்காம் பலதொண்டு செய்வான்
அன்பாலே யாவரையும் விலைபேசும் சமர்த்தன்
ஆறுமுக நாதனடி மலரில்வண் டாய்ஊதும்
இன்பாலே நிறைநெஞ்சன் இப்பொழுது முருகன்
இயல்சொல்லும் 'வேலுண்டு வினை இல்லை' என்னும்
பொன்பாலே நிறைந்ததெனும் நூலையளித் துயர்ந்தான்
பொற்புடனே இதுசிறந்து பலர்போற்ற உயர்க.

16-5-73. கி. வா. ஜகந்நாதன்

# வேல் உண்டு வினை இல்லை

யோகம்கை கூடும் உளத்தே அமைதிவரும்
ஏகமெனும் இன்பநிலை எய்தலாம் — வேகமாய்
நீலமணி மஞ்ஞையிலூர் நித்தன் குகப்பெருமான்
வேலுண்டிங் கில்லை வினை. (1)

நீலுண்ட கண்டன் குமாரன் அரம்பையர் நீள்கழுத்தில்
ஓலுண்ட தாலி இருக்க அவுணர் உலகழித்தான்
வேலுண்டு நெஞ்சே வினை இல்லை காலன் வெகுண்டுவரின்
காலுண்டு சற்றும் பயமில்லை வேள்வந்து காத்திடுமே.

மாலுண்டு மயங்குகின்ற மனமே வாழ்வு
மாயமென உணராமல் பற்றி வாழ்ந்து
பாலுண்டு பழமுண்டு விருந்து முண்டு
பன்னாளும் வாழலாம் எனவே எண்ணின்
நீலுண்ட நிறமுடைய காலன் வந்தால்
நிற்குமோ இவையெல்லாம்; சொன்னேன் கேளாய்;
வேலுண்டு வினையில்லை; முருகன் பாதம்
விரும்பியிறைஞ் சிடுகஇன்பம் விளையும் உண்மை. (3)

காலுண்டு மயிலவன்றன் கோயில் சுற்றக்
கண்ணுண்டு கந்தபிரான் உருவைக் காணத்
தாலுண்டு முருகவேள் புகழைப் பாடத்
தலையுண்டு குகன்தாளில் பணிந்து வாழப்
பாலுண்டு சரவணனை யாட்டப் பேர்கள்
பலவுண்டு மலரிட்டுப் பூசை செய்ய
வேலுண்டு வினையில்லை; அருளாம் போக
விளைவுண்டு; நலமுண்டு; சுகமு முண்டு. (4)

சேலுண்ட விழியுடைய குறமின் னோடு
தெய்வமாக் கரிபடரும் தருவே நின்னை
ஓலுண்ட மறைநான்கும் உணரா என்ற
உண்மையினை யறிந்தபின்னும் உன்னைப் போற்றத்
தாலுண்டென் றகங்கரிக்கத் தகுமோ? நின்றன்
தாளுண்டு சரணமென வீழ; அப்பால்
வேலுண்டு வினையில்லை; இன்னல் யாவும்
வீயநின்றன் நீறுண்டு கவலை என்னே? (5)

பாலுண்ட திருவாயும் முகங்கள் ஆறும்
பதவிணையும் திருமார்பும் கடப்பந் தாரும்
மாலுண்ட பெருஞான வடிவும் கண்டு
மனமொன்றித் தினந்தொழுமா றறியே னந்தோ
நீலுண்ட மழையனைய அருளை ஈயும்
நித்தனுனை எவ்வாறு சார்வே னையா
வேலுண்டு வினையில்லை என்றே சாரும்
விதமடியேற் குன்னருளை வழங்கு வாயே. (6)

*16-5-73.* **கி. வா. ஜகந்நாதன்**

# பாராட்டுப் பாக்கள்

செஞ்சொற் கொண்டல், வித்துவான், கலாநிதி
செ. சிங்காரவேலன் M. A.; Ph. D.
தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்

செந்தமிழ் முருகன் சீரைச்
  செந்தமிழ் மணக்க நூலாய்த்
தந்தனன் தமிழ்சு வைத்த
  தகவினன்; முருகன் அன்பன்;
சிந்தனை முகத்திற் றேக்கிச்
  செய்தனன் உரை விரித்தே
நந்தமிழ்க் கட்டு ரைகள்
  நாலொரு மூன்ருய் இன்றே. 1.

தனபால சிங்கன் தந்த
  தமிழ்நடை உள்ளம் அள்ளும்;
இனமான மேற்கோட் பாடல்
  எழிலுற அமைந்து தோன்றும்;
மனமான புலத்தில் வேலின்
  மன்னவன் விளையாட் டெல்லாம்
தனமாக வழங்கு கின்ருன்;
  தமிழ்நூலும் வாழ்க நன்றே. 2.

முருகனைப் பரவி னேர்க்கு
  முன்னிய பொருள்கை கூடும்;
முருகனை மொழிந்த பேர்க்கு
  முத்திசித் தித்தல் வாய்மை;
முருகனை நினைந்த பேர்க்கு
  முருகெங்கும் வீளைத லுண்மை;
முருகனைத் தொழுத பேர்க்கு
  முடியாத பொருளு முண்டோ? 3.

பன்னிரு கரத்தான் பாதம்
    பரவினால் இடர்கள் தூளாம்;
பன்னிரு விழியான் தாள்கள்
    பகர்ந்திடில் துன்பம் தூசாம்;
பன்னிரு கட்டு ரைகள்
    பார்த்திடிற் பொருத்த மன்றோ?
என்னிரு கண்ணும் நெஞ்சாம்
    எழிற்கந்த னடிகள் வாழ்க! 4.

திருப்புகழ், அலங்கா ரத்தைத்,
    திகழ்ந்திடும் அநுப வத்தை,
மருப்பொதி யார மாக
    மலர்த்தினான் * அருளார் கோமான்;
ஒருப்படும் சந்த மெல்லாம்
    உவப்புறத் தமிழிற் தந்தான்;
பொருப்பென உயர்ந்து தோன்றும்
    புண்ணியன் உரைத்த பாட்டை 5

விளக்கிடும் கட்டு ரைகள்
    விளங்கிடும் இந்நூ லுக்குள்;
துளக்கிலா அருளைப் பெற்றால்
    துணைவேறு வேண்டா என்று
அளப்பரும் பெருமை காட்டும்
    அழகுயர் விளக்கம் உண்டாம்;
வளப்பமார் தமிழில் அன்பன்
    வரைகின்றான்; புகுந்து பாரீர். 6.

* அருணகிரிநாத சுவாமிகள்

" பழகிய ஐவர் தாமும்
    பரிந்தெனைப் பொருந்தி நின்ற
அழகிய நிலையின் மாறி
    அகன்றிடில் அப்பா! உன்றன்
மழவிளந் தாள்கள் போற்றி
    அடைக்கலம் மனம்கொள்" கென்றே
வழங்கிடும் அலங்கா ரப்பா
    வளத்தினை உரைபபான் அன்பன்! 7.

உயிர்ப்பாட்டின் நிலைக் களத்தை
    உரைத்திடும் அலங்கா ரத்துள்
உயிர்ப்பாட்டை விளக்கு கின்ற
    ஒண்திறம் நினைக்கும் தோறும்
உயிர்ப்பாட்டை தனை யுணர்ந்தே
    உருகிடும்; ஐயன் வந்தே
உயிர்ப்பாட்டை அடக்கித் தாள்கள்
    உற்றங்கே ஒடுங்கச் செய்வான்! 8.

ஆற்றுநீ ரோட்டம் போலே
    அழகிய நடையைக் கொண்டான்
ஊற்றுநீ ருட்டம் போலே
    ஒண்பொருள் திறமே விண்டான்!
வேற்றுநீ ரோரும் கண்டு
    வியந்திடக் கட்டு ரைத்தான்
ஆற்றுநீர் சடையிற் கொண்டோன்
    அவன்மகன் அருளால் வாழி! 9.

வாழ்வினை மையற் பட்டு
    வையமே பெரிதா எண்ணி
ஆழ்வினைப் பட்டி டாதே
    அறிவினைத் தெளியக் கொண்டு
சூழ்வினை தெளியச் செய்து
    தூயதோர் நெறியிற் சென்றால்
பாழ்வினை யாது செய்யும்?
    பரகதி கிட்டு மன்றே. 10.

கந்தனை நினைந்தே இந்தக்
    கருத்தினைப் பொதிந்து வைத்த
செந்தமிழ்க் கவிதை ஊறிச்
    சிந்தனை தன்னைத் தேக்கி,
முந்திடும் உரைந டைக்குள்
    மொழிந்தனன் 'சிங்கன்' இந்நாள்;
விந்தமே அனைய தீய
    வினையெலாம் வேலால் போகும்! 11.

'வினையில்லை வேலுண்' டென்று
    விளம்பியே தொடங்கிப் பின்னே
'மனைவிதான் மணந்தான் ஏது
    மாநிலத்' தென முடித்துப்
புனைந்தனன் இந்த நூலைப்
    புதுநலம் விளங்கித் தோன்ற;
நனைந்தனன் அருளின் மாரி;
    நல்கினன் பனுவல், வாழி! 12.

தெய்வநா யகன்றன் வேலின்
திறத்திணைக் கூறும் நூல்தான்
சைவர்கள் படித்து ணர்ந்தே
தகவினின் ஓங்க வாய்ப்பாம்;
ஐவகைப் பொறியின் வந்த
அல்லலில் விடுபட் டென்றும்
உய்வகை காட்டும் என்பேன்;
ஒளிர்கவே இந்நூல், வாழி! 13.

'கீதையின் அமுதைத்'தந்த
கீர்த்தியான்; 'மறையின் உச்சிப்
போதையுள் துழவிப் பூந்தேன்'
புகன்றவன்; இரும ருங்கும்
கோதைமார் இருப்பக் கொண்ட
கொற்றவன் 'படைவீ டெ'ன்ற
வாதைதீர் அருளின் கோயில்
வணங்தவன் ; புகழை வேண்டான். 14.

மாணியாய் உரும்ப ராயின்
மலர்திரு முருகன் கோயில்
சேணிலத் துயரத் தக்க
திருப்பணி, நூல்வ ளத்தால்
காணியாத் தந்த அன்பன்
கவின்தன பால சிங்கன்
ஆணிவேர் சிவநெ றிக்கு;
ஆதலால் வாழ்க! வாழ்க! 15

17-5-73. **செ. சிங்காரவேலன்**

# உள்ளுறை

| | |
|---|---|
| முன்னுரை | i |
| அணிந்துரை | xi |
| வேல் உண்டு வினை இல்லை (பாடல்கள்) | xxiii |
| பாராட்டுப் பாக்கள் | xxv |
| வேல் உண்டு வினை இல்லை | *1* |
| முருகா எனும் நாமங்கள் | **13** |
| மங்காத அழகன் மாறாத அழகன் | **25** |
| பேசா அநுபூதி | **34** |
| வெற்றி வேற்பெருமாள் | **43** |
| அசதி ஆடுகிறார் அருணகிரியார் | **49** |
| வினைதான் என் செய்யும் | **59** |
| முருகனுக்கும் ஒரு கவலை | **71** |
| உயிரைக் காத்துக் கொள்ள ஒரு பாடல் | **85** |
| இறைவன் கழல் ஏத்தும் இன்பம் | **94** |
| புதுப்போர் பழம்போர் | **104** |
| மனைவி ஏது, கல்யாணம் ஏது | **114** |

முருகா

# வேல் உண்டு வினை இல்லை

அருள் தரும் முருகன் கலியுகவரதனாகிக் கண்கண்ட தெய்வமாகிச் சங்கப் புலவனாகித் தந்தைக்கு உபதேசித்த சாமிநாதனாகி, ஞானந்தான் உருவாகிய நாயகனாகி, அமரர் இடர் தீரச் சமரம் புரிந்த குமரனாகிக் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்புடையோனாகி நெஞ்சிலே நிலைத்த இடத்தைப் பெற்றுவிட்டான்.

கைபுனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பிலே உள்ளத்தைப் பறிகொடுத்த தமிழ்ப் பெருமக்கள் கண்ட தனிப்பெருங் கடவுள் முருகன். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்த தமிழன் ஐந்து நிலங்களுக்கும் உரியவர்களாக ஐந்து தெய்வங்களைப் பூசித்து வழிபட்டிருக்கின்றான். அவன் மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி எனப் பெயரிட்டு முருகனை அந்நிலத்துக்குரிய பெருமானாகக் கண்டான். புல், பூண்டுகள் ஒன்றுமே வளராத பாலை நிலத்துக்குத் தெய்வம் துர்க்கை எனக் கண்டான். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்று பெயர் பெறும். அந்நிலத்துக்குத் தெய்வமாகத் திருமாலைக் கண்டான். வேளாண்மை செய்து வாழ்கின்ற நிலம் மருதம். அந்நிலத் துக்குத் தெய்வம் இந்திரன் என்றே ஏத்திப் போற்றி னான். கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்துக்கு வருணனைத் தெய்வமாக்கி வழுத்தினான்.

இந்த ஐந்து திணைகளுள் முதலில் தோற்றியதும் உயர்ந்ததும் குறிஞ்சி என்பர். முதல் திணையாகக் குறிஞ் சியை வைத்த தமிழன் அதற்குத் தெய்வமாக முருகனைப் போற்றி வழிபட்டிருக்கின்றான் என்றால், அக்கடவுளிடத்து அவனுக்கு இருந்த பேரன்பைத்தானே அது நமக்குச் சொல்

கின்றது. 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்று தொல்காப்பியம் பேசுகின்றது. சிவந்த நிறமுடைய முருகப் பெருமான் மலையையும் மலைசார்ந்த இடத்தையும் விரும்பி அங்கே தங்கி இருக்கின்றான் என்பது இதன் பொருள். முருகனை எல்லாப் பொருள்களையும் விட உயர்ந்த மலையிலே வைத்துப் போற்றி எல்லோரையும் விட உயர்ந்தவன் முருகன் என்பதைச் சொல்லாமற் சொல்லிவிட்டான் தமிழன்.

இயற்கை அழகைக் கண்டு இன்புற்ற தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு முருகன் பேரழகனைப் பெருவீரனை என்றும் இளையோனைக் காட்சி அளித்திருக்கின்றான். உலகம் உவப்பப் பலர் புகழ் ஞாயிறு கடற்கண் எழும் காட்சியிலே அழகைக் கண்டு இளமையைக் கண்டு இறைமையையும் கண்ட பெருமையும் நம்முடையதுதானே. இளமையும் அழகும் வீரமும் பொலியும் அந்தப் பெருமான் நம்மை வாழ்விக்க வந்த வண்ணத்தை நக்கீரர், அருண கிரியார், குமரகுருபரர் போன்ற அருளாளர்கள் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். அருள் பெருகி, அழியாத அமர வாழ்வும் பெற்று இருக்கின்றார்கள்.

கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னி ரண்டும் கொண்டே உலகம் உய்ய ஒரு திருமுருகன் வந்துதித்தான். அவுணர் படையை அழிக்க எப்படைக் கும் நாயகமாக, ஒரு தனிச்சுடர் வேலை அப்பன் அவன் கையிற் கொடுத்தான். இதோ பாடல்:

ஆயதற் பின்னர் ஏவில்மூ தண்டத் தைம்பெரும் பூதமும்
அடுவது
ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது ஏவர்மேல் விடுக்கினும்
அவர்தம்
மாயிரும் திறலும் வரங்களும் சிந்தி மன்னுயிர் உண்பதுஎப்
படைக்கும்
நாயக மாவது ஒருதனிச் சுடர்வேல் நல்கியே மதலைகைக்
கொடுத்தான்.

## வீரவேல் :

தமிழ்ப் பெருங்குடிமக்கள் குறிஞ்சியில் வாழ்ந்த நாளில் மர நிழலிலும் காவிலும் குகையிலும் நெடுவேலை நட்டு அதையே வணங்கினர். வேலை வேலன் என்றே கூறி மகிழ்ந்தனர். பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலே முருகப்பெருமானுக்குத் திருக்கோயில் இருந்தது. அங்கே வேலை நட்டு அதனையே ஏத்திப் போற்றிப் பூசை செய்து வந்தார்கள். அதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் வேற்கோட்டம் என்று பாடுகிறார்.

கண்ணகி கணவனுடன் விமானம் ஏறிச் செல்லக் கண்ட மலைவாணராகிய வேட்டுவரும் வேட்டுவித்தியரும் பெருவியப்பு அடைகிறார்கள். கண்ணகியைத் தம் குல தெய்வமாகக் கருதிக் குரவைக் கூத்து நிகழ்த்துகிறார்கள். அவர்கள் வேலினைப் பாடிப் புகழ்வதை நாமும் பாடி மகிழ்ந்திடலாம் :

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே ;

அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே ;

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே லன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே.

முருகனுக்குத் திருமுகம் ஆறு இருப்பது போல வேலுக்கும் ஆறு பட்டை உண்டு. வேல் சோதியுள் சோதியாக விளங்குகிறது. வேல் ஞான சக்தியின் வடிவம். முருகனே ஞானபண்டிதசாமி. அவன் திருவுருவமே ஞானவடிவம். 'நீயான ஞானவிநோதந்தனை என்று நீ அருள்வாய்'' என்று அருணகிரிநாதர் அலங்காரத்திலே அங்கலாய்த்துப் பாடுவார். முருகன் இன்றி வேல் இல்லை; வேல் இன்றி முருகன் இல்லை. அது அவனது சக்தி. மலஇருளைக் கெடுத்து ஞான ஒளியைக் கொடுத்து அருள் சுரப்பது வேல். வேல் இன்றி வேறு துணை நமக்கு இல்லை.

முருகப்பெருமான் எழுந்தருளும்போது மயில் பெருமை பெறுகிறது. வெற்றி வாகை சூடும்போது சேவற்கொடி சிறப்பு அடைகிறது. வேல் இறைவன் கையில் எப்போதும் இலங்கி நமக்கு உறுதி அளிக்கின்றது. வேலின் பெருமையை அறிஞர்க்கு அறிஞனும் மூதறிஞன் வீரவாகு தேவர் நாவாரப் பாடுகிறார்:

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த இயற்கையால் சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்.

பேரொளிப் பிழம்பாக விளங்கும் தன்மையால், பகை இருளைப் போக்கும் முகம் ஆறு உடைமையால், எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால், ஏற்றம் மிகுஞானமே என ஏத்திப் போற்றுதலால், வேல் கந்தனே என்ன நம்மைக் காக்கும்.

முருகன் கைவேல் கிரௌஞ்ச மலையைப் பொடி பொடி ஆக்கியது; மாயையின் மகனாகிய சூரனுடனும் ஏனைய அசுரர்களுடனும் பெரும்போர் செய்து வெற்றி வாகை சூடியது; அசுரேந்திரனும் சூரன் அமரர்களுக்குச் செய்த இடர்களை எல்லாம் களைந்து தேவர்களுக்கு வாழ்வு

அளித்தது; நக்கீரர் முதலான ஆயிரம் அடியார்களைக் குகையில் அடைத்து வைத்த கற்கிமுகி என்ற பூதத்தை நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடியபோது, கொன்று குகையை இடித்து நக்கீரர்க்கும் அவர்தம்மொடு சேர்ந்தார்க்கும் சிறைவாழ்வு நீக்கிப் பெருவாழ்வு கொடுத்தது. இவ்வாறு இளையபிரானுடைய வேல் அன்றும் இன்றும் பக்தர்களுக்குப் பாதுகாப்பாகவே நின்று நிலவுகிறது.

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுத லறக்களையும்
எனக்கோர்துணை யாகும்
தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்துஇரவு
பகல்துணைய தாகும்

என்று அருணகிரியார் வேலை ஏத்திப் போற்றுவார்.

'முருகா! வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறை மீட்ட தீரவேல், வாரி குளித்தவேல், கொற்றவேல், சூர் மார்பும் குன்றும் துளைத்தவேல், நின் கையிலே என்றும் பொலிகின்றது. என்னை வருத்தும் துன்பம் மலையாக உயர்ந்து அவலக்கடலில் தள்ளி விழுத்தித் திணறச் செய்கின்றது. நாளுக்கு நாள் துன்பம் ஒன்று மாறி ஒன்றாக வந்து என்னை நலிவடையச் செய்கின்றது. எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர். இடர்களைய என்னால் முடியாது. சூரனை வேல் கொண்டு தடிந்தாயே. அவனுக்குத் துணையாக மலைஉருவில் நின்றவன் கிரௌஞ்சாசுரன். அவனை — அந்த மாயமலையை — எந்த வேல் கொண்டு அழித்தாயோ அந்தவேல் இன்றும் நின் கையில் பொலிகின்றதே. என் துன்பம் என்னும் குன்றையும் அந்த வீரவேல் கொண்டு எறிந்து பொடி படுத்துவதுதானே பொருத்தமான காரியம். வீரவேலுக்கு என் இடும்பைக்குன்று எம்மாத்திரம்?' வேலின் ஏற்றத்தை இவ்வாறு எடுத்து இயம்பும் வெண்பாக்கள் இதோ:

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்போதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

சூரன்போர் :

முருகன் அருளிச் செய்த செயல்கள் அத்தனையிலும் பெரும்புகழ் உடையது சூரன் உடல்அற வாரிசுவறிட வேல் விட்ட காரியம்தானே! வேலினால் கிரௌஞ்சன் கீழே விழுந்தான்; தாரகன் மடிந்தான். சீற்ற வேலின் ஏற்றத்தைச் சூரபன்மன் மகன் இரணியன் சொல்கின்றான் :

தாரகற் செற்ற தேன்றால் தடவரை பொடித்த தேன்றால்
வார்புனற் கடலுள் உய்த்த வலியரை மீட்ட தேன்றால்
கூருடைத் தனிவேல்போற்றிக் குமரன்தாள் பணிவ தல்லால்
போரினைப் புரிதும் என்கை புலமையோர் கடன தாமோ.

சூரபன்மன் செவியிலே இது ஏறவில்லை. மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்திக்கு ஆளாகி வாழுதல் வேண்டும் என்று நினைத்தும் மானம் தடுக்க, போர் புரியப் புறப்படுகின்றான் சூரன்; இருட்படலமாய் எழுகின்றான். தேவர்கள்,

'நண்ணினர்க்கு இனியாய் ஓலம் ஞான நாயகனே ஓலம்' என்று முருகனையே அழைக்கிறார்கள். முருகன் 'அஞ்சன்மின், அஞ்சன்மின்' என அபயம் அளித்து வேலை விடுகிறான்.

ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட
மாயிருள் உருவம் முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே.

சூரனின் மாயவேடம் மறைகிறது. கடலின் நடுவே வானளாவ ஓங்கி மாமரமாகிறான் சூரன். மாமரவடிவாய் நின்ற சூரனின் செயலையும் உருவையும் மனக்கொள்கையையும் வலிமையையும் சீரையும் தேவாதிதேவனும் முருகன் விடுத்த வேற்படை பார்க்கிறது. கோபம் மேலிடத் தேயு அண்டங்களும் ஆயிரகோடி பிருதுவி அண்டத்து அக்கினிகளும் ஒருங்கு சேர்ந்தாற்போல மேலே உயர்ந்து ஒழுகிப் பெரியோர்களும் அஞ்சத்தக்க தோற்றத்தைக் கொண்டு நடக்கிறது அந்தத் தெய்வப் படைக்கலம்.

தேயுவின் எடுத்த அண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்து
ஆயிர கோடி அண்டத்து அங்கியும் ஒன்றிற் றென்ன
மீயுயர்ந்து ஒழுகி ஆன்றோர் வெருவரும் தோற்றம் கொண்டு
நாயகன் தனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே.

வேற்படை, பூமியும், ஏழ்கடல்களும், பெரும் புறக்கடலும் வானுலகமும் மலைகளும் எண்டிசைகளும் அண்ட அடுக்குகளும் ஆகிய எல்லாவிடங்களிலும் அக்கினிச்சுவாலைகளின் கற்றைகளை ஒருங்கே கக்குகிறது. அவைகள் பூமியிற் பரக்கின்றன; சமுத்திரங்களைச் சுற்றித் திசைகளிலும் ஆகாயத்திலும் சூழ்கின்றன; கைலாசமலை ஒன்றினைத் தவிர ஏனைய மலைகள் எல்லாவற்றிலும் செறிகின்றன; அண்டச் சுவரிலும் பற்றுகின்றன. இவ்வாறாக,

வேற்படைக்கலம் கோபத்தோடு சென்று சூரபன்மனுகிய மாமரத்தைச் சங்கரிக்கின்றது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்டதீயில் தோய்த்துமுன் னியற்றி அன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வாறு உருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

சூரபன்மன் தான் கொண்ட மாமர வடிவு அழிதலும் மனத்தில் கோபம் மிக, விரைந்து தன் பழைய வடிவங் கொண்டு உடைவாளை உறையினின்றும் கழற்றிப் போர் செய்ய எண்ணி ஆர்த்து எதிர்த்துச் சீறுகிருன். வேற் படை துள்ளிவருகிறது. அது விரைந்து சென்று அவ னுடைய மார்பைப் பிளந்து இருகூருக்கிச் சமுத்திரத்தில் வீழ்த்தி, வேதங்கள் எங்கும் கோஷிக்க வானுலகில் தேவர்கள் துதித்துச் சிந்துகின்ற பூமழைகளுக்கு இடையே சென்று, உக்கிர வடிவம் நீங்கி, அநுக்கிரக வடிவம் கொண்டு, தேவகங்கையில் மூழ்கித் தேவர் களுடைய துன்பத்தை நீக்கியருளிய முருகப் பெருமா னுடைய திருக்கரத்தில் வந்து வீற்றிருக்கின்றது.

செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன்று உருமின் ஆர்த்துத்
துங்கமொடு எதிர்ந்து சீறும் சூர்உரம் கிழித்துப் பின்னும்
அங்கமது இருகூருக்கி அலைகடல் வரைப்பில் வீட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப எஃகம்வான் போயிற் றம்மா.

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை இடையின் ஏகி
அங்கியின் வடிவம் நீங்கி அருள்உருக் கொண்டு வான்தோய்
கங்கையிற் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள்தம் பெருமான் செங்கை எய்திவீற் றிருந்த தவ்வேல்.

வேல், அடியவர்களை அணுகி அறக்கருணை தந்து காக் கும். ஏனையோரை அணுகி மறக்கருணை தந்து அவர்களுக்கு

வாழ்வு தரும். அடியவர்களை அணைத்துக் காக்கும்; ஏனையோரை அடித்துக் காக்கும். முன்னையது அறக்கருணை; பின்னையது மறக்கருணை. மாயையை அகற்றி மல இருள் கெடுக்கும் வேற்படை திருவருட்சக்தி வடிவானது. 'சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்' என்பது சித்தியார்.

வெல் என்ற பகுதி வேல் என்று நீண்டது. வெல்வது வேல். வேல் எல்லாவற்றையும் வெல்லவல்லது. ஆண்டவன் வேல் உருவத்திலே ஞானத்தை வைத்திருக்கின்றான். இதை விளக்கமாகச் சொன்னால், அறியாமையை அகற்றுகின்ற ஞானம் வேலின் உருவமாக முருகப்பெருமானின் திருக்கரத்திலே விளங்குகின்றது. அவன் ஞானசக்திதரன். உலகத்துக்குத் துன்பம் தருகின்ற அகங்கார மமகார வடிவமாக விளங்கும் அசுர கூட்டங்களை வேல் வென்று அறவே ஒழிக்கும். மனிதனுடைய அகங்காரம் மலைபோல நிமிர்ந்து நிற்கிறது. அகங்காரமாகிய மலையிலே மமகாரம் என்று சொல்லப்படும் கொடு முடிகள் பல இருக்கின்றன. இந்த மாபெரும் மலையையும் ஞானம் ஒன்றே வெல்லும்.

ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மூன்று மலங்களுடன் ஆன்மா உலகத்திலே பிறக்கிறது. மலத்தோடு சேர்ந்திருக்கும் ஆன்மா களிம்போடு சேர்ந்த தாமிரத்துக்கு ஒப்பானது. தாமிரத்தில் மாசு ஏறுவதனால் அது மங்குகிறது. தங்கத்தின் தன்மை தாமிரத்தில் இருக்கிறது. தங்கம் சிவபிரான்; தாமிரம் ஆன்மா. ஆன்மாவை இறைவனை அடையவிடாமல் தடுப்பது களிம்பாகிய மலம். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் சேர்ந்த களிம்பினால் ஆன்மா மூடப்பட்டிருக்கிறது. தாமிரம் தங்கமாக வேண்டுமானால் களிம்பாகிய மாசு அகலவேண்டும். ஆன்மாவின் மலத்தைப் போக்குவது ஞானம். ஞானத் தீயினால் மட்டுமே உயிரைப் பற்றிக் கொண்டிருக்கும் மல

மாகிய களிம்பு நீங்கும். அது நீங்கவே ஆன்மா இறைவனைச் சேரும்.

கருமருவு குகைஅனைய காயத்தின் நடுவுள்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக இருக்கநீ ஞானஅனல் மூட்டியே
கனிவுபெற உள்உருக்கிப்
பருவம தறிந்துநின் அருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்கம் ஆக்கியே பணிகொண்ட
பட்சத்தை என்சொல்லுகேன்.

என்று பாடுவார் தாயுமானவர்.

வேல் என்பது இறைவனது அறிவையும் மயில் என்பது அவ்வறிவுக்கு உட்பட்ட உயிரின் அறிவையும் குறிக்கும் என்றும் ஆன்றோர் வேலுக்கும் மயிலுக்கும் விளக்கம் கூறுவர்.

முருகன் கையிலே இருக்கும் ஞான வேலினால் அஞ்ஞான இருள் நீங்கி ஞான ஒளி பிரகாசிக்கும். ஆன்மாவுடன் ஒட்டிக் கொண்டு பிறவிக்குக் காரணமாக இருப்பது மலம் அல்லது பாசம். யான், எனது என்று கொள்ளும் அகங்கார மமகாரம் ஆணவம். புண்ணிய பாவ வினைகள் கன்மம். இறைவனை உணரவிடாது ஒன்றைப் பிறிதொன்றாக மயக்குவது மாயை. முருகன் கைவேலாம் ஞானவேல் எழுந்தால் மூன்று மலங்களுமே தம் ஆற்றல் இழந்து நிற்கும்.

வினை நம்மைப் பாசக்கட்டில் தள்ளிவிடுகிறது. பாசமும் விலங்கு; வினையும் விலங்கு. வினை விலங்கு ஒழிந்தால் தேகம் என்னும் சிறை நீங்கும். 'வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்' என்று பட்டினத்தார் பாடுவார்.

நாம் இந்த உலகத்திலே பிறக்கிறோம்; பின்னர் இறந்து மடிகிறோம். உடம்பு கொண்டு வாழ்வதும் பின்னர் மாண்டு மடிவதும் நம்முடைய விருப்புக்கு இயைய நிகழ்வன அல்ல; இறைவனே வினைக்கு ஏற்ப உடம்பைத் தருகிறான்.

'மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே'

என்பது திருவாசகம். தறுகட்பாசக் கள்ளவினை போனால் உடற்சிறை போகும். பிறவாத நிலை வந்து வாய்க்கும். பிறவாத நிலையே மோட்சம்.

இந்தப் பேரின்பப் பெருவாழ்வு முருகன் கைவேலினால் நமக்கு வாய்க்கும்.

'ஏழையின் இரட்டைவினை ஆயதோர் உடற்சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்'

என்று திருவகுப்பிலே பாடும் அருணகிரியார் வேலுக்கு ஏற்றம் தந்து,

'வினைஓட விடுங்கதிர் வேல்மறவேன்'

என்று அநுபூதியிலேயும் பாடுகிறார்.

ஆறுமுகன் சூரனை ஏறுமயிலாகக் கொண்டு அவனுடைய மாயாமலத்தைப் போக்கினான். சேவலைக் கொடியாக உயர்த்தி அவனது கன்ம மலத்தைக் களைந்தான். ஞான சத்தியாகிய வேலினால் சூரனைப் பற்றி இருந்த ஆணவமல ஆற்றலைக் கெடுத்தான். மும்மலங்களும் ஒழிந்தன. முதல்வன் திருவடியை எய்தினான் சூரன். நாமும் முருகனை நினைக்கப் புள்ளி மயில் நம்முன் துள்ளி வருகிறது. மயிலை நினைக்கச் சேவல் சிறகடித்துக் கொக்கறுகோ என்று கூவும் சத்தம் கேட்கிறது சிந்தனையிலே ஒருமைப்

பாடு தெரிகின்றது. ஞானசத்தியாம் வேல் உள்ளத்திலே ஒளிவிடுகின்றது. வேல் உண்டு வினை இல்லை; மயில் உண்டு பயம் இல்லை என்று உள்ளம் உரம் பெறுகின்றது.

'கோழிக் கொடியைநின் வேலை மயிலைக் குறித்தவரை
ஊழிக்கனலும் அணுகாது'

என்று சிதம்பரசுவாமிகள் சும்மா பாடுவாரா?

வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்.

(பாரதியார்)

துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்.

(கந்தபுராணம்)

---

# முருகா எனும் நாமங்கள்

## திருவடி :

முருகப்பெருமானுடைய பேரழகினைக் கண்ணுற் பருகிக் களிப்புறுகிறான் சூரன். திருவுருவப் பேரழகு முழுவதையும் கண்டு இன்புற்றாலும் நம்மை ஆட்கொள்ளும் புகலிடம் திருவடியே என்பதை அவன் சொல்லாமல் சொல்லி விடுகின்றான். அந்தக் கந்தபுராணப் பாடல் இதோ :

ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டோன் றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக் காற்றா தென்றிடின் இனைய தோல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

திருவடியே மோட்சம். 'பொக்கக் குடிலிற் புகுதாவகை புண்டரீகத்தினும் செக்கச் சிவந்த கழல் வீடு தந்தருள்' என்று அருணகிரியார் இதனைப் பாடுவார். ஆண்டவனுடைய திருவடி, ஞானமயமாக இருக்கும். ஞானமே மோட்ச இன்பத்தைப் பெறுதற்கு உரிய வழி. 'தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானம் எனும் தண்டையம் புண்டரிகம்' என்பது அலங்காரம். திருவடி என்பது ஒரு தத்துவம். எல்லாவற்றுக்கும் மூலமாக நிற்பது திருவடி; முடிபாக நிற்பதும் அதுவே. 'ஆதியாம் பாதமலர் அந்தமாம் செந்தளிர்கள்' என்று மணிவாசகர் ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியைப் பாடுவார்.

இறைவன் திருவடி இறை அருளாகிய சிவசத்தியைக் குறிக்கும். எனவே, திருவடி வாழ்த்துச் சத்தியையே வாழ்த்தியதாகும். 'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி' என்று திருவெம்பாவையின் முதற் பாடலிலேயே திருவடியை வாழ்த்திய மணிவாசகர் இருபதாவது பாடலிலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் இறை

வன் திருவடிகளே செய்கின்றன என்று குறிப்பாகச் சொல்லிவிடுகின்றார். 'போற்றி எல்லா உயிர்க்கும் தோற்ற மாம் பொற்பாதம்' என்று படைத்தலையும், 'போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்' என்று காத்தலையும், 'போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணை அடிகள்,' என்று அழித்தலையும், 'போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்,' என்று மறைத்தலையும், 'போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்' என்று ஈற்றடிக்கு முதலடியில் அருளலையும் பாடும் திறன் அற்புதம்! அற்புதம்!!

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறைஅணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகளும் திருவடிகளே உயிர்களுக்குப் போகமும் வீடும் அருளும் பேருண்மையைச் சொல்கின்றார். ஐந்தொழில்களினால் உயிர்களுக்குக் கன்ம பரிபாகமும் வினை நுகர்ச்சியும் மல பரிபாகமும் முத்தியும் வந்து சேரும்.

நம்முடைய தலை உத்தமாங்கம். அதனை இறைவனுடைய திருவடியோடு இணைத்துவிட்டால் நமக்கும் இறைவனுக்கும் தொடர்பு உண்டாகும். இறைவன் பரிபூரணன்; குறைவிலா நிறைவு; கோதிலா அமுது; ஈறிலாக் கொழுஞ் சுடர்க்குன்று. அவனுடைய திருவடியை நாம் பற்றிப் பிடித்தால் பின் கவலை ஏது?

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

என்று வள்ளுவர் திருக்குறளிலே திருவடிக்கு ஏற்றம் தருகிறார்.

உலக தத்துவங்கள் எல்லாவற்றுக்கும் மூலப் பொருளாக நிற்பது ஆண்டவன் திருவடி. 'நின்னிற் சிறந்த

நின் தாளிணையவை' என்பது பரிபாடல். என்றைக்கும் மாருத் துணையும் இறைவன் திருவடியே. இறைவன் திருவடி எங்கும் படர்ந்திருக்கின்றது.

'வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனநின்
பாதங்கள் இவைஎன்னில் படிவங்கள் எப்படியோ.

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடுவார். 'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்' என்று பாடுவார் மணிவாசகர். பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் தனக்கு மேல் வைத்துத் தான் கீழாக நின்று தாங்கும் திருவடி அல்லவா அது! ஆகவே, அப்பெருமானின் திருவடியையே நாம் துணை என்று நம்பி வாழவேண்டும். பிரபஞ்சச் சேற்றிலே அழுந்திய பொருள்களைக் கண்ட கண், முருகன் திருவடியைக் கண்டால் மட்டுமே நிறைவுபெறும். 'கண்ணிணை நின்திருப் பாதப் போதுக் காக்கி' என்பது மணிவாசகரின் திருவாசகம். சுருக்கமாகச் சொன்னல், விழிக்குத் துணைதிரு மென் மலர்ப் பாதங்கள்.

முருகன் திருவடி, திருநாமம், பன்னிரு தோள், வேல், மயில் என்பன நமக்குத் துணையாக வருகின்றன. மயில், கடப்பமாலை, வேல், சேவல், சிற்றடி, பன்னிருதோள் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் வைத்துத் திருப்புகழ் விருப்பமொடு செப்ப வேண்டும் என்று அருணகிரியாருக்கு வித்தக மருப்புடைய விக்கின விநாயகன் — ஐந்து கரத்தானைமுகப் பெருமான் சொன்னன். அந்தத் திருப்புகழ் திருப்புகழுக்கே காப்பாக அமைகின்றது. இதோ அந்தத் திருப்புகழ் :

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை இட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும் ;

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே;
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன்நெய்
எட்பொரிய வற்றுவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்;
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் அருளாழி!
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே!

நாமத்தின் பெருமை:

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லா ஆண்டவனுக்கு ஆயிரம் ஆயிரம் திருநாமங்கள்! அவனுக்கு எத்தனை எத்தனை திருவுருவங்கள்! பக்தன் தன்னுடைய உபாசனாமூர்த்தியாக ஏதேனும் ஒரு வடிவத்தைத் தெரிந்து கொள்கின்றான். அந்த மூர்த்திக்கு அமைந்த பெயரே அந்தப் பக்தனுக்குச் செபிப்பதற்குரிய மந்திரமும் ஆகி அமைகின்றது. நாமத்தின் பெருமையை அருளாளர்கள் அழுத்தமாகச் சொல்லி இருக்கிறார்கள். தொண்டரடிப் பொடியாழ்வார்,

காவலில் புலனை வைத்துக் கலிதனைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு உழிதரு கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுல குண்டு உமிழ்ந்த முதல்வநின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டாய் அரங்கமா நகரு ளானே.

என அரங்கமாநகர்ப் பெருமானைப் பாடுகிறார்.

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுய ராயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநில
மளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராய
ணஎன்னும் நாமம்.

என்று ஏத்திப் பாடுகிறார் திருமங்கை ஆழ்வார்.

பஞ்சாட்சர மந்திரம் செந்தமிழ்ச் சைவப் பெருமக்களுக்கு ஒரு நன்மருந்து 'நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்' என்று தித்திக்கும் திருவாசகம் திருவைந்தெழுத்தினை உணர்வின்கண் உறுத்துகின்றது.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

என ஞானசம்பந்தப் பெருமான் பாடினால்,

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

என்று பாடுவார் அப்பர் பெருமான்.

திருநல்லூர்ப் பெருமணச் சோதியிலே கலக்கும்போது ஞானசம்பந்தர் நமச்சிவாயப் பதிகம் பாடினார். பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அப்பரைக் கல்லிலே கட்டிக் கடலிலே விட்டபோது அப்பர் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார். ஆதிசீர் பரவும் வாதவூர்ப் பெருமான் திரு வாசகத்தையே 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' என்று ஆரம்பித்துவிடுகிறார். சுந்தரர் நமச்சிவாயத்தின் பெருமையை இன்னொரு பாணியிலே பாடுகிறார்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந்
தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே.

'நான் மறந்தாலும் நமச்சிவாய என்று சொல்வதை நா மறக்கமாட்டாது' என்று சொல்லித்தருகிறார்.

## திருக்கோயிலில் சபதம்

வன்தொண்டர் சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரிலே தடுத்தாட்கொள்ளப்படுகின்றார். திருவாரூருக்குச் சென்று பரவையாரை மணக்கின்றார். திருவொற்றியூருக்கு வரு கின்றார். சங்கிலியைக் காண்கின்றார். காதல் கனிந்து ஓடுகிறது. கருமமே கண்ணாக இருக்கும் சுந்தரர், சங்கிலி யைத் தரவேண்டும் என்று இறைவனையே கேட்கிறார். ஒருபோதும் பிரியேன் என்று சபதம் செய்தால் திரு மணம் செய்யலாம் என்று நிபந்தனை போடுகிறாள் சங்கிலி. திடுக்கிடுகிறார் சுந்தரர். சபதத்தைக் காப்பாற்ற முடியாது என்று எண்ணிய சுந்தரர் சங்கிலியை ஏமாற்றப் பார்க் கிறார். ஆண்டவனை நோக்கி, 'அப்பனே, நான் சபதம் செய்ய நின்திருமுன்னர் வரும்போது கோயிலைவிட்டு நீங்கி, திருமகிழின்கீழ் இருந்தருள வேண்டும்' என்று பிரார்த்திக்கிறார் சுந்தரர். ஆண்டவனும் குறும்புத்தனம்

பண்ணப் பார்க்கிருன். சங்கிலியிடம் கனவிலே சென்று, 'சுந்தரன் சபதம் செய்ய உன்னை அழைப்பான். திருக்கோயிலில் சபதம் செய்தல் தகாது; மகிழ மரத்தின் அடியில் சபதம் செய்து தரும்படி அவனிடம் கேள்' என்று திருவாய் மலர்ந்து மறைகின்ருன் ஆண்டவன்.

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ரும்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
மேவாதிங் கியான்அகலேன் எனநின்று விளம்பிஞர்
பூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப் புரவலனுர்.

மறுநாட் காலை மூவாத திருமகிழை முக்காலும் வலம் வந்து சபதம் செய்கின்ருர் சுந்தரர். திருமணம் இனிதே நிகழ்கின்றது. வாழ்வு வளமாக நடக்கிறது. நாள்கள் பல ஓடி மறைகின்றன. திருவாரூருக்குச் செல்லப் புறப்படுகின்ருர் சுந்தரர். சபதம் தவறுகின்றது. கண்கள் மறைகின்றன. திகைக்கிருர் சுந்தரர். திருப்பாட்டு வருகின்றது.

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப ணுகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

'வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்று நானறியேன் மறுமாற்றம்' என்று சுந்தரர் பாடித் திருநாமத்தின் ஏற்றத்தைச் சொல்லிவிடுகிருர்.

## முருக நாமம்

பஞ்சாட்சர மந்திரம் போலப் பெரும் பெயர் முருகன் நாமமும் மிக மிகச் சிறந்தது. இளமை உடையவன்,

அழகு உடையவன், மணம் உடையவன், தெய்வத் தன்மை உடையவன் முருகன். அழகும், இளமையும், மணமும், தெய்வத்தன்மையும் நிரம்பிய திருவுருவம் ஆறு திருமுகங்களுடனும் பன்னிரண்டு திருக்கரங்களுடனும் பொலிந்து விளங்குகின்றது. 'பண்டைத்தன் மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி' என்று திருமுருகாற்றுப் படை இதைச் சிறப்பிக்கும். அந்த ஈராறு கையழகனின் இசைவான நாமங்கள் பலவாக இருந்தாலும் அவற்றுள் மிகச் சிறந்தது முருகா என்னும் திருநாமம்.

'முருகா எனவோர் தரம்ஓ தடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே'

என்று அருணகிரியார் திருப்புகழிலே இதனைப் போற்றிப் பாடுகிறார்.

முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார் வியாதி அடைந்துநையார்
ஒருகா லமும்துன்பம் எய்தார் பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார்சம ராபுரிப் புண்ணியனே.

என்று திருப்போரூர்ச் சந்நிதிமுறையிலே சிதம்பர சுவாமிகளும் பாடி மகிழ்ந்திருக்கின்றார். 'முருகொத் தீயே முன்னியது முடித்தலின்' என்று புறநானூற்றுப் பாடல் முருகனை உவமை சொல்லி வாழ்த்துகின்றது. முருகா என்ற பெரும்பெயர் மந்திரத்தினால் மரணத் துன்பத்தையே வெல்லலாம். நம்முடைய காவற் தெய்வமே முருகன்.

அஞ்சுமுகம் தோன்றின் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன்று ஓதுவார் முன்.

அஞ்சுமுகம் தோன்றும் போதெல்லாம் ஆறுமுகன் தோன்றுவான்!

ஊழ்வினையின் உறைப்பு

முருகன் துணை நின்ருல் வினை நம்மைத் தாக்கி நலிவு செய்யமாட்டாது. கம்பளம் போர்த்தவர்களைக் கடுங்குளிர் தாக்காது. அது போலத் திருவெண்ணீற்றுக் கவசம் அணிந்தாரை மாயைச் செயல்கள் தாக்கமாட்டாது என்ற பேருண்மையை ஞானசம்பந்தர்,

நீர்கோள் நீள்சடை முடியனை நித்திலத்
தொத்தினை நிகரில்லாப்
பார்கோள் பாரிடத் தவர்தொழும் பவளத்தைப்
பசும்பொனை விசும்பாரும்
கார்கோள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையும்கற் பகம்தன்னைச்
சீர்கோள் செல்வங்கள் ஏத்தவல் லார்வினை
தேய்வது திண்ணமே.

என்று பாடுகின்ருர்.

வந்தித்திருக்கும் அடியார்தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவம் தீர்க்கும் பரமன் உறைகோயில்
முந்திஎழுந்த முழவின் ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறைவந் தணையும்சாரல் அண்ணுமலையாரே.

என அண்ணுமலையாரைப் பாடித் திருவருள் வினை போக்கும் செம்மையையும் சொல்கின்ருர் ஞானசம்பந்தப் பெருமான்.

பிராரத்த வினையை அழிக்கமுடியாது; அனுபவித்தே ஆகவேண்டும்.

ஊழிற் பெருவலி யாஉள மற்ருென்று
சூழினும் தான்முந் துறும்.

என்று வள்ளுவர் ஊழின் வலியை ஆணித்தரமாகச் சொல்கின்றார். திருவருள் துணை நின்றால் ஊழ்வினையின் உறைப்பை நிச்சயமாக மாற்றிக் கொள்ளமுடியும். முருகப் பெருமானுடைய பன்னிரு தோள்களும் நமக்குத் துணையாக நின்றால் வினைதான் என்ன செய்யும்?

*பயந்த தனிவழி*

மரணபயம் அரசனுக்கும் உண்டு; ஆண்டிக்கும் உண்டு. மரணம் நிச்சயமாக வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், மரணத்தை வெல்ல எல்லோரும் தகுந்த பாதுகாப்பைத் தேடிக்கொள்வது இல்லை. மரணம் வஸ்தை வரும் என்று அறிந்தும் பாதுகாப்பைத் தேடாதிருப்பது அறிவுடைமை ஆகாது. பாதுகாப்பு இறைவன் திருவருளே. இதை அறிந்தவர்கள் மரணத் துன்பத்திற்கு அஞ்சவேண்டியதில்லை.

'சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும்எனலால்
சகமீ திருந்தாலும் மரணம்உண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை'

என்று தாயுமானவர் பாடுவார்.

மரணம் இன்ன காலத்தில்தான் வரும் என்று சொல்ல முடியாது. எந்தச் சமயத்திலும் அது வரும் என்பதை உணர்ந்து தகுந்த பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவேண்டும். மரணம் வரும்போது எவருடைய துணையும் நமக்குப் பயன்படாது. நாம் செல்லும் வழி பயந்த தனி வழி.

மைவரும் கண்டத்தர் மைந்தகந் தாஎன்று வாழ்த்தும்இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே.

இவ்வாறு அடைக்கலம் புகுந்தால் அந்தப் பயந்த தனி வழியிலே வருகின்ற துன்பங்கள் நம்மைச் சாராமல் காத்தருள்வான் முருகன். வடிவேலும் மயிலும் துணையாக நிற்கும் போது பயந்த தனி வழியிலே பயம் எப்படி உண்டாகும்? பின் உள்ள வாழ்க்கைக்கும் வடிவேலும் மயிலும் துணையாக வரும்.

'தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிக ராகும்'

இது வேல் வகுப்பு. சிவபெருமான் திருவடி மார்க்கண்டேயருக்காக எவ்வாறு யமனை உதைத்துக் காத்ததோ அவ்வாறே முருகனுடைய வேல் மரண காலத்தில் முன்னின்று உதவும் என்று வேல் வகுப்புப் பாடுவது நமக்கு நல்ல நம்பிக்கையை ஊட்டுகிறது.

## பெரியாரைத் துணைக்கொள்

'துணையோடு அல்லது நெடுவழி போகேல்' என்பது அதிவீரராமபாண்டியரின் அருமருந்தன்ன உபதேசம். ஆன்மா உடம்பில் ஆரோகணித்துப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கின்றது. இந்தப் பிரயாணம் நமக்குச் சுகமாகக் கழிய வேண்டும் என்பது எல்லோரினதும் பெரிய விருப்பம். பிரயாணம் நெடுவழியாக இருப்பதால் பெரியாரைத் துணைக்கொள் என்ற அறிவுரையை மனத்திற் கொண்டு, பெரியவர்களுக்கு எல்லாம் பெரியவனை முருகப் பெருமானை நாம் துணையாகக் கொள்ள வேண்டும். அந்தப் பெருந்துணை நமக்குக் கிடைத்து விட்டால் அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் என்பது இல்லையே!

அப்பர் பாடுவார்:

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்

பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
போதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

முருகன் நமக்கு அருந்துணை, வருந்துணை, பெருந் துணை.

இந்தப் பொருள்கள் எல்லாம் பொதிந்த ஒரு பாடல் கந்தர் அலங்காரத்திலே இருக்கின்றது. பாடல் இதுதான்:

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

இதை நாள்தோறும் படிக்க வேண்டும்; பாராயண மும் செய்ய வேண்டும்.

முருகா என்பது ஒருமை. நாமங்கள் என்பது பன்மை. முருகா எனும் நாமம் என்று வந்தால்தானே இலக்கண அமைதி தோன்றும் என்ற வினா எழலாம். ஞானம்தான் உருவாகிய நாயகன்மேல் பதினாறாயிரம் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதருக்கு இந்த இலக்கணம் தெரியாமலா போய்விட்டது? முருகா என்பது எல்லா நாமங்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவது. அந்நாமம் வாழ்விலே வளம்தந்து முத்திச் செல்வத்தையும் அடியார்களுக்கு வழங்கும். அப்பெரும்பெயர் பொருளாலும் சுவையாலும் பயனாலும் மிகமிகப் பெரிது. அதனால்தான் அது சொல்லால் ஒன்றாக நின்றாலும் அதைத் திருநாமங்கள் என்று சொல்கின்றார் அருணகிரிப் பரமகுருநாதன்!

# மங்காத அழகன்; மாருத அழகன்

அழகுக்கு அடிமையாகாதவர் எவரும் இல்லை என்றே சொல்லிவிடலாம். பெண்ணழகில் மயங்கும்போது ஒருவனுடைய உள்ளத்தில் இருக்கின்ற உறுதிப்பாடு ஒழிகின்றது; ஆண்மை மறைகின்றது; தகுதி போகின்றது. உயிர்ப்புச் சத்தியையே தன்பால் இழுத்துக்கொண்டு பெண்மை ஆடவனைச் செயலற்றவனாக்கி விடுகின்றது. உண்மைக் காதல் எழுந்தால் மட்டும் ஆடவனும் பெண்ணழகியும் ஈருடலுள் ஓருயிராகிவிடுகிருர்கள்.

இராமர் மிதிலைக்கு வருகின்ருர். சீதை சாளரத்திலிருந்து கீழே பார்க்கின்ருள். இராமனும் சீதையைப் பார்க்கின்ருன்.

எண்ணரு நலத்தினுள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றைஒன்று
உண்ணவும் நிலைபெருது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்.

பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினுர்.

மருங்கிலா நங்கையும் வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டுஉடற்கு உயிர்ஒன்று ஆயினுர்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினுல் பேசல் வேண்டுமோ.

சீதையும் இராமனும் காதல் கொண்ட கதை இவ்வாறு வளர்ந்துகொண்டு போகின்றது. அங்கே ஓர்

உண்மை மறைந்து இருக்கின்றது. 'பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ' என்று கம்பர் சொல்வதிலிருந்து விதி என்ற ஒன்று கூட்டி வைக்கின்றது என்பது தெளிவாகின்றதல்லவா ?

விதி விளையாடுகின்றபோது அழகுக்கு வலிமையே இல்லாது போய்விடுவதையும் நாம் பார்க்கிறோம். ஒருவருக்கு அழகுடையதாகத் தெரிவது மற்றவர்களுக்கும் அழகானதாகத் தெரியும் என்று சொல்ல முடியாது. அழகை அள்ளிப்பருகும் ஆற்றலில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் இல்லை. காதலின் முதற்படியிலே கால்வைத்த கட்டழகன் காதல் கொண்ட கன்னியைக் கண்டவுடன் இது வரை பார்த்த மகளிர் யாவரிலும் இவள் மேம்பட்டவள் என்று எண்ணுகிறான்; தெய்வமகளோ என்று மயங்குகிறான்.

உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம்வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையா நாட்டம் பெற்றிலம் என்றார் இருகண்ணால்
அமையாது என்றார் அந்தர வானத் தவர்எல்லாம்.

என்று கம்பனே பாடினான் என்றால், அது கற்பனை என்றா சொல்லத் தோன்றுகிறது ?

கடவுளுடைய கருணைக்குக் காவல் கிடக்கும் பித்தனை பக்தன், அழகின் இரசனையில் உலகை மறந்து தன்னை மறந்து ஆழ்ந்து நிற்கும் கலைஞன், காதலில் மயங்கும் கட்டழகன் ஆகிய முத்திறத்தவரும் பித்துப் பிடித்தவர்களே. பித்திலேதான் எத்தனை எத்தனை விதம்!

### கல்வி அழகு

அழகு இரசிக்க வேண்டிய பொருள்தான். ஆனால் அந்த அழகு என்றுமே நிலையுள்ளதாக இருக்கின்றதா என்பதுதான் நம்முன் நிற்கும் வினா.

வளமையும்மாறி இளமையும்மாறி
வன்பல்விழுந்துஇரு கண்கள்இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதம்அடைந்து
செங்கையினிலோர் தடியுமாகியே
வருவதுபோவது ஒருமுதுகூனும்
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும்அழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமல்மொழிந்து
துயில்வருநேரம் இருமல்பொருது
தொண்டையும்நெஞ்சும் உலர்ந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும்அழிந்து ........................

— உடற்கூற்று வண்ணம்.

தோந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்
தொண்டு கிழவன் இவனு ரேனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியும் அதிலே மிடையுமொரு
பண்டி தனுமே யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி

— திருப்புகழ்.

வாழ்வு குலைகின்றபோது பழைய கால நினைவுகள் வராமல் இருக்க முடியுமா? அழகு அழகு என்று கருதினேமே! அவை எல்லாம் எவ்வளவு மடமையான எண்ணம் என்ற கழிவிரக்கமும் வரலாம். எல்லாம் கனவாகிக் கற்பனையாகிப் பழங்கதையாய்ப் போய்விடும். முன் நடந்த

சில நிகழ்ச்சிகளை ஒருவன் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து சிந்திப்பானாகில் தன்னை விட அறிவிலி உலகத்திலே வேறு யார் இருக்க முடியும் என்ற முடிவுக்கும் வரலாம். உண்மையைச் சொல்லப்போனால், வாலிபத்தின் பிடியிலிருந்து தப்புவது அரிது. ஒழுக்கத்துக்கு இழுக்கு வாராது வாழ்தலே உயர்வுடையது. அழகுக்கு அடிமையாகி வாழ்வு இழந்தவர்களின், வழுக்கி விழுந்தவர்களின், வஞ்சிக்கப்பட்டவர்களின் கதியை நினைத்தால் அழகு என்ற சொல்லே வேண்டாம் என்ற முடிவும் தோன்றலாம்.

உண்மையான அழகு உலகத்திலே இல்லையா? இருக்கிறது.

> குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
> நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
> கல்வி அழகே அழகு.
>
> — நாலடியார்.

மயிர் முடியின் அழகும் மடிப்புள்ள ஆடையினது கரையின் அழகும், கலவைப் பூச்சின் அழகும் அழகாக மாட்டா?

> இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
> நடைவனப்பும் நாணின் வனப்பும் — புடைசால்
> கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
> எழுத்தின் வனப்பே வனப்பு.
>
> — ஏலாதி.

இடையின் அழகும், தோள்களின் அழகும், செல்வத்தின் அழகும், நடையின் அழகும், நாணுடைமையினால் வரும் அழகும், கழுத்தின் அழகும் உண்மை அழகாக மாட்டா. கல்வி அழகே உண்மை அழகாம் என்று

நாலடியாரும், ஏலாதியும் பாடுவதில் பெரும்பொருள் மறைந்து இருக்கின்றது.

முருகன் பேரெழில்

சூரபன்மன் பெருந்தவம் இயற்றி அண்டங்கள் பல வற்றையும் ஆளும் வரம் பெறுகிருன்; வானவரை வன் சிறையில் வைக்கின்ருன்.

மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்
செய்யாத ஏவலெலாம் செய்தோம் நெறிநீதி
எய்யாத மானம் இவைஎல்லாம் தான்இழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே.

இவ்வாறு தேவர்கள் புலம்பும் அளவுக்குச் சூரன் ஆட்சி சொல்லொணுத் துயர் விளைவிக்கின்றது. அறத் தினை நிலை நிறுத்தி அரக்கர்கோனையும் அவுணர் படையை யும் சங்காரம் செய்ய முருகன் எழுந்தருளுகின்ருன். "அண்டங்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் கரந் தும் விளையாடும் பரமனே பாலகுகி அறுமுகக் கோலம் கொண்டான். வானவரை வன்சிறையினின்றும் விட்டு விடுக; அறுமுகச் செவ்வேள் அடிபணிந்து வாழ்வாயாக" என்று நெறி தவறிய சூரனுக்கு வீரவாகுதேவர் எடுத் துரைக்கின்ருர். சிங்கமுகனும் அண்ணனுக்கு அறிவுரை யைச் சொல்கின்ருன் அச்செம்மொழிகளைச் சூரன் செவியில் ஏற்ருன் அல்லன். அறப்படைக்கும் மறப்படைக்கும் போர் எழுகின்றது. சிங்கமுகன் முதலான தம்பியரும் பானு கோபன் முதலான மைந்தர்களும் மாண்டு மடிகின்ருர்கள். 'நம்முடைய பலம் எல்லாம் பலம் அன்று; இறைவ னுடைய திருவருள் ஒன்றே உறுதியானது' என்ப தைச் சூரனுக்கு உணர்த்தவேண்டி முருகன் திருவுளம் கொள்கின்ருன். அழகு சொட்டும் மிகப் பெரிய திருவுரு வத்தை எடுத்துத் தன் பேரெழிலைக் காட்டுகின்ருன்; நல்லறிவையும் கொடுக்கின்ருன் முருகன். நிமிர்ந்து பார்க் கின்ருன் சூரன்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி
லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றே.

என்று எண்ணி வியப்பு அடைகிறான் சூரன். முருகனுடைய பேரெழிலை அள்ளிப் பருகுகிறான்.

ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டோன் றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக் காற்றா தென்றிடின் இனைய தோல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

சூரபன்மன் அப்படியே மயங்கி நிற்கிறான். முருகப் பெருமானுடைய திருவுருவ அழகிலே முற்றிலும் ஈடுபட்டு நின்ற சூரன், "உலகம் மன்மதனைப் பேரழகன் என்று சொல்கிறது; அந்த மன்மதன் எம்பிரானுக்கு ஈடாகானே. இவனுடைய திருவடியின் பேரழகுக்கு ஆயிரகோடி மன்மதர் அழகு சேர்ந்தாலும் ஒப்பாகாது ஒதுங்கிவிடும் என்று சொல்லப்படுமாயின், இச்சிவகுமாரன் கொண்ட இத் திருப்பெருவடிவத்துக்கு யார்தான் உவமையை வகுக்க வல்லார்?" என்று வியப்படைகிறான்.

சூரன் முருகனை முன்னே நின்று பார்க்கிறான்; பின்னே நின்று பார்க்கிறான்; மேலே அண்ணாந்து பார்க்கிறான்; கீழே குனிந்து பார்க்கிறான்; காலத்தினாலும் இடத்தினாலும் எல்லைகட்டி அறிய முடியாத அழகு என்று உணர்கிறான். வியப்பு மேலிடுகின்றது.

அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினால் அடங்கா துன்னிற் கருத்தினால் அடங்கா
தென்பால்
நண்ணினன் அமருக் கென்கை அருளென நாட்டலாமே.

முருகப்பெருமானுடைய திருக்கோலப் பேரெழிலைக் காண்பதற்கு மாபாவியாகிய தனக்கும் பாக்கியம் கிடைத்ததே என்று எம்பிரான் திருவருளை எண்ணி எண்ணி ஆச்சரியப்படுகிருன் சூரன்.

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன புவன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவம் கண்டேன் நற்றவப் பயனீ தன்றே

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

மானம் தலைகாட்டுகிறது. நல்லறிவு மறைகிறது. முருகனை நெஞ்சாரத் தொழுதிடவேண்டும் என்ற நினைவிலே நின்ற சூரன் மீண்டும் போர் செய்ய முடிவு கட்டுகிருன்.

ஒன்றேரு முதல்வ ஞகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சுஇனித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றும்இப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப துண்டோ.

'என்றும் இப்புகழே நிற்கும்; இவ்வுடல் நிற்ப துண்டோ!' என்று பேசிய சூரன் ஈற்றிலே செவ்வேளுடன் வாழும் பேற்றையே பெற்றுவிடுகிருன். பகைவனும் சூரனே முருகப்பெருமானுடைய திருப்பெருவடிவத்தின் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் அற்புதத்தோடு பலகால் பார்க்கிலும் தெவிட்டா என்று சொல்கிருனே! இதைவிட நாம் சொல்ல என்ன இருக்கின்றது?

முருகப் பெருமானுக்குப் பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபர சுவாமிகள் பாடல் ஒன்றை இங்கே நாம் படிக்காமல் இருக்கமுடியாது.

வடிவின் அழகும் எழுத அரிய புயமும் நறிய செச்சையும்
மருமம் விரவு குரவும் அரையின் மணியும் அணிகோள் கச்சையும்
கடவும் மயிலும் அயிலும் ஒழுகு கருணை வதன பற்பமும்
கமல விழியும் விழியும் மனமும் எழுதி எழுதி நித்தலும்
அடிகள் எனவுன் அடிகள் பணியும் அடியரலது மற்றும்வேறு
அமரர் குழுவும் அகில மறையும் அரியும் அயனும் முற்றும்நின்
முடியும் அடியும் உணர அரிய முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பருதி புரியின் முருக தருக முத்தமே

*முருகன் அழகுக்குத்தான் எல்லையேது!*

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான்முகனே.

— கந்தர் அலங்காரம்.

பிரமதேவன் நாலாயிரம் கண் படைக்கவில்லையே என்று அருணகிரியார் பாடுவதில் எவ்வளவு கருத்துப் பொதிந்து இருக்கிறது! மிதிலைமா நகரின் வீதியிலே செல்கின்ற பேரழகனாகிய இராமபிரானுடைய கட்டழகைக் காணக் கண்ணாயிரம் வேண்டும் என்று கருதினாள் ஒரு மங்கை நல்லாள். 'நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்' என்று இக்காட்சியைக் கம்பன் பாடுகிறான் என்றால், முருகன் பேரெழிலைக் காண நாலாயிரம் கண் வேண்டும் என்று அருணகிரிநாதர் பாடுவதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

*நூலறிவு வாலறிவு*

எந்த அழகும் முருகன் பேரழகுக்கு முன் நிற்க முடியாது. உண்மையான உறுதியான மங்காத மாறாத அழகு

இறைவன் திருக்கோல அழகுதான். அழகு அழகு என்று சொல்லி நாம் பேசுவதெல்லாம் ஒருகால் அழகாகத் தோன்றி நம்மை நிலைகுலையச் செய்து நெறியல்லா நெறியில் தள்ளிவிடவும் கூடும். எம்பிரான் முருகன் ஒருவனே என்றும் மங்காத அழகு உடையவன். மாறாத இளமையும் உடையவன் என்ற பேருண்மையை நெஞ்சிலே நாம் கொள்ள வேண்டும்.

நாலடியாரும் ஏலாதியும் கல்வி அழகே அழகு என்று பாடுவதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கற்பதனால் அறிவு வளரும். படிக்கப் படிக்க அறிவு ஊறிவரும். கற்றதன் பயன் அறிவு பெறுதல். அறிவின் பயன் ஆண்டவனைத் தொழுதல். நூலறிவு பெற்றதன் பயன் வாலறிவு பெறுதல்தானே! நூலறிவின் முடிவிலே வாலறிவு தொடங்கும். வாலறிவு வாய்க்கப் பெற்றவன் பிறவிப் பெருங்கடலை நீந்துவான். கற்ற அளவிலே எல்லாம் பெற்று விட்டதாக எண்ணி விடக்கூடாது. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற வள்ளுவர் வாக்கு சிந்திக்கவேண்டியது. நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை அறிய அறியப் பின்னும் அறியாதவை பல உள என்ற உணர்வு மிகும்.

கல்வி அழகு வாய்க்கப் பெற்றால் இறைவன் திருக்கோல அழகு தெரியும். திருக்கோல அழகு தெரிந்தால் இறைவன் திருக்குறிப்புத் தெரிய வரும். திருக்குறிப்புத் தெரிந்தால் வினை மூட்டை விலகும். வினை மூட்டை விலகினால் திருவடிப்பேறு வாய்க்கும்.

அழகெல்லாம் திருமுருகன் அழகாகுமா என்று சிந்தித்து வாழ்ந்தால் ஏனைய அழகுகள் அழகாகத் தெரிய மாட்டா; அருவருப்பாகவும் தெரியலாம். முருகன் ஒருவனே மங்காத அழகன்; மாறாத அழகன்.

---

# பேசா அநுபூதி

## மனக்கோயில்

நம்முடைய சமய உண்மை அநுபூதியை அடிப்படை யாகக் கொண்டே அமைந்தது. கடவுள் இருக்கிருர் என்ருல் நாம் அவரைக் காணவேண்டும். காணமுடியுமா என்பதுதான் நம்முன் நிற்கும் வினு. பொறி அடங்க புலன் அடங்க, உணர்வு அடங்க, புவனம் எல்லாம் மறைந்து அடங்க, பேதம் காணும் நெறி அடங்க, நிலை அடங்க, நிலையில் விஞ்சி நெகிழுகின்ற மனம் அடங்க, கலை அடங்க, குறி அடங்க, குணம் அடங்க, கோது அடங்க, கொள்கை எல்லாம் நனி அடங்க நிற்பவர்கள் அநுபூதி நிலையில் கடவுளைக் காண்பார்கள்.

பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளிக் கொடுத் துக் கோயில்களை எழுப்பினுர்கள் பெருமக்கள். ஆனுல் ஒரு பக்தன் பொன்னும் பொருளும் இல்லாமலே கோயில் எழுப்பியிருக்கிருர். திருநின்ற ஊரிலே பூசலார் நாயனுர் வாழ்கிருர். காஞ்சியிலே இராஜசிம்ஹன் என்னும் பல்லவ மன்னன் செங்கோல் செலுத்துகின்ருன். தன் வாழ்நாளில் கைலாசநாதப் பெருமானுக்கு ஒரு கோயில் கட்டிவிட வேண்டும் என்பது அவனது அயரா ஆசை. ஆசை வளர்கிறது. கோயில் உருவாவதற்குக் குறையேது? அவன் மாநிலம் புரக்கும் மன்னவன் அல்லவா? இராஜ சிம்ஹன் கோயில் கட்டுவதைப் பூசலார் அறிகிருர். அவர் பரம ஏழை. அன்ருட வாழ்க்கைக்கே தட்டுப்பாடு இருந்தும் ஒரு கோயில் கட்டவேண்டும் என்ற ஆசை அவருக்கும் எழுகின்றது. பணத்துக்கு எங்கே போவது? தன் உள்ளத்துள்ளேயே ஒரு கோயிலை ஆண்டவன் உறைதற்கு அமைத்துவிடலாம் என்று முடிவு கட்டுகிருர். அரசன் கட்டும் கோயில் ஆரம்பமாகிவிட்டது. அர்த்த மண்டபம், கர்ப்பக்கிருகம் எல்லாம் நிர்மாணமாகின் றன. மதில் எழுகின்றது, மகாமண்டபம் உருவா

கின்றது. பூசலாரும் சளைக்கவில்லை. அவர் உள்ளத்துள்ளேயே கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், மதில் எல்லாவற்றையுமே கட்டி எழுப்பி விடுகிறார் ஒரு செலவும் இல்லாமல்! அரசன் மூர்த்தியைப் பிரதிட்டை செய்ய நல்லநாள் ஒன்றினைக் குறிக்கின்றான். பூசலாரும் தன் உள்ளக் கமலத்தில் உருவாகிய கோயிலில் அதே முகூர்த்தத்தையே இறைவன் பிரதிட்டைக்காகக் குறித்துவிடுகிறார். அன்றிரவு மன்னனுக்குக் கனவிலே சென்று கைலாசநாதர் சொல்கிறார் :

> நின்றஊர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
> நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீஇங்(கு)
> ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய் என்று
> கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்
> டருளப் போந்தார்.

'அரசனே, நின்றவூரில் இருக்கின்ற பூசலார் என்ற பக்தன் நமக்கு ஒரு கோயில் கட்டியிருக்கின்றான். அங்கே நாளை நாம் புகுவோம். ஆதலால் உன் கோயில் பிரதிட்டையை இன்னொரு நாளுக்கு மாற்றி வைத்துக்கொள்' என்று கூறி இறைவன் மறைந்துவிடுகிறான். மன்னனுக்கு மாபெரும் ஏமாற்றம். புறப்படுகின்றான்; எதிர்ப்பட்டோர் எல்லோரையும் பூசலார் கட்டிய கோயிலைப் பற்றிக் கேட்கின்றான். ஒருவராலும் பதில் கூறமுடியவில்லை. திருநின்ற ஊரையே நோக்கிப் புறப்படுகின்றான் மன்னன். மக்களும் மன்னனைப் பின்தொடர்கின்றார்கள். அடுத்த நாள் உதயத்தின்போது திருநின்ற ஊரை எல்லோரும் சென்று அடைகின்றார்கள். பிரதிட்டைக்கான ஆயத்தங்கள் எதுவும் அங்கே இல்லை. ஊரிலே விசாரிக்கின்றார்கள். 'பூசலாரா? அவராவது கோயில் கட்டுவதாவது' என்று ஏளனமாகப் பதில் சொல்கின்றார்கள். 'ஊருக்கு மேற்கே இருக்கின்ற குளக்கரையில் பூசலார் உட்கார்ந்திருப்பார். அங்கே சென்று கேட்கலாமே' என்று ஒருவர் வழிப்படுத்துகின்றார் எல்லோரும் விரைந்து செல்

கின்றார்கள். பூசலாரைக் காண்கின்றார்கள். 'சுவாமீ, நீர் கட்டிய கோயில் எங்கே?' என்று கேட்கின்றான் மன்னன்.

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
'என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய்
தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம்' என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

விவரம் கேட்டபோது விளக்கமாகச் சொல்கின்றார் பூசலார். மூர்த்தி எழுந்தருளிய விதத்தையும் முடிவாகச் சொல்லிவிடுகின்றார். அரசன் வியப்புறுகின்றான். தான் கண்ட கனவை விளக்கமாக எடுத்து உரைக்கிறான். "தங்களுடைய மனக்கோயிலே பெரிது, பெரிது" என்று புகழ்ந்து வணங்கி விடைபெறுகின்றான். இறைவன் பேரன்பை நினைந்து உருகுகிறார் பூசலார். மாசிலாப் பூசலார் மனத்தினால் நினைந்த கோயில் பெரிதுதானே! மன்னவன் தன் செல்வம் கொண்டு அகங்காரத்தின் ஆணிவேரின்மேல் கோயில் எழுப்பினான். அன்பர் பூசலார் ஆணித்தரமான அன்பிலே ஆலயம் கண்டார். அன்பெனும் பிடியில் அகப்படும் மலைதானே இறைவன்.

*அகந்தைக் கிழங்கு*

அடியவர்கள் இறைவன் பணியே தம்பணி எனக் கொண்டு வாழ்வார்கள். இந்திரனுடைய தருக்கினையும் இந்திரபோகத்தையும் மெய்யடியார்கள் அருவருத்து ஒதுக்குவார்கள் என்ற பொருள்படத் திருவிளையாடற் புராணத்தில் வரும் நல்லதொரு பாடல் இதோ:

புள்ளியதோல் ஆடை புனைந்தரவப் பூண்அணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையார் அருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினாய் என்செய்தாய்.

இதை நாம் உணர்வதில்லை. செல்வம் பணிவைத் தரவேண்டும். ஆனால், அது தருவது அகந்தை.

எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

என்று வள்ளுவர் திறம்படச் சொல்லுவார்.

அருட் செல்வம் பெறவேண்டுமானல் பணிவு வேண்டும். அகந்தை என்னும் கிழங்கு நம்மிடம் ஆழப் பதிந்து கிடக்கின்றது. அதனை அடியோடு அகழ்ந்து எறிந்துவிட வேண்டும். அப்போதுதான் நாம் ஞானத்துக்கு இடம் தேடியவர்கள் ஆவோம். 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கேற்றும் விளக்கே' என்று குமரகுருபர சுவாமிகளும் பாடுகிருர்.

எல்லாவற்றுக்கும் நானே கர்த்தா என்று நினைக்கச் செய்வது ஆணவம். உள்ளத்தைச் சிதறவிட்டு உலக இன்பத்தை விரும்பச் செய்வது மாயை. அது அறியாமை. இந்த அறியாமையின் விளைவாகச் செய்யப்படும் வினைகள் கன்மம். எப்போதும் நான் நான் என்று சொல்லிக் கொண்டே திரிகிருேம். அந்த 'நான்' கொண்டு சென்று சேர்க்குமிடத்தை நாம் அறிவதில்லை.

இறைவனைப் பற்றிப் பேசுகின்றபோதுகூட நான் என்பதும் என்னுடையது என்பதும் தொனியாமல் பேசுவதேயில்லை. என் மனைவி, என் குடும்பம், என் ஊர், என் நாடு என்றெல்லாம் எண்ணச் செய்கின்ற உள்ளம் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே நின்று விடுகின்றது. நான் வேறு, நீ வேறு என்று ஆண்டவனை வேறு படுத்தாத நிலையிலேதான் அநுபூதி நிலை வந்தடைகின்றது. 'நீ வேறெனுதிருக்க நான் வேறெனுதிருக்க' என்றெல்லாம் அருணகிரியார் திருப்புகழில் இந்நிலையைப் பாடுவார். இதை இன்னும் விளக்கமாகச் சொன்னுல், உலக நிலையில் இருப்பதைச் சீவபோதம் என்றும், இதைக் கடந்து அகண்ட சச்சிதானந்தத்தில் இருப்பதைப் பரபோதம் என்றும் சிவபோதம் என்றும் சொல்லுவது வழக்கம். இன்பத் துன்பங்

கள் நிறைந்த இவ்வுலக நினைவு சீவபோதம். அதற்கு அப்பால் உள்ளது சிவபோதம். அது மனதற்ற பரிசுத்த நிலை; மனதற்ற பரிசுத்த நிலையே முடிந்த நிலை.

பேசா அநுபூதி

முருகன் தன்னை அடைந்தார்க்குப் பிறவாப் பேரின்ப நெறியை வழங்குவான். அவன் அமுதமயமானவன். அவன் கைவேல் ஞானசக்தி—வினை ஓட விடும் கதிர்வேல். அது பரு உருவத்தில் அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிச் சூரனை மாய்த்தது. நுண்ணுருவில் ஞானமாக நின்று அஞ்ஞானத்தை அகற்றுவது. அப்பெருமான் ஞானசொரூபன். அவன் அருள் கைவந்து கூடினுல் நான் என்பது மறையும்; தற்பர நிலை தோன்றும்.

'யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்ருது' என்று கந்தர் அலங்காரம் பாடுகிறது.

ஆனு அமுதே அயில்வேல் அரசே
ஞானு கரனே நவிலத் தகுமோ
யானு கியஎன் னைவிழுங் கிவெறும்
தானுய் நிலைநின் றதுதற் பரமே.

என்று கந்தர் அநுபூதி பாடுகிறது.

'கெடாத அமுதமே, கூரிய வேலை உடைய அரசே, ஞானமே உருவாக உடைய பெருமானே, யான் எனப்பட்ட என்னை விழுங்கி வேறு ஒன்றுமில்லாது எப்பொருளும் தானுகி நிலைத்து நின்ற தற்பரம் அநுபவிக்கத் தக்கதே அன்றிப் பிறர்க்குச் சொல்லமுடியாதது' என்று அநுபூதி நிலையை அருணகிரியார் சொல்லித் தருகின்ருர். இத்தற்பர நிலை சொல்ல இயலாத நிலை. அந்நிலையைக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். சொல் இறந்த நிலையிலே என்ன சொல்ல முடியும்? சொல் அற்றுப்போகும் போதுதான் அனுபவம் வாய்க்கும்.

'அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்று அநுபூதியிலும், 'சொல்லொணுதிந்த ஆனந்தமே,' 'சொல்லுகைக்கில்லை என்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும் எல்லை' என்று அலங்காரத்திலும் அருணகிரியார் சொன்னநிலை அது.

பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கோயில் கட்டிய பல்லவ மன்னவன் இராசசிம்ஹன் நிலை சீவபோதம். பொன்னையும் பொருளையும் காணுத பூசலார் நிலை சிவபோதம். இவர் அடைந்தது மனதற்ற பரிசுத்த நிலை. அந்நிலையில், நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த நீடாலயத்திலே கொன்றை வார் சடையான் கோயில் கொண்டு எழுந்தருளினுன் என்ருல் அதில் வியப்பு ஒன்றும் இல்லையே! பூசலாரிடத்திலே பிறந்தது பேசா அநுபூதி.

அநுபூதி என்ருல் அநுபவம். அதாவது இறை அநுபவம். அது சச்சிதானந்தப் பொருளாகிய இறைவனேடு ஒன்று சேர்ந்திருக்கிற நிலையில் உண்டாகும் இன்ப அநுபவம். இவ் இன்ப அநுபவத்தையே அருளாளர்கள் அநுபூதி என்று அழைத்தார்கள். அநுபூதியை வரவிடாமல் தடுப்பது ஆணவம். ஆணவமுனைப்பு இருக்கும் வரையும் பேரின்பப் பெருவாழ்வு வாராது, வாராது. ஆணவம் என்ற அழுக்குப் போகவே வேண்டும்.

ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கிஅநு
பூதி அடைவித்ததொரு பார்வைக்காரனும்

என அருணகிரியார் பாடினுல்,

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதம் சாருநா ளெந்நாளோ

என்று பாடுவார் தாயுமானவர்.

அநுபூதியை உலகத்திலே உடம்போடு இருக்கும் போதே பெறலாம் என்று அருளாளர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆசையை விட்டொழிக்கும் போதே அநுபூதி நிலைவந்தடையும்.

ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.

என்பது திருமந்திரம்.

ஆசை அழிந்துபோனால் அருள் பெருகும்; ஆனந்தம் தோன்றும்; அநுபூதி வந்தடையும். அப்போது எல்லாமற என்னை இழந்தநலம் தோன்றும். இந்நிலையை

உரைஅவிழ உணர்வுஅவிழ உளம்அவிழ உயிர்அவிழ
உளபடியை உணரும்அவர் அநுபூதியானதுவும்

எனச் சீர்பாத வகுப்பிலே அருணகிரியார் பாடுவார். இதோ அநுபூதி பிறக்கும் கந்தரநுபூதி :

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதுஅன்பு அருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே.

இதன் பொருள் :

முத்தையும் பவளத்தையும் ஆடையாக அணிகின்ற வள்ளி எம்பிராட்டியின் காதலனே, முருகா, என்னிடத்தே வைத்த நின் அன்பினால் ஆசை என்னும் விலங்கு தூளாகப் போனபின் நின் அருளால் இன்னவாறு இருந்த தெனச் சொல்ல முடியாத அநுபூதி நிலை என்பால் உண்டாயிற்று.

செருக்கு என்பது நான் என்னும் முனைப்பு. அகந்தை என்பதும் அதுவே. அது உயிர்களைப் பிறப்பு இறப்பு என்னும் பேதைமையில் உட்படுத்தும். முனைப்பு அற்றுத் திருவருள் வழிநிற்றலே இறைபணி நிற்றல் ஆகும்.

தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தலைப்படும்போது வேறு ஒன்றும் இல்லாது எப்பொருளும் தானாகி நிலைத்து நிற்கின்ற உயர்ச்சி, இறைவனோடு ஒன்றுபடும் ஞான இன்பநிலை. இந்த இன்ப வாழ்வை வேண்டி 'நீயான ஞானவிநோதந்தனை என்று நீ அருள்வாய்' என்று அலங்காரத்திலே அருணகிரிநாதர் முருகனைக் கேட்பார்.

ஏகனாகி இறைபணி நின்று நாதன் தாள் அடைந்து வாழ்கின்ற நிலை அநுபவிக்கத்தக்கதே அன்றி எடுத்துச் சொல்லமுடியாதது. ஆண்டவன் ஞானவெளியாகிய சிதாகாசத்தில் வீற்றிருக்கின்றான். நாம் உலகினின்றும் நீங்கி மனம் அற்று உரை அற்று எங்கே இருக்கிறோமோ அங்கே தான் அந்த வெளி நமக்குக் கிடைக்கும். மனம அற்ற நிலை, சும்மா இருக்கும் நிலை. இதனை 'யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றாது சத்தியம' என்று அருணகிரியார் பாடி, அகந்தை உள்ள அளவும் அநுபவம் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

> சும்மா இருசொல் அறஎன் றலுமே
> அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே.

என்று சும்மா இருக்கும் நிலையை அநுபூதியிலே அருணகிரியார் பேசுவார். நான், தான் என்ற வேறுபாடு உரைக்கும் நிலை ஒழிந்து மோனநிலை பெற்றால் சான்று ஆரும் அற்ற தனிவெளியில் முருகனோடு ஒன்றி இன்புறலாம் என்று அருணகிரியார் கூறுகின்ற அருள் அநுபவச் செய்திகள் மிகமிகச் சிறப்புடையன.

> சும்மா இருவெனநீ சொல்லப் பொருளொன்றும்
> அம்மா அறிந்திலமென்று அன்றுரைத்த — எம்மான்
> அருணகிரி நாதன் அநுபவம்நா யேற்குக்
> கருணைபொழி போரூரா காட்டு.

என்று சிதம்பரசுவாமிகளும் அருளநுபவம் வேண்டி அங்கலாய்த்துப் பாடுவார். தாயுமானவரும் சும்மா இருக்கும் நிலையைப் பல இடங்களிலே பாடுகிறார். அவற்றுட் சில இதோ,

எம்மா லறிவதற எம்பெருமான் யாதுமின்றிச்
சும்மா இருக்கவொரு சூத்திரம்தான் இல்லையோ.

சொல்லும் பொருளும்அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே.

சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதிஎல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையும் தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோஎன் விதிவசமே.

சும்மா இரு என்பது சுட்டிறந்த முதல்வனை உணரும் ஞான நிட்டை. இந்த ஞான நிட்டையிலே நின்றவர் பூசலார். உள்ளத்திலே அகங்காரம் ஓங்க நின்றவன் பல்லவ மன்னன் இராஜசிம்ஹன். நான், எனது என்று நாம் கூறிக்கொண்டிருப்பன எல்லாம் நாம் செய்து கொண்ட வெறும் கற்பனைகள். பசு கரணங்களைப் பதி கரணங்கள் ஆக்குவதே செயற்கரிய செயல். பசு கரணங்கள் பதி கரணங்களாக மாறப் பெற்ற நிலையே முத்தி நிலை. செத்தபின்தான் சிவலோகம் வைகுண்டம் என்பது இல்லை. இதோ இப்போதே முத்தி.

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரியம் எல்லாம்ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பி லதனை
உணர்ந்துஉணர்ந்து
சென்றாங்கு இன்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசைஅற்றால்
அன்றே அப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே.

இது நம்மாழ்வார் பாடல்.

நம்முடைய சமயம் பேசா அநுபூதியைப் பேசியது. அது நமக்குப் பெருமை.

# வெற்றிவேற் பெருமாள்

நவருன கல்வி

படிப்பது சிறிதாக இருக்கலாம். ஆனல், சிந்திப்பது பெரிதாக இருக்கவேண்டும். உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளலாகவே இருக்கவேண்டும். உணவை உண்ண எடுத்துக்கொள்ளும் நேரம் சிறிதாக இருக்கிறது. ஆனல், அதைச் சீரணிக்க எடுத்துக்கொள்ளும் நேரம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது. அது போலப் படிக்கும் நேரம் சிறிதாக இருப்பினும், சிந்திக்கும் நேரம் பெரிதாக அமைவது சிறந்தது. உண்ட உணவு குருதியாக மாறினல் உடம்புக்குப் பலன் உண்டு. கற்ற ஏட்டுக் கல்வியும் வாழ்க்கைக் கல்வியாக அமைந்தால் மட்டும் கல்வியின் பயனைப் பெறலாம்.

நம்மவர்கள் கணிதநூலும், வானநூலும் பல்லாண்டு பயில்வார்கள். ஆனல், விண்மீன்களின் நிலையை அறியார்கள் காவியம் பல கற்பார்கள். ஆனல், கவியின் உள்ளத்தை உணரமாட்டார்கள். வணிகநூல் பற்றியும் பொருள்நூல் பற்றியும் ஏதேதோ பேசுவார்கள். ஆனல், வாழும் நாட்டில் பொருளாதார நிலை கேடுறும் காரணத்தை விளக்கமாட்டார்கள். இன்னும் எத்தனையோ கலைகளின் பெயர்களை அடுக்கிக் கொண்டே போவார்கள். இவை எல்லாம் ஆரவாரக் கல்வியாகத் தெரிகின்றனவே தவிர அறிவு விளக்கத்துக்கு ஏற்றதாகத் தெரியவில்லையே!

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
காா்கோள் வானில்ஓா் மீன்நிலை தோ்ந்திலாா்
அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலாா்
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவாா்
வாழும் நாட்டில் பொருள்கெடல் கேட்டிலாா்
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்
சொல்லு வாா்எட் டுணைப்பயன் கண்டிலாா்.

இவ்வாறு கல்வி முறையில் அமைந்த குறைகளை எடுத்துக் காட்டுகின்றான் பாரதி பட்டங்கள் ஆள்வதற்கும் பதவிகள் வகிப்பதற்கும் இக்காலக் கல்வி பயன்படுவதல்லால் அறியாமையை அகற்றிப் பண்பாட்டை உயர்த்தப் பயன்படுவதாக இல்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது.

'கல்வி கரை இல கற்பவர் நாள் சில' என்பது உண்மை. ஆனால், தவறான கல்வியாலும் சுமையான கல்வியாலும் வாழ்க்கை வளம் பெற மாட்டாது என்பதை நாம் அறியவேண்டும். கண்ட கண்ட நூல்களை எல்லாம் கற்கவேண்டும் என்பது நியதி ஆகாது கற்கத் தகுந்த நூல்கள் எவை, தகாத நூல்கள் எவை என்ற வேறுபாடு இருந்தே ஆகவேண்டும். இல்லையானால் காலமும் முயற்சியும் வீணாகிவிடும். வெறும் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் நூல்கள் இன்று மலிந்து கிடக்கின்றன. பொழுது போக்குக்காகவும் புல்லிய உணர்ச்சிகளையும் ஆசாபாசங்களையும் வளர்ப்பதற்காகவும் நூல்கள் படைக்கப் படுகின்றன. இன்றைய எழுத்தாளர்களில் ஒரு சாரார் மக்களது மன நிலையை நன்கு புரிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ப எழுதிக் குவிக்கிறார்கள். குழந்தை நோயுற்றிருக்கிறது. கண்ட கண்ட தின்பண்டங்களை எல்லாம் உண்ண வேண்டும் என்று அக் குழந்தைக்கு ஆசை எழுவது இயற்கையே. அது விரும்புகின்றது என்பதற்காக, கேட்கும் தின்பண்டங்களை எல்லாம் தாய் கொடுத்துவிடுவாளா? கொடுத்தால் குழந்தையின் கதிதான் என்ன? இந்தக் குழந்தையை ஒத்ததே இன்றைய சமுதாயம். சமுதாயம் நோயுற்றிருக்கின்றது. நோயுற்ற சமுதாயத்துக்கு நல்லது கெட்டது தெரியவில்லை. அது விரும்புவது அப்போதைக்கு அப்போதே இன்பம் கொடுப்பதாக இருக்கலாம். எழுத்தாளர்களும் பண்பட்ட உள்ளம் படிக்க முடியாத பலவற்றையும் எழுத்தில் வடித்துவிடுகிறார்கள். அவற்றின் விற்பனைக்கும் குறைவே இல்லை. சமுதாயம் எதை விரும்புகிறது, சமுதாயத்துக்குத் தேவை எது என்ற இரண்டில் எது சிறந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நல்லறிவு

மண் வளம் குறைந்தால் மண்ணுக்கு உரத்தைப் போட்டு வளம் ஊட்டுகிறோம். மனம் வளம் குறைந்தால் உரம் இடாதிருப்பது அறிவுடைமையாகாது. வாழ்வுக்கு மனம்தானே அடித்தளம். மனவளம் குன்றினால் வாழ்வே குன்றும். நாம் வாழ்வைப் பெரிதாக அமைத்துக் கொள்ள வேண்டும். வாழ்வைப் பெரிதாக்குவதென்றால் எடுபிடி ஆட்களுடன் வாழ்வது என்பது கருத்தாகாது. வாழ்வு அறத்தில் ஊறவேண்டும். அறத்தோடு கலக்க வேண்டும். அருள் கனிந்து மணக்க வேண்டும். இன்று விமானங்களில் வானில் பறக்கக் கற்ற மக்கள், அலைகடலில் நீந்தவும் மூழ்கவும் கற்ற மக்கள், நிலத்தில் அமைதியாக வாழ முடியவில்லை என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும். அறநெறி நின்றால் மட்டுமே வாழ்வில் அமைதியைக் காண முடியும் என்பதை எவரும் மறுக்க முடியாது. கிணற்றின் சுவர் வெள்ளி; இறைக்கும் கயிறு பொன்; அள்ளும் வாளி தங்கம். இவ்வாறு அமைந்த கிணற்றில் தங்க வாளியினால் அள்ளப்படும் நீர் துர்நாற்றம் வீசுமானால் என்ன பயன்? பிறரொருவன் ஏற இறங்கப் பார்க்கும் அணிகலன்களை அணிந்து எட்டு அடுக்கு மாளிகையில் இன்பமாக வாழ்ந்திருந்தாலும் மனிதப் பண்பும் ஆன்மிக உணர்வும் ஒருவனிடம் இல்லையானால் துர்நாற்றம் அவனிடமிருந்து வீசும்.

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். அக் குறிக்கோள் உயிர்க்கு ஆக்கம் அளிப்பதாக இருக்க வேண்டும். அதுதான் அறியாமையிலிருந்து அதன் வழிப்பட்ட துன்பத்திலிருந்து உயிரை விடுதலை செய்யும் நல்லறிவு. மனிதன் எவ்வளவு மேம்பாடு அடைந்திருந்தாலும் அவன் மண்ணுலகை விட்டு மறைந்து போவது நிச்சயம். அதைத் தடுக்க இவ்வுலக சம்பந்தமான எந்த அறிவும் எவ்வித சம்பத்தும் எத்தகைய ஆற்றலும் அவனுக்கு உறுதுணையாகா. விதவைகளின் கண்ணீருக்கும் அநாதைகளின் கூக்குரலுக்கும் கூற்றுவன் தலை வணங்க மாட்டான். இந்த அறிவு வாய்க்கப் பெற்றவனே நல்லறிவு

வாய்க்கப் பெற்றவன். இதைத் திருக்குறள் வாலறிவு என்று வாழ்த்தும். 'அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு' என்று திருவாசகம் போற்றும் அணுவிலிருந்து தொடங்கி ஆகாயம் வரையும் உள்ள பொருள்களைப்பற்றித் தீர்க்கம் உற அறிந்தவர்களைப் பார்த்து 'நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக' என்று காரைக்காலம்மையார் கடுமையாகவே பேசுவார்.

இறைவன் அனைத்துலகிலும் அந்தர்யாமியாக நின்று அருள்புரிகிருன்; படர் கொடியைப் பற்றித் தாங்குகின்ற கொழுகொம்பைப்போல இருக்கிருன். இதை அறிவதுதான் உண்மையான கல்வி. இந்தக் கருத்தைப் பாடுகிருர் திருமழிசை ஆழ்வார்:

தேவராய் நிற்குமத் தேவும்அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் — யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் ருேராதார்
கற்கின்ற தெல்லாம் கடை.

எம்பிரானிடத்திலே உறைத்த அன்பை உண்டாக்கிக் கொள்ள உதவுவது உண்மையான கல்வி. பெருமானிடத்திலே பக்தி பண்ண வழிசெய்யாத கல்வி கல்வி ஆகாது.

காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்.

என்ற திருமழிசை ஆழ்வாரின் பாடல் சிந்தனைக்கொரு சீரியவிருந்து.

கல்வியின் பயன்

சர்வ துக்க நிவிர்த்தி செய்வது பரஞானம் ஒன்றே. நூலறிவின் குறிக்கோள் வாலறிவாக இருக்க வேண்டும். நூலறிவினுல் வாலறிவனைத் தொழுது ஏத்த இம்மையில் சோறு கிடைப்பதையும் அம்மையில் மண் மதியாது

வானவர் எதிர்கொள வான்புகும் பேறு கிடைப்பதையும் 'இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே' என்று பாடி நல்வழி காட்டுகிறார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

பிறவாத பேற்றையும் இம்மையில் வறுமையே தெரியாத வளமான வாழ்வையும் யார் பெறுவார்கள்? வெற்றிவேற் பெருமாள், அடியார்க்கு நல்ல பெருமாள், அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவர்கள் பெறுவார்கள்.

அப்பெருமான் முருகன் அடியார்க்கு நல்ல பெருமாள். அடியார்களை நாடி வந்து அன்னையைப் போல் அவன் அருள் செய்வான். அவன் அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள். அசுரர் கூட்டம் மிக மிகப் பெரியது. அவர்களுடைய வியூகத்தைப் பொடிப்படுத்த எவராலும் முடியாது. முருகன் திருஅவதாரம் செய்து தேவர்களுக்குத் துன்பம் செய்த சூரபத்மனையும் ஏனைய அசுரர்களையும் சங்காரம் செய்தான். அறுபத்தாறு கோடி அசுரர் குலத்தைத் தன் கை வேல் கொண்டு அழித்து அடியார்க்கு வரதனாக இருப்பவன் முருகன். அவன் சிஷ்ட பரிபாலனம் செய்கின்றபோது அடியார்க்கு நல்ல பெருமாள். துஷ்ட நிக்கிரகம் செய்யும்போது அவுணர் குலமடங்கப் பொடியாக்கும் பெருமாள். முருகப் பெருமானின் திருவருள் பெருகிப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்கு அவன் திருநாமம் வழி செய்யும். முருகனுடைய திருநாமத்தை வாயினால் சொல்ல உடம்பினால் செய்யும் செயல்களும் உரையினால் சொல்லும் சொற்களும் மனத்தினால் எண்ணும் சிந்தனைகளும் உரம்பெறும்; வாழ்வும் வளம்பெறும். நெஞ்சமாகிய கனகல் உருகும்போது தஞ்சம் ஆகிய பேறும் வந்து அடையும்.

முருகன் திருநாமம் புகல்பவர்களுக்குப் பூவுலகிலே வேதனைப் படாத வாழ்வு வந்து வாய்க்கிறது. முடியாப் பிறவிக்கடல் வற்றப் பேரின்பப் பெருவாழ்வு பின்னர் வந்து அமைகிறது. இரண்டும் வாய்த்தால் வேறென்ன வேண்டும்? இதோ பாடல்:

முடியாப் பிறவிக் கடலில் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலம்அடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

இறைவன் திருவருளைப் பெறுதலே அறிவின் முடிந்த முடிபாகிய பயன். அருளைப் பெறும் நெறியில் அதற்கு அங்கமாகிய எல்லாவற்றையும் அறிவது பயனுடைத்து. அறிவினால் உலகை அறியவேண்டும். ஆனால் அந்த அளவில் முற்றிய பயன் வந்துவிடாது. 'சாவாமற் கற்பதே கல்வி.' அந்தக் கல்வி பெறவேண்டுமானால் வெற்றிவேற் பெருமாள், அடியார்க்கு நல்ல பெருமாள், அவுணர்குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல வேண்டும். அதுவே கல்வியின் பயன் என்று முற்றாக நம்பவேண்டும். நம்பினால் வளமான வாழ்வு தானாக வரும்.

இன்னொரு அலங்காரப் பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வு
இல்லையே.

சாகிற காலத்திலே சங்கரா சங்கரா என்றால் சங்கரனே திடுக்கிட்டு விடுவான். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்ட பெருமானை நாம் வாழ்கிற காலத்திலேயே ஒரு நெறிய மனம் வைத்து உணரவேண்டும். உணர்ந்தால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். மயில்வாகனனைச் சாந்துணைப்போதும் மறவாதார்க்குத் தாழ்வு ஏது?

—

# அசதி ஆடுகிறார் அருணகிரியார்

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

என்று வள்ளுவர் உலகின் சிறுமையைப் பெருமை என்னுஞ் சொல்லில் வைத்துக் காட்டுகிறார்.

*பொய்வாழ்வு*

ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஒரு பொழுது பார்த்த தண்ணீர் மறுபொழுது இருப்பதில்லை. ஆனால், பார்ப்பதற்கு நதியில் எப்போதும் ஒரே தண்ணீர் இருப்பதுபோலத் தோன்றும். குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் தண்ணீர் அடுத்த கணம் வேறு இடத்துக்குப் போய்விடும். எமது வாழ்வும் இவ்வாறே ஓடிக்கொண்டிருக்கின்றது. நமது அநுபவங்கள் நேரத்துக்கு நேரம் நாளுக்குநாள் மாறிக்கொண்டே செல்கின்றன. விருப்பு, வெறுப்பு, நன்மை, தீமை, ஆடல், பாடல், நட்பு, பகை, விழிப்பு, உறக்கம், இன்பம், துன்பம் ஆகிய இவை போன்ற எல்லாம் கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டே போகும். ஆற்றுநீர் ஓட்டம்போல் எமது வாழ்வும் அமையும்.

கணியன் பூங்குன்றனார் புறநானூற்றிலே பாடுகிறார்:

கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் எனபது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம் .........

பெரிய ஆற்றினது நீர் ஓட்டத்தின் வழியே தெப்பக் கட்டை ஓடிச் செல்வது போல உயிரானது விதியின் வழியே ஓடிச் செல்லும். நம்முடைய வாழ்வு பொய்யான வாழ்வு. 'நதிதனை அன்ன பொய் வாழ்வு' என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

உயிருக்குப் பாரமாக இருப்பது உடம்பு. ஆனால் இது நமக்குத் தெரியாது. பாரம் என்று கூட நாம் எண்ணுவதில்லை. உடம்பில்உள்ள பற்று உடம்பைப் பாரம் என்று எண்ண விடுவதில்லை. உடம்பு அநுபவிக்கும் துன்பம் அத்தனையையும் தெரிந்திருந்தும் அதன்மேல் நமக்கு ஒரு தனிப்பற்று. நம்முடைய பொய் வாழ்க்கைக்குப் புகலிடம் ஒன்று வேண்டும். நரம்புப் பொதியாகிய உடம்பைச் சுமந்து திண்டாடுகின்ற வாழ்க்கைக்கு நல்ல கதி உண்டா என்று புலம்புகிறார் அருணகிரிநாதர். நல்ல கதி இருக்கிறது. இறைவனோடு இசைந்து வாழ்கின்ற வாழ்வே நல்ல கதி. அந்தக்கதி தனக்குத் தோன்றவில்லையே என்று அருணகிரிநாதர் வருத்தப்படுகிறார். உடம்பைத் தந்த விதி உயிரை இறைவனிடம் சேர்க்கவும் வழிகோலி விட்டால் அதுவே போதுமானது. அவருடைய புலம்பல் பாட்டாக வருகிறது. அவர் பாடியது எமக்காகத்தானே! அந்த அலங்காரப் பாடலை நாமும் பாடுவோம்:

கதிதனை ஒன்றையும் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன் பாய்நரம் பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு மாறுஎனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந்து இங்கேஎன் தன்மனம்
வேகின்றதே.

சுந்தரர் செந்தமிழ்

வன்தொண்டர் சுந்தரர் திருவொற்றியூருக்குச் செல்கிறார். சங்கிலி என்ற பெண் அவருக்காகவே அங்கே பிறந்து வளர்கிறாள். மணம் முடிக்க விரும்புகிறார் சுந்தரர். சங்கிலியும் சம்மதிக்கிறாள். பரவையாருடைய நினைவு வருகிறது. தயங்குகிறாள் சங்கிலி. 'உன்னை நான் பிரியேன்' என்று சபதம் செய்து கொடுக்கிறார் சுந்தரர். திருமணம் இனிதே நிறைவேறுகிறது. சில நாட்கள் கழிந்ததும் திருவாரூர்த் தியாகராசப் பெருமானுடைய நினைவு வருகிறது. திருவொற்றியூரை நீங்குகிறார். சபதம் தவறினமையால் இரண்டு கண்களும் மறைகின்றன. பாடுகிறார்.

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றுனால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

பிழுக்கை பாலினுள் விழுந்தால் பிழுக்கையை எடுத்து எறிந்து விட்டல்லவா பாலை எடுக்கிறார்கள் என்று சிறந்த உதாரணம் காட்டுகிறார் சுந்தரர். 'வழுக்கி வீழ்ந்தாலும் இறைவன் பெயரைச் சொல்லிக் கொண்டுதான் விழு வேன்' என்று இனிக்கவும் பேசுகிறார்.

திருவெண்பாக்கஞ் சென்று இறைவனிடம் ஊன்று கோல் வாங்குகிறார். கச்சி ஏகம்பநாதனை வணங்கி இடக்கண் பெறுகிறார். தம்பிரான் தோழன் என்ற மிடுக்கி னால் வலக் கண்ணையும் கேட்கிறார்.

தெய்வம் பொய்த்துப் போனால் வசைமாரி பொழிந்து விட்டுச் சாகவேண்டியதுதான் என்று பேசுவதை நாட்டிலே இன்றும் நாம் கேட்கிறோம். இந்நிலையில் ஆண்டாள்,

தம்மை உகப்பாரைத் தாம்உகப்பர் என்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர்இனியே

என்று ஆண்டவனைக் கேட்பாள். சுந்தரரும் தன் குறையை இன்னொரு பாணியிலே சொல்கிறார்:

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

'அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங் கிருப்பீர் வாழ்ந்து போதீரே; நான் என் குறை சொல் கிறேன்; பேசாதிருக்கிறீரே. நான் வாழாவிட்டாலும் குறை ஒன்றும் இல்லை. நீர் வாழ்ந்துபோம்' என்று பாடுகிறார் தம்பிரான் தோழர். திருவாரூர்ப் பெருமான் இரங்கி வலக்கண்ணையும் கொடுத்துவிடுகிறார்.

சுந்தரர் தோழமை உரிமை கொண்டு இறைவனுடன் வேடிக்கை வார்த்தைகள் பேசுவதை அவர் அருளிய தேவாரங்களில் பல இடங்களில் காணலாம். இவ்வாறு வேடிக்கை வார்த்தை கூறுதல் அசதி ஆடுதல் எனப்படும். எம்பிரானுடன் சுந்தரர் அருமையாகவும் அற்புதமாகவும் அசதி ஆடிய சில தேவாரங்களை நாமும் பாடிப் பரவு வோம்.

சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனாரோ டும் பாண்டிய சோழ மன்னர்களோடும் திருப்பரங்குன்றம் சென்று பெருமானைத் தரிசித்துப் பாடுகிறார்; 'அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே' என்று பாடல்களை இனிதே நிறைவு பெறச் செய்கிறார். அங்கே வருகின்ற ஒரு பாடலையாவது இங்கே சொல்லி விடுகிறோம்.

முண்டம் தரித்தீர் முதுகா டுறைவீர்
முழுநீ றுமெய்பூ சுதிர்மூக் கப்பாம்பைக்
கண்டத்தி லும்தோளி லும்கட்டி வைத்தீர்
கடலைக் கடைந்திட்ட தோர்நஞ்சை உண்டீர்
பிண்டம் சுமந்தும் மொடுங்கூட மாட்டோம்
பெரியா ரொடுநட் பினிதென் றிருந்தும்
அண்டம் கடந்தப் புறத்தும் இருந்தீர்
அடிகேள் உமக்குஆட் செயஅஞ் சுதுமே.

திருக்கோடிக்குழகர் என்ற திருத்தலத்துக்கு வருகிறார் சுந்தரர். அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பாடு கிறார். 'கோடிக்குழகீர், கடற்காற்றுக் கடிதாய் வந்து கரை

மேல் மோதுகிறது. வேறு இடம் இல்லாமல் இந்த இடத்தில் வந்து குடித்தனம் பண்ணவேண்டுமா? உமக்குத் துணையாக இங்கே யார் இருக்கிறார்கள்?' என்று பெருமானைக் கேட்கிறார் சுந்தரர். பாடல் இதுதான்:

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான்அய லேஇருந் தால்குற்ற மாமோ
கொடியேன் கண்கள்கண் டனகோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே.

அண்டசராசரங்களையும் படைத்துக் காக்கின்ற ஆண்டவன் துணை இன்றி இருக்கிறானாம்! நெல்லைப் படைத்து, நீரைப் படைத்து, மண்ணைப் படைத்து, விண்ணைப் படைத்துக் கடலைப் படைத்துக் காற்றைப் படைத்து நம்மையும் படைத்த ஆண்டவனைக் கடற்காற்று என்ன செய்யும்? அந்தப் பெருமான் நமக்கு அருந்துணை, பெருந்துணை, வருந்துணை அவனுக்கும் ஒரு துணை வேண்டுமா? சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோழமை உரிமையினால் ஆடுகின்ற அசதி இனிக்கிறது.

இன்னும் சுந்தரர்,

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண்மயத்த உமக்குஅடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவிஇருந்தீர்..........

என்று கேட்பார்; கேட்டதை வாங்காமலும் போகமாட்டார்.

'நாகைக்காரோணத்துப் பெருமானே, மண்ணுலகு, விண்ணுலகு எல்லாம் உமது ஆட்சி. உமை அம்மை பாலனும் முருகன் சின்னக்குழந்தை. அவன் எனக்கு எப்படி உதவமுடியும்? பெருவயிறன் கணபதி ஒன்றும் அறியான்.

எனக்கு வேறு வழி இல்லை. நீரே அருள்புரிய வேண்டும். அன்றேல் உம்முடைய திருமேனி வருந்தும்படி உம்மைப் பிடிப்பேன். கண்ணறையன், கொடும்பாவி என்று என்னைச் சொல்லவேண்டாம்.' இதோ தேவாரம் :

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலைஅரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன்
எண்ணிலிஉண் பெருவயிறன் கணபதிஒன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பிஅருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோணம் மேவிஇருந் தீரே.

சுந்தரர் இப்படி எல்லாம் அசதி ஆடி நம்மையும் இறைவனிடத்து ஈடுபடுத்துகின்ற அருமையை என்னென்போம்!

சுந்தரமூர்த்தி நாயனர் பாடியது, அசதி ஆடியது எல்லாம் திருத்தோழமை உரிமையினல் என்று சேக்கிழார் பாடுகிருர். பாடல் இதோ :

மீளா அடிமை என்றெடுத்து மிக்க தேவர் குலமெல்லாம்
மாளா மேநஞ் சுண்டருளி மன்னி இருந்த பெருமானைத்
தாளா தரிக்கும் மெய்யடியார் தமக்காம் இடர்நீர் தரியீர்என்று
ஆளாம் திருத்தோ ழமைத்திறத்தால் அஞ்சொற் பதிகம்
பாடினர்.

*ஈஷணாத்திரயம்*

பொல்லா உடல் பொம்மலாட்டம். சுற்றம் சந்தைக் கூட்டம். பாழ்வாழ்வு குடங்கவிழ் நீர் ஓட்டம்

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல

என்று வள்ளுவர் சொல்வது போல வாழ அறியாது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சல மேதான்.

என்று தமிழ்க்கிழவியும் அன்றைக்கே நல்வழியைப் பாடிவிட்டாள்.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என ஆறுமுகநாவலர் சொல்வார். இந்தப் பூமி நாம் உய்யும் பொருட்டு ஆண்டவன் தந்தது. இந்தச் சரீரமும் நமக்கு அவ்வாறே ஆண்டவன் அருளிய பெருங்கொடை.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

என்று வேண்டுவார் மணிவாசகர்.

தாங்கள் பூமியிற் பிறக்கவில்லையே என்று திருமாலும் பிரமாவும் கவலைப்படுகிறார்களாம். ஆகவே, பூமியில் பிறந்த நாம் பாக்கியசாலிகள். ஆனால், முறையான வாழ்க்கை நடத்துகின்றோமா என்று நம்மை நாமே கேட்டுப் பார்க்க வேண்டும்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுஉனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே.

என்று மணிவாசகர் வாழாத நெஞ்சத்துக்கு வாழும் வழியைச் சொல்கிறார். மனம் வாக்குக் காயங்கள் நமக்குக் கட்டளையிடும்போது எண்ணிறந்த பந்தங்கள் தலைகாட்டும்.

தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

என்ற போற்றித்திருவகவல் சிந்தனைக்கு உரியது.

கடவுள் ஒருவன் உளன் என்ற நினைவு ஏற்பட்டு வெறுப்பற்றதொரு பெரும்பொருளை நாடுதலும், ஆறு கோடியெனக் கணக்கிட்டுக் கூறப்படும் மயக்கம் செய்ய வல்ல சட உலக ஆற்றல்கள் தத்தம் பல்வேறு திறப்பட்ட சூழ்ச்சிகளைக் காட்டத் தொடங்கும். மண் தன் வலிமையைக் காட்டும். பெண் தன் வலிமையைக் காட்டுவாள். பொன்னும் தன் வலிமையைக் காட்டி நிற்கும். ஆனால், மனிதன் இவற்றுக்குத் தன் வலிமையைக் காட்டி விட்டால் வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.

'முதலில் உள்ளங்கையில் எண்ணெயைத் தடவிக் கொண்டு பலாப்பழத்தை அறுத்துச் சுளைகளை எடுப்பாயானால், பிசின் உன் கையில் ஒட்டிக் கொண்டு தொந்தரவு செய்யாது. அதுபோலப் பரமாத்மாவைப் பற்றிய ஞானத்தால் உனக்குப் பாதுகாப்பை உண்டாக்கிக்கொண்டு செல்வம் முதலான உலகப் பொருள்களிடையே நீ வசித்தால் அவற்றிற்கு நீ எவ்வழியிலும் வசப்படமாட்டாய்' என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்வார். அவர் மேலுஞ் சொல்வார்: 'இரண்டு வேளைகளில் இறைவன் புன்னகை புரிகிறான். ஒருவன் கொடும்நோயால் வருந்திச் சாகுந் தருணத்தில் இருக்கும்போது வைத்தியன் வந்து நோயாளியின் தாயைப் பார்த்து, 'பயப்பட வேண்டாம். உன் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்' என்று சொல்லும்போதும்; இரண்டு சகோதரர்கள் நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ள அளவு கோலைக் கையில் எடுத்

துக் கொண்டு கோடு வரைந்து அந்தப் 'பக்கம் உன்னுடையது, இந்தப் பக்கம் என்னுடையது என்று சொல்லும் போதும் இறைவன் சிரிக்கிறான்!'

வாழ்வு துன்பம் நிறைந்தது. ஆசை என்ற பொருள் இருக்கும்வரை வாழ்வு துன்பமாகவே இருக்கும். பிறப்புக்கு வித்திடுவது ஆசை. இந்த ஆசையை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று சொல்லுவார்கள். வடமொழியிலே இன்னொரு வகையாகவும் அதனைப் பேசுவார்கள். மனைவி, மக்கள், பொருள் என்பனவற்றில் இருக்கும் பற்றுக்களை ஈஷணாத்திரயம் என்ற ஒரு சொல்லால் குறிப்பிடுவர். அவை தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை எனப்படும். ஈஷணாத்திரயம் இருக்கும் வரை வாழ்வு பாழ்வாழ்வாகும். பிறவி பெருகிக் கொண்டே போனால் விடிவு ஏது? 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்று தானே வள்ளுவர் சொல்லுகிறார். நேற்று இருந்த ஒருவன் இன்று இறந்துபடுகின்றான். அப்போது உலகத்தினது நிலையாமையை அறிகிறோம். ஆனால் மறுகணத்தில் மாயை மயக்கிவிடுகின்றது. மாயையோடு தொடர்புடைய மூன்று ஈஷணைகளும் ஒழிந்தால் மாயை ஒழியும்; பிறப்பும் ஒழியும். இப்படி எல்லாம் நம்மை மயக்கி வருத்தும் வாழ்வு பாழ்வாழ்வுதானே!

## அசதி ஆடும் அநுபூதி

"இந்தப் பாழ் வாழ்வை எனக்குத் தரவேண்டுமா? உலக வாழ்வு மாயை, குடங்கவிழ் நீரோட்டம் என்பதை நான் அறிந்துவிட்டேன். இத்தேகம் ஆங்காரப் பொக்கிஷம்; கோபக் களஞ்சியம்; ஆணவம் நீங்கா அரண்மனை; பொய்வைத்த கூடம். இதனை நம்மதென்று நாம் இருக்க நாய், நரி, பேய்கள் தம்மதென்று தாமிருக்கும். இத்தாழ்வான வாழ்வு என்னை வந்து அடைய நான் செய்த தீவினைதான் என்ன? எனக்கு விடிவே இல்லையா?

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகிமேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

இந்த அரிய தத்துவத்தை உலகுக்குக் காட்ட வேண்டி அல்லவா சூரபன்மனை மயிலாக்கியும் சேவலாக்கியும் சேவடியில் திருவருள் இன்பம் துய்க்க வைத்தாய் முருகா! நான் எடுப்பார் இல்லாக் குழந்தை என்பது உன் நினைவா? உன்னுடைய திருவருட் குறிப்பு இதுவா? குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை கண்டு நின் திருவடியே தஞ்சம் என்று இருப்பவன் நான். அத்தகைய எனக்குப் பாழ்வாழ்வைப் பரிசாகத் தரவேண்டுமா? நன்று, நன்று உன் கருணை. மயில் வாகனனே, நீ வாழ்வாயாக" என்ற பொருள் தொனிக்க அசதி ஆடுகிறார் அருணகிரியார். இதோ அந்த அற்புத அநுபூதி:

பாழ்வாழ் வெனும்இப் படுமா யையிலே
வீழ்வாய் எனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வா கனனே.

பக்தியின் பெருக்கம் — உரிமையின் உச்சிப்படி — இவ்வாறு பாடச் செய்கிறது. நாமும் பாடிப் பரவுவோம்!

# வினை தான் என் செய்யும்

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தின் கதாநாயகி கண்ணகி காவிரிப்பூம் பட்டினத்திலே பிறந்து வளர்கின்றாள். வணிகர் குலவழக்கத்துக்குரிய ஒழுக்க நெறியிலே வழுவாது நின்று பொருள் ஈட்டிய மாசாத்துவான் மகனும் கோவலனை மணக்கிறாள். கோவலனும் கண்ணகியும் இன்புற்று வாழ்கின்றார்கள். 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே' என்று கண்ணகியைப் பாராட்டும் அளவுக்கு இல்லறம் நல்லறமாகப் பொலிகின்றது. பூம்புகார் நகரிலே விழா ஒன்று நிகழ்கின்றது. இளமையும் அழகும் வாய்ந்த மாதவி என்னும் பொதுமகள் அங்கே நாட்டியம் ஆடுகின்றாள். கோவலன் ஆடலைப் பார்க்கின்றான்; பாடலைக் கேட்கின்றான். மாதவியின் அழகு அறிவை மயக்கிவிடுகின்றது. மனைவியை மறக்கின்றான்; மாதவியின் மையலிலே தாழ்கின்றான்.

கண்டார் வெறுப்பனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகளாம் கண்ணகி இதனை அறிகின்றாள். துன்பத்திலே நலிகிறாள்; சோர்கிறாள். கோவலனும் கைப்பொருள்களை இழக்கின்றான். கண்ணகியின் அணிகலன்களும் அழிந்து ஒழிகின்றன. காற்சிலம்பு மாத்திரம் எஞ்சி இருக்கின்றது. கடற்கரையிலே மாதவி பாடிய கானல்வரிப் பாட்டு, கோவலனையும் மாதவியையும் பிரித்து விடுகின்றது. கோவலன் மீண்டும் கண்ணகியிடம் வருகின்றான். வாழ்ந்து கெட்ட வள நகரிலே இருப்பதற்கு வெட்கிக் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்படுகின்றான் கோவலன். எஞ்சி இருந்த சிலம்பை எடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குச் செல்கின்றான். அரண்மனைச் சிலம்பைக் களவாடிய கள்ளன் என்று அடாப்பழி சுமத்தப்படுகிறது. அரசன் ஆணை பிறக்கிறது. காவலர்கள் கோவலனைக் கொலை செய்கின்றார்கள். அறிகின்றாள் கண்ணகி. அரண்மனையை நோக்கி நடக்

கின்ருள். அரண்மனை வாயிலைக் காத்து நின்ற சேவகனைப் பார்க்கின்ருள். வல்லோசை செறிந்த வார்த்தைகள் வாயிலே வருகின்றன.

வாயி லோயே, வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே

என்று கூறி அநுமதி பெற்று அவைக்குள்ளே நுழைந்து மன்னன்முன் செல்கின்ருள் கண்ணகி. அழுத கண்ணும் அவிழ்ந்த கூந்தலும் மாசடைந்த மேனியும், மணிச்சிலம்பு ஏந்திய கையும் உடையவளாய் நிற்கின்ற கண்ணகியைப் பார்க்கின்ருன் காவலன். 'கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கின்ற மாதே, நீ யாரம்மா?' என்று கேட்கின்ருன்.

தேரா மன்ன செப்புவ துடையேன்
.......................................
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்தீங்கு
என்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதுஎன் பெயரே

என்று தன்னை அறிமுகம் செய்து வைக்கின்ருள் கண்ணகி.

............... பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேற் கொற்றம் காண்

என்று நீதி பேசுகின்ருன் மன்னவன்,

'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே, என் கணவன் கையில் இருந்தது என் சிலம்பு. அதன் உள்ளே அமைந்த பரல் மாணிக்கம்' என்கின்றாள் கண்ணகி. எடுத்து வருகின்றான் அரசன். உணர்ச்சி வசப்பட்ட கண்ணகி உடைக்கிறாள் சிலம்பை. உள்ளே இருந்த மாணிக்கம் துள்ளி விழுகிறது.

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்

என்று மயங்கி விழுகின்றான் மன்னன்; இறந்து படுகின்றான்.

முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்

என்ற பேருண்மையைக் கோப்பெருந்தேவியிடம் கூறுகின்றாள் கண்ணகி. கணவனை இழந்த கோப்பெருந்தேவியும் துயரத்தால் உயிர் துறக்கின்றாள்.

கற்பின் செல்வியாகிய கண்ணகியின் கதையை முத்தமிழ்க் காப்பியம் ஆக்கி உருப்படுத்திய இளங்கோ அடிகள் முப்பெரும் உண்மைகளை நமக்குச் சொல்கின்றார்.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்

நெறிமுறை தவறிய அரசர்க்கு அறமே யமனாகும் என்பதும், மாசிலாக் கற்புடைய மாதரை மண்ணும் விண்ணும் வணங்கும் என்பதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் சிலப்பதிகாரம் சொல்லித் தரும் செந்நெறிகளாகும்.

கந்தபுராணம்

இந்திராணியைத் தன் அண்ணன் சூரபன்மனுக்கு மனைவியாக்கிவிட வேண்டும் என்று விரும்புகின்றாள் அசமுகி. தன் விருப்பத்தை இந்திராணிக்கே சொல்லிவிடுகின்றாள். 'பெண்குலத்தின் பெருமையை அழிக்கப் பிறந்த பேதாய், தேவர்கோனைத் தவிர வேறு எவரையும் கனவிலும் கருதேன்' என்று மறுக்கின்றாள் இந்திராணி வடவைத் தீ என வெகுள்கிறாள் அசமுகி. இந்திராணியின் கையைப் பிடித்து உயிரை யமன் இழுப்பதுபோல் இழுத்துச் செல்ல முற்படுகின்றாள். ஐயப்ப சுவாமிக்கு அடைக்கலம் என அலறுகின்றாள் இந்திராணி.

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க் காதியே ஓலம் செண்டார்
கையனே ஓலம் எங்கள் கடவுளே ஓலம் மெய்யர்
மெய்யனே ஓலம் தொல்சீர் வீரனே ஓலம் ஓலம்.

ஆரணச் சுருதி யோர்சார் அடலுருத் திரனென் றேத்தும்
காரணக் கடவுள் ஓலம் கடல் நிறத்து எந்தாய் ஓலம்
பூரணைக் கிறைவா ஓலம் புட்கலை கணவா ஓலம்
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம் என்றாள்.

ஐயப்பரின் படைத் தலைவராம் வீரமகாகாளருக்கு எட்டுகிறது இந்திராணியின் பிரார்த்தனை. இடிமுழக்கக் குரலிலே 'நிறுத்து' என்று கட்டளை பிறக்கிறது.

'நீ யார் என்னைத் தடுப்பதற்கு' என்று மிடுக்காகக் கேட்கிறாள் அசமுகி.

இருவருக்கும் போர் மூள்கிறது. அசமுகியின் கரத்தைத் துணித்துக் காலால் உதைக்கிறார் வீரமகாகாளர். துன்முகியின் கரத்தையும் வெட்டி வீழ்த்துகிறார். அந்த நிலையிலும் அசமுகி அடங்கினாள் அல்லள். 'உலகையே அழிப்பேன்' என்று சீறி எழுகின்றாள். ஆறுதல் கூறுகின்றாள் துன்முகி. இறைவனையும் ஞானிகளையும் தவிர்ந்த

ஏனையோர்க்கு ஊழ்வினையினால் உண்டாகும் விளைவு நீங்காது என்று தேற்றுகின்றாள் துன்முகியின் வாயால் ஊழ்வினையைச் சொல்கின்றார் கச்சியப்பர்.

நினைவரும் கண்ணுதல் நிமலற் கேயலால்
அனையனை அடைதரும் அறிஞர்க் கேயலால்
எனைவகை யோர்க்கும்எவ் வுயிர்க்கும் ஏற்பதோர்
வினைபடும் இழிதுயர் விட்டு நீங்குமோ.

கந்தபுராணத்திலே இன்னும் ஒரு கட்டம் இங்கே நினைவுக்கு வருகிறது.

சூரன் அரியாசனத்தில் அமர்ந்து இருக்கின்றான். செந்திற்பதியில் பாசறை கொண்ட கந்தப்பெருமானுடைய படைத்திறமும் பிறவும் அறிகிறான். செய்யத் தக்கது யாது எனச் சிங்கமுகனையும் அறிவு அறிந்த அமைச்சர்களையும் பானுகோபன் முதலாம் மைந்தர்களையும் கேட்கிறான். ஒவ்வொருவராகப் பேசத் தொடங்கித் தத்தம் பெரு வலியை எடுத்து உரைக்கிறார்கள். சிங்கமுகன் சூரனை நோக்கிச் சொல்லுகின்றான்: 'அரசே, வானவரை வன் சிறையில் வைத்தாய்; கடலில் சென்று மீன் பிடித்துவரக் கட்டளை இட்டாய்; வானுலக மன்னன் இந்திரனுடைய அரசுரிமையைப் பறித்து வருந்த வைத்தாய்; செல்வம் எல்லாவற்றையும் கவர்ந்தாய். நூற்றெட்டு யுகம் மேன்மையுடன் வாழ்ந்து இருக்குமாறு திருவருள் புரிந்த சிவபிரான் தமது சத்தியே உன்னை வெல்லும் என்றும் சொல்லி அருளினார்! அதனால் அன்றோ அறுமுகன் வேற்படையினால் தாரகன் அழிந்தான். வானவர் வன் சிறையை நீக்குவாயாயின் முருகப்பெருமான் போர் செய்யக் கருதார். நமது குற்றத்தையும் திருவுள்ளத்திற் கொள்ளார். நாளையே கயிலைமலைக்குக் கடிது செல்வார்.'

பாழும் விதி விடவில்லை. சூரன் சீற்றம் கொண்டு பேசுகிறான்: 'நான் அழிவற்றவன்; திருமாலும் பிரமனுமே எனக்கு அஞ்சி இருக்கிறார்கள். எனக்கு ஒப்பாக ஒருவர் உளரோ! தனித்த ஒரு பாலகனே என் உயிரைக் கொல்வான்!'

சிங்கமுகன் மீண்டும் சொல்கிறான் : 'சிவனை நினைத்து அளவற்ற காலம் பெருந்தவஞ் செய்தாய்; அதனால் சிவன் வேண்டும் வரம் அளித்து அதற்கு ஒழிவையும் சொன்னார். வரத்தைக் கொடுத்தபிரான் தானே அழிப்பது முறைமை ஆகாது என்று குமரனைப் பிறப்பித்திருக்கிறான். அவன் சிவனுடைய திருநுதற்கண்ணில் தோன்றியவன்; மறைகளாலும் அறியப்பெருதவன்; ஞானம்தான் உருவாகிய நாயகன்; அவன் தன்மையை நானும் நீயுமா சொல்லவல்லேம்? மோனநிலை நீங்கா முனிவரே அவனைத் தெளிந்தாரல்லர். அழியா உடலைப் பெற்றேம் என்ற ஆணவத்தை விட்டு விடுவாயாக. பிறக்கும் உயிர்கள் எல்லாம் ஒருநாள் இறக்கும் என்று அறிஞர்கள் அறுதி இட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அவ்வாருக நீயா அழியாதிருக்கப் போகிறாய்? தேவர்களை நீ வருத்துவதைப் பார்த்து ஈந்த வரத்தினை இறைவன் தானே தவிர்ப்பாராயின், ஏன் செய்தீர் என அவரை வினவியே நிறுவுவார் யார்?

சூரன் சிங்கமுகனைப் பார்த்துச் சொல்கின்றான் : 'நீ புகழ்நத பாலன் காற்றிலே பறந்தவன்; நெருப்பிலே காய்ந்தவன்; கங்கை ஆற்றிலே மிதந்தவன்; சரவணப் பொய்கையிலே கிடந்தவன்; மாதர் பலரிடம் பால் உண்டு விளையாடியவன். இந்தப் பாலனைப் பரம்பொருள் எனப் புகழ்ந்தாய். உனக்கு வீரம் இல்லை; வெட்கம் இல்லை; மானம் இல்லை; மேன்மை இல்லை. அசுரர்களுடைய மேன்மையை நீ அழிக்கப் பிறந்தவன். நீ தவம் செய்யப் போவதே தகுதி.'

சிங்கமுகன் நல்ல அறிஞன். 'அண்ணனுக்கு அறிவுரை சொன்னேன். அவன் என்னை இகழ்ந்தான். அறிவிலார்க்கு உரைப்பவர் அவரின் பேதையர் ஆவர். விலக்கரும் விதியை யாவர் வெல்ல வல்லவர்?'

ஆவது விதியெனில் அனைத்தும் ஆயிடும்
போவது விதியெனில் எவையும் போகுமால்
தேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ
ஏவரும் அறியொணு ஈசற் கல்லதே

'ஆகும் விதியினால் எல்லாம் ஆகும். போகும் விதியினால் எல்லாம் போகும். ஈசன் ஒருவனால் அன்றித் தேவராலும் ஊழ்வினையை ஒழிக்க இயலாது. முருகப்பெருமானுடைய வேலால் இவன் இறந்துபடுவான். அதன் பின்னரும் நான் உயிரோடு வாழ்தல் முறைமை ஆகாது. அண்ணன் இறப்பதற்கு முன்னரே நான் இறத்தலே தக்கது' என்று முடிவு செய்கிறான்.

போர் எழுகிறது; எல்லோருமே மாண்டு மடிகிறார்கள்.

## இராமாயணம்

கம்பருடைய காவியத் தலைவன் இராமன் மணி முடியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். கிடைக்கிறது சடைமுடி.

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டில் வாஎன் றியம்பினன் அரசன் என்றாள்

ஆண்டுகள் பல அல்ல; ஏழிரண்டாண்டு என்று எளிமையாகச் சொல்லிவிடுகிறாள் கைகேயி. 'இயம்பினான் அரசன்' என்று தசரதன்மேல் பழியையும் போட்டு விடுகிறாள். அரசனாக மணிமுடிதரிக்க இருந்தவன் அரைக் கணத்திலே ஆண்டியாகிவிடுகிறான். அப்போது கோசலை,

வஞ்ச மோமக னேஉனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்குஎன்ற வாசகம்
நஞ்ச மோஇனி நான்உயிர் வாழ்வெனோ
அஞ்சும் அஞ்சும்என் ஆருயிர் அஞ்சுமால்

என்று அழுது புலம்புகிறாள்.

மெய்யைச் சிதைவித்து நின்மேல்முறை நீத்த நெஞ்சம்
மையிற் கரியாள்எதிர் நின்னைஅம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குநர் தேவ ரேனும்
துய்யைச் சுடுவெங் கனலில் சுடுவான் துணிந்தேன்

என்று சீறிச் சினக்கிறான் இலக்குவன். சோகத்தால் சோருகிறாள் அன்னை; கோபத்தால் கொதிக்கிறான் தம்பி. மனித ஆன்ம ஈடேற்றத்துக்கு வெற்றியைக் காட்டிலும் தோல்வியும், வாழ்வைக் காட்டிலும் தாழ்வும் பேருதவி புரிகின்றன என உணர்ந்தவன் இராமன். அன்னையிடம் சொல்கின்றான்;

சித்தம் நீதிகைக் கின்றதென் தேவரும்
ஒத்த மாதவம் செய்துயர்ந் தார்அன்றே
எத்தனைக்குள ஆண்டுகள் ஈண்டவை
பத்தும் நாலும் பகல்அல வோஎன்றான்

தம்பியைப் பார்த்து,

நதியின் பிழைஅன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழைஅன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழைஅன்று மகன்பிழை அன்று மைந்த
விதியின் பிழைநீ இதற்கென்னை வெகுண்டது என்றான்

'நமது பிதா, அன்னை கைகேயி, தம்பி பரதன் யாருமே நமக்குத் தீங்கு செய்யவில்லை. விதி செய்த பிழை; கோபப் படுவதால் ஆம்பயன் யாதும் இல்லை' என்று இருவரையும் தேற்றுகின்றபோது விதி செய்யும் சதியைச் சொல்லி விடுகிறான் இராமன்.

மாயமானின் குரலைக் கேட்டு மருண்ட இராமன் குடிலை நோக்கி நடக்கின்றான். வழியிலே இலக்குவன் விரைவாக வருவதைப் பார்க்கின்றான். இராமனுடைய உள்ளத்திலே ஒன்றன்பின் ஒன்றாகச் சந்தேகங்கள் எழுகின்றன. அண்ணன் சொல்லை மீறி அண்ணியை விட்டு வரக் காரணம் என்ன என்று சிந்திக்கின்றான். தன்

சொல்லை இதுவரையும் மீறி வாழாத இலக்குவன் வருகை இராமன் சிந்தையைக் கிளறுகிறது. தம்பியை ஆரத் தழுவி அன்புடன் வினவுகின்றான் இராமன். சீதை சினந் ததைச் சொல்கின்றான் இலக்குவன். சீதையைக் கைப் பற்றச் சிறியோர் செய்த சூழ்ச்சிகளை உணர்கின்றார்கள். சீதையைக் காணும் சிந்தையனாய்ச் சென்ற இராமன் சீதை யைக் காணாதவனாய் வெம்புகின்றான். தேர் சென்றது தென் திசையென அறிந்து இருவரும் அங்குச் செல்கின்ற னர். வழியிலே வீணைக் கொடியினையும் வில் முறிந்து கிடத்தலையும் காண்கின்றார்கள். சாகக் கிடந்த சடாயுவைத் தழுவிக் கொள்கின்றான் இராமன். விழித்துப் பார்த்த சடாயு விழி நீர் பெருக்கி நிற்கும் வில்லாளர் இருவரை யும் கண்கொண்டு பார்க்கின்றார். 'விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது' என்று அன்று கூறிய இராமனே தெளிவற்ற நிலையில் இருப்பதைப் பார்த்து நல்லுரை சொல்கின்றான் சடாயு

அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பம்தான்
விதிவயம் என்பதை மேற்கோ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ

'விதிக்குக் கட்டுப்படாதவர் யாண்டும் இல்லை. வாழ்க்கையில் வரும் இன்பத்துன்பங்கள் விதிக்கு உட் பட்டன. அறிவின் வலிமையால் ஊழை வெல்லுதற்கு வல்லமை உடையோம் அல்லோம்' என்று தேறுதல் சொல்கிறான் சடாயு.

வாழ்வியற் கருத்துக்களை வடித்துத் தந்த சிலப்பதிகாரம், கந்தபுராணம், இராமாயணம் என்னும் நூல்கள் விதியின் விளையாட்டை நமக்கு உணர்த்திச் செல்கின்றன. விளக்க மாகச் சொன்னால், நாம் அநுபவிப்பது விதி. அஃதாவது, முன்செய்த வினை பின்பு விளையும் முறை. ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவாது பயத்தல் அறத்தின்பாற்

பட்டது. உயிர்கள் பல பிறவிகளினூடு சென்று தாம் செய்த வினை வயத்தால் இன்பத்துன்பங்களை நுகரா நிற்கும் என்னும் கொள்கை பழங்குடி மக்களாம் தமிழர் கண்ட பேருண்மை. கண்ணில்லாக் குருடர்களாய், காதில்லாச் செவிடர்களாய், வாயில்லா ஊமைகளாய், காலும் கையும் இல்லா முடவர்களாய், ஒரு வேளைதானும் உணவு கிடைக்கப் பெருத தரித்திரர்களாய், எவ்வளவு அறிவு புகட்டினும் அது புகப் பெருத அறிவிலிகளாய்ப் பிறவி எடுத்துச் சிலர் உழல்கின்ருர்களே! இவர்களையும் ஒரு தாய்தானே பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தாள். இவர்கள் பிறந்ததற்கும் அங்ஙனம் துன்புறுவதற்கும் ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும். காரண காரியத்தொடர்பாய் வரும் இவ்வுலகிலே தாம் தாம் செய்த வினையைத் தாமே அநுபவிக்கிருர்கள்.

### வினை என்ன செய்யும்

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தப் பெருமான் நீங்காக் கொடுங்குளிர் நீங்கப் பாடி அருளிய திருமாமறை இங்கே நினைவுக்கு வருகின்றது.

சம்பந்தப்பெருமானர் திருச்செங்குன்றூர் என்னுந் திருப்பதிக்கு எழுந்தருளுகிருர். அந்நாட்டின் இயல்பால் குளிர் காய்ச்சல் அந்நாட்டவரை அன்றி உடன் வந்த அடியார்களையும் பற்றிப் பிடித்து நலிவுறச் செய்கின்றது. சம்பந்தப் பெருமான் இதனை அறிகிருர். 'எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம் என்றே' அவ்வினைக்கு இவ்வினை என்று எடுத்துச் செய்வினை தீண்டா திருநீலகண்டம் எனத் திருநெறிய தமிழ்மாமறையை ஒரு நெறியமனம் வைத்து ஓதி அருள்கிருர். சம்பந்தப் பெருமானின் நிறைமொழி ஆணையினல் அடியார் படுதுயர் அகல்கின்றது. திருச்செங்குன்றூரையே விட்டு அப்பிணி நீங்குகிறது. அத்திருமாமறையின் முதற்பாடல் இதோ:

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றுதிரு நீலகண்டம்

(அவ்வினை - சஞ்சிதம்; இவ்வினை - பிராரத்தம், ஊழ்)

முற்பிறவிகளில் செய்த வினை அவ்வினை. அவ்வினைப் பயன்களை இப்பிறப்பினில் அநுபவிப்பது இவ்வினை எனப் படும்.

மெய்யடியார்கள் தாம் தாம் செய்த வினை தாமே அநுபவிப்பார் என்ற முடிபுக்கு வந்து, முன் செய்வினைப் பயனை இப்பொழுது இத்துன்பத்தினை அடைகின்றோம் என்று முறையிடுகின்றார்கள். "இவ்வாறு சொல்வதற்கு அறிந்துள்ள நீவிர் அத்துன்பத்தினின்றும் விடுதலைபெற்று நலமே வாழ அறியவில்லையே; அதற்கு உய்வைத்தேடா திருப்பதும் ஊனம் அல்லவா! சரியை முதலாம் சிவப் பணி செய்து திருவடியினைப் போற்றுவோம்; நாம் செய்த வினை நம்மைத் தீண்டாது; அவ்வினை செயல் அற்று ஓடுங்கும். திருநீலகண்டத்தின் மீது திருவருளால் திரு வாணை" என்று பாடி அருள்கின்றார் திருஞானசம்பந்தப் பெருமான். ஊழ்வினைக்கு அஞ்ச வேண்டாம் என்று நமக் கும் நெஞ்சிலே உரம் ஏற்றுகின்றார்.

சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

என்று தமிழ்மூதாட்டி ஔவைப் பிராட்டியும் நமக்கு நல்லறிவு தருகிறாள்.

அல்ல லாகஐம் பூதங்கள் ஆட்டினும்
வல்ல வாறு சிவாய நமஎன்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே

என்ற அப்பர் பெருமானின் திருமாமறையும் இங்கே நினைவு கூர்தற்பாலது.

விதிக்குச் சதி செய்ய வேண்டுமானால் புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும்; பாவச் செயல்களை விலக்க வேண்டும் என்று நல்வழியைச் சொல்ல வந்த ஔவையார் முதற் பாட்டிலேயே பாடிவிட்டார்:

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் — எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்

வாழ்வு நமக்கு வளமாக வாய்க்கவில்லை என்றால் அது விதியின் பிழை ஆம்! மறுக்க முடியாது. எனினும், கம்பளிச் சட்டை இருந்தால் குளிர் தேசத்திலும் குளிரினால் நடுங்கமாட்டோம். குளிர் தேசத்தில் குளிர் இருக்கும். கம்பளிச் சட்டையினால் குளிரின் தாக்கம் இல்லாமல் போகும். அதுபோலே, முருகன் திருவருளாகிய கம்பளிச் சட்டை இருந்தால் விதியின் உறைப்பு நம்மைத் தாக்க மாட்டாது; அப்போது நாம் பாடலாம்.

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடும் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே

முருகன் திருவருள் இருந்தால் வினைதான் என்ன செய்யும்?

# முருகனுக்கும் ஒரு கவலை

## திருப்பாணாழ்வார் கதை

ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறமாக இருக்கின்ற குடிசைகளில் வசித்து வருகிறார்கள் பாணர்குல மக்கள். அக்குலத்தில் தோன்றுகிறார் திருப்பாணர். இசைக்கலையில் பெருவிருப்பம் மீதூர இன்னிசை வீணையை ஏந்திப் பாடி ஏற்றம் பெறுகிறார். திருவரங்கப் பெருமான் மீது பக்தக் காதல் பெருக அப்பெருமான் குண நலன்களைப் பாடிப் பரவசநிலை எய்துவார் அவர். காவிரி ஆற்றிலே நீராடுவார். திருவரங்கப் பெருமானுடைய திருக்கோயில் விமானத்தை நோக்கி யாழ் எடுத்து உடல் புளகித்து உரோமஞ் சிலிர்ப்பக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடுவார்.

அரங்கநாதனுடைய திருமஞ்சனத்துக்கு வேண்டிய தீர்த்தக் கைங்கரியத்தைச் செய்துவரும் ஸ்ரீ லோகஸாரங்க முனிவர் ஒருநாள் பொற்குடத்துடன் பொன்னித் துறைக்கு வருகிறார். பாடலிலே தம்மை மறந்து உலகை மறந்து நிற்கும் பாணரைப் பார்க்கிறார். பாணரை அப்பால் போய்விடுமாறு பக்கத்திலே நின்றவர்கள் பணிக்கிறார்கள். பக்தி மயமாக நின்ற பாணருடைய காதில் அது ஏற வில்லை. பக்தராக இருந்தபோதிலும் குலாசாரப் பழக்கங்களுக்கு அடிமையாகவே இருந்த ஸ்ரீ லோகஸாரங்கருக்குச் சீற்றம் மேலிடுகிறது. சொல்லை வீசிப் பயன் இல்லை என்று அருகே நின்ற ஒருவன் கல்லையே வீசுகிறான். பாணர் நெற்றியில் இருந்து இரத்தம் பெருகுகிறது. ஸ்ரீ லோக ஸாரங்கர் திடுக்கிடுகிறார். பாணருக்கு அப்போதுதான் புற உணர்ச்சி வருகிறது. 'மன்னிக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறுகிறார். ஸ்ரீ லோகஸாரங்கரும் கடமையை முடித்துக்கொண்டு இல்லத்துக்குச் செல்கிறார்.

அன்றிரவு ஸ்ரீ லோகஸாரங்கருக்கு உறக்கம் வராது படுக்கையில் புரண்டு கொண்டே இருக்கிறார். கான

மழை பொழிந்து நின்ற பாணர் கல்மழையால் நனைந்து நின்ற நினைவு அவரை உறுத்துகிறது. கலங்கிய உள்ளம் களைத்துச் சற்றே உறங்குகிறது. திருப்பாணரின் நெற்றியிலா? இல்லை; திருவரங்கப்பெருமானுடைய நெற்றியில் இரத்தம் பெருகுவதை அச்சத்துடன் பார்க்கிறார். அரங்கநாதனுடைய அழகு ஒழுகு நெற்றிச் செந்நீர் திருமேனியிலும் பெருகுகிறது. பரிவுடன் கேட்கிறார், 'விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசனே, நின் பொன்மேனியைப் புண்மேனியாக்கத் துணிந்தவர் யாரோ?' 'பாணர் உள்ளத்திலே அவர் பாட்டுக்கு உருகி ஆனந்தமாக இருந்தபோது பட்ட காயம் அப்பா இது' என்று பவளவாய் திறந்து பகவான் சொல்கிறார். 'ஐயோ, நான் பாவி, நான் பாவி' என்று அலறுகிறார் ஸ்ரீ லோகஸாரங்கர். 'அஞ்சற்க; அந்தப் பாணராம் பக்தனை இன்று நம்முடைய சந்நிதிக்கு எப்படியாவது அழைத்துவா' என்று ஆண்டவனிடமிருந்து ஆணை பிறக்கிறது. ஸ்ரீ லோகஸாரங்கர் எழுந்து விடுகிறார்.

'இது கனவா; இல்லை, இல்லை. அரங்கநாதப் பெருமானுடைய திருவுளக் குறிப்பைப் பாணர் வாயிலாக அறிந்தேன், அறிந்தேன்' என்று துள்ளிக் குதிக்கிறார். பாணரைத் தேடி ஓடுகிறார். பாடிக்கொண்டிருந்த பாணரை நெருங்குகிறார். பாணரும் விலகி விலகி ஓடுகிறார். பாணருடைய பாதம் பணிந்து ஸ்ரீ லோகஸாரங்கர் சொல்கிறார். 'தேவரீர் எம்பெருமான் சந்நிதிக்கு எழுந்தருள வேண்டும்; இது நம் பெருமான் 'கட்டளை! 'நீசனேன் நிறைவு ஒன்றும் இல்லேன்; திருவரங்கப் புண்ணிய பூமியிலே அடிவைக்கலாமா?' என்று தயங்குகிறார் பாணர். 'அப்படியானல் அடியேன் தோள்மேல் ஏறி அருள்க' என்று பாணரைத் தோளிலேயே ஏற்றிக் கொண்டு புறப்பட்டு விடுகிறார் ஸ்ரீ லோகஸாரங்கர். அடியவர்கள் எல்லோரும் புடைசூழத் திருப்பாணரைத் தோளிலே தூக்கிக் கொண்டு, இந்தக் கைங்கரியம் தமக்குக் கிடைத்ததே என்ற எக்களிப்புடன் திருவரங்கப் பெருமானுடைய திருவீதியை வலம்

வந்து கோயிலுக்குள் செல்கின்றார். எம்பிரானைக் கண்ணாரக் கண்ட திருப்பாணர் தோளில் இருந்தும் இறங்கிப் பாடுகிறார்.

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே

பாட்டுக்கு உருகிய திருவரங்கப் பெருமான் திருப்பாணாழ்வாரை அன்றே அப்போதே அப்படியே அத்திருமேனியுடன் தன்னுடன் ஏற்றுக் கொண்டான்.

திருப்பாணாழ்வார் திவ்விய சரிதம் கல்வித் திமிர், சாதித் திமிர் என்ற இன்னோரன்ன செருக்குகளை அகற்றி நம்மையும் வாழ வழிகாட்டும். அடியவர்களைப் புலையர் என்று பழித்தால் பழித்தவர்களே புலையராகிவிடுகிறார்களாம். இந்தத் தண்டனை மறுபிறப்பில் கிடைப்பதன்று. பழிப்பது ஒரு கணம்; பழித்தவர்களே புலையராவது மறு கணம். சந்தேகமே இல்லை.

### அந்தணப் பெருமக்கள்

பிறப்பினால் கற்பிக்கப் பெறுகின்ற, நிலவி வருகின்ற சாதி உணர்வுகள் சமய நெறிக்கும் சமுதாய நெறிக்கும் முரண்பட்டன. அறுவை வைத்தியம் செய்வதற்குப் பிறப்புரிமையினால் தகுதி வந்துவிடமாட்டாது. பயிற்சி பெற்ற யாரும் தகுதி உடையவர். அதே போல் கலைஞானங்களுக்கும் சிவஞானத்துக்கும் பிறப்புரிமை கிடையாது. அறிவும் ஒழுக்கமும் உடைய எம்மனிதனும் வேண்டுமானால் 'வேதவித்' ஆகலாம். மனிதனை நல்ல மனிதன் ஆக்குவது அறச்செயல். ஒருவன் அறநெறிநின்று உயர்நிலை அடைய விரும்பினால், அவன் எந்நாட்டவன் ஆயினும், எக்குடியில் பிறந்தவன் ஆயினும் அவனுக்கு ஏற்ற வாய்ப்பை அமைத்துக் கொடுக்கவே வேண்டும். யாண்டும் அறப்பணி ஆற்றியே

அன்று தொட்டு இன்று வரையும் எம்நாடு உயிர் வாழ்ந்து வந்திருக்கிறது. தேசசரித்திரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் வெவ்வேறு காலங்களில் செந்நெறி கடைப்பிடித்து வாழ்ந்த செம்மல்கள் சமுதாயத்தில் மேல் நிலையில் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சமுதாயம் பிறப்புக்குச் சிறப்பு வழங்காது பண்புக்குச் சிறப்புக் கொடுத்தேயாக வேண்டும். உயர் குலத்தில் பிறந்தவனிடத்து உயர் குணம் இருக்கும் என்று உறுதி கூறிவிட முடியாது. நற்குணம் உடையவன் எக்குடியில் பிறந்தாலும் நல்லவனே; தீக்குணம் உடையவன் எக்குடியில் பிறந்தாலும் தீயவனே. தத்துவபூர்வமாகப் பார்க்குமிடத்துக் குலத்திலும் பெரியது குணமே.

நன்மகன் ஒருவனுக்கு எடுத்துக்காட்டாயிருப்பவன் அந்தணன். 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் இறை வணக்கம் ஏனைய வணக்கங்களுக்கு முன்னணியில் நிற்கின்றது. அந்தணர் என்போர் ஒரு தனிப்பட்ட சாதியினரல்லர். வாழ்க்கையில் மிகவும் பண்பட்டவன், மெய்யறிவு படைத்தவன், உள்ளன்புடன் உயிர்களை ஓம்புவன் அந்தணன். சமுதாயப் பழக்க வழக்கத்தின்படி பிராமண வமிசத்தில் பிறந்துள்ள ஒவ்வொருவனும் பிராமணன் என்றே அழைக்கப்படுகின்றான். பிராமண சுபாவமும் கர்மமும் இல்லாதவனாயினும் அத்தகையவனைப் பிராமணன் என்றே அழைப்பது உலக நடைமுறையாய் இருக்கிறது. உண்மையைச் சொல்லப்போனால், அவன் பிராமணன் அல்லன். பிரம்மவித்தைக்கு ஏற்ற புனித வாழ்வு வாழ்பவர்களே பிராமணர்கள்.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்று வள்ளுவரும் வரைவிலக்கணம் கூறுகிறார்.

'எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்பது அந்தணரது அரும் செயலாக இருக்கவேண்டும்.

தெய்வ வழிபாட்டுக்கென்றே ஒப்படைத்த பாரமார்த்திகப் பெருவாழ்வை வேதியன் வேறெதிலும் விரயம் செய்ய மாட்டான். புலனடக்கத்தில் வெற்றி பெற்றவன் பிராமணன். புலால் உடம்புக்கு யாண்டும் முதன்மை கொடுப்பவன் புலையன். அவரவரது பரிபாகத்துக்கு ஏற்ப மக்கள் இவ்விரு தரந்தினர்க்கும் இடைநிலைகளில் வைத்து எண்ணப்படுகின்றார்கள். 'வைதிகச் சடங்குகள் எல்லாம் நல்வாழ்வு என்னும் செடிக்கு வேலிகட்டுவதற்குச் சமானம்' என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்வார். நல்வாழ்வு என்னும் செடியில்லாது வெறும் வைதிகம் என்னும் வேலி கட்டிக் கொள்வதில் அர்த்தம் ஒன்றுமே இல்லை.

அப்பூதியடிகளார் அந்தணரில் மேம்பட்டவர். நாவுக்கரசர் நல்ல வேளாளர் குலத்திலே அவதரித்தவர். அவர் தம்மை அப்பூதியடிகளுக்கு 'அருளு பெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்' என்று அறிமுகம் செய்கிறார். அவ்வுரை கேட்ட அப்பூதியடிகள் உடனே நிலமிசை வீழ்ந்து வணங்குகிறார்.

இதனைச் சேக்கிழார் பாடுகிறார்:

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகம லம்பூண்டார்

நாங்கள் உயர் குடிமக்கள், எங்கள் கோத்திரம் இன்னது என்ற இறுமாப்பினால் கர்மானுஷ்டானங்களை அன்பின்றிச் செய்து வருபவர்கள் எவ்வித பயனும் அடைய மாட்டார்கள். சிவனே முழுமுதற் கடவுள் என்ற அன்போடு வணங்கினால் மட்டும் ஒரு நொடிக்குள் திருவருள் இன்பம் கிடைக்கும் என்று அப்பரே பாடுகிறார்:

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண்டு என்செய்வீர்
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே

அகத்தேயுள்ள சிவநேயம் என்கின்ற சிவநெருப்பி னால் சிவனடியார் உடம்பு தூய்மையடைந்து ஒளி உடம்பாகும். சிவநேயம் உடையார்க்கு அகக்கருவி, புறக்கருவிகள் எல்லாம் சிவஉருவாய் விளங்கும். அவரைச் சிவமாகவே கொண்டு வழிபடல் வேண்டும் என்னும் உண்மையையும் நாவுக்கரசரே பாடுகிறார்:

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வான்ஆளத் தருவர் ஏனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்
அங்கம்எலாங் குறைந்துஅழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுஉழலும் புலையர் ஏனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின் நமனில்லை' என்பது செந்தமிழ்த் திருமுறையின் சிறந்த தமிழக ஒழுக்கத் திருமந்திரம்.

அந்தணர் என்று பேசப்படுவோர் அறவோர். அவர் பிறப்பற முயல்பவர்; இறைபணி நிற்கும் முறையினர்; தம்முனைப்பு அற்றுத் திருவருள் முனைப்பால் செய்யும் தொழிலினர். தொழிலின் பயன் செய்தாரைச் சாராது அற்றதொழில் ஆதலின் அந்தணர் செய்யும் தொழில் அறுதொழில் ஆயிற்று. அந்தணர் உரிய காலத்தில் செந்தழல் ஓம்பும் செம்மையை உடையவர்; சிவனை வழிபடும் நற்றவத் தொண்டில் உறைத்து நிற்பவர்; தங்களை அதற்கெனவே ஒப்புவித்து ஓதவேண்டிய போதெல்லாம்

திருமுறைகள் ஓதிச் செய்யும் பணியைச் சிறப்புறச் செய்ப வர். இதனைத் திருமந்திரம்,

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமம்செய்து
அந்தவ நற்கரு மத்துநின் றங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே

என அருமையாகப் பாடுகின்றது.

நக்கீரர் காட்டும் அந்தணர்:

அந்தண அடியார்கள் முருகனைத் திருவேரகத்தில் வழிபடுகிறார்கள். இதனைப்பாட வந்த நக்கீரர் தம் திரு முருகாற்றுப்படையில் அந்தணர் இயல்பைப் பேசுகிறார். அந்தணர்கள் நூல்கள் ஓதுவார்கள்; பிறர்க்கும் சொல்லி வைப்பார்கள். வேள்வி செய்வார்கள்; மற்றவர்களுக்கும் வேள்வி செய்து வைப்பார்கள். தமக்கு மற்றவர்கள் செய்யும் உதவியை ஏற்றுக் கொள்வார்கள்; தாமும் பிறர்க்கு உதவி செய்வார்கள். வேதம் ஓதுதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேள்வி செய்தல், செய்வித்தல் என்னும் ஆறுகாரி யங்களைச் செய்யும் முறைமையினின்றும் வழுவாத வர்கள். இவர்களுடைய தாய் வழியும் தந்தை வழியும் மேற்காட்டிய ஒழுக்கங்களால் மதிப்பு வாய்ந்தவை. நாற் பத்தெட்டு வருடம் பிரமச்சரிய விரதத்தை நன்னெறி யில் கழிப்பார்கள். ஞானப்பெருக்கமும் அதன் பாதுகாப் பும் இவர்கள் நோக்கமாகும். எப்பொழுதும் தர்மத் தையே பேசும் விரதம் பூண்டவர்கள். வேள்வித்தீ இவர் கள் அரும் பெருஞ் செல்வம். இது மூன்று வகையான உண்மைகளைக் குறித்த மூன்று வடிவக் குறிப்புடையது. (நாற்சதுரம், முச்சதுரம், வில்வடிவு) இதனால் இது முத்தீ என அழைக்கப்படுகின்றது. ஆகவனீயம், தக்கி ணாக்கினி, காருகபத்தியம் என்பன முத்தீ. அம்மூன்று தீயினையும் ஓம்பும் இயல்புடையவர்கள் அந்தணர்கள். இந்த அக்கினிக் காரியங்களைச் செய்வதனால் நாடு செழிக்க மழை பெய்யும்; வறுமை நீங்கிச் செல்வம்

பெருகும். ஆகவே, எல்லாச் செல்வங்களுக்கும் காரண மான முத்தீயைச் செல்வமாகப் பெற்றவர்கள் அந்தணர்.

அந்தணர்களை இருபிறப்பாளர் என்பர். உபநயனத் துக்கு முன் ஒரு பிறப்பும் அதன் பின் வேறொரு பிறப்பும் எடுத்ததாகக் கருதப்படுவர். ஆதலின் இவர்களை இரு பிறப்பாளர் என்று கூறுவர். வடமொழியில் 'த்விஜர்' என வழங்குவர். இவர்கள் காலமறிந்து வேதத்தாலும் பிறதோத்திரங்களாலும் முருகனை வழிபடுவார்கள்.

அந்தணர் அணியும் பூணூல் மூன்று புரிகளை உடையது. ஒவ்வொரு பகுதியும் ஒன்பது நுண்ணூல்களால் அமைந்தது. ஒன்பது நுண்ணூல்களை (இழைகளை) நவசக்திகளாகவும் மூன்று புரிகளை மும்மூர்த்திகளாகவும் கொண்டு விளங்கும் பெருமையுடையது அவர்கள் அணியும் பூணூல்.

அந்தணர்கள் நீராடிய ஈர ஆடையை உலர்த்தாமலே கட்டிக் கொள்கிறார்கள். அந்த உலராத ஈர ஆடை உடம்பிலேயே கிடந்து உலர்கின்றது. தலைமேலே தம் கைகளைக் குவித்துக் கொண்டு ஆறு எழுத்துக்களைத் தன் பாற்கொண்ட அரிய உபதேசமந்திரமாம் நமோகுமாராய (சரவணபவ) என்னும் முருக மந்திரத்தைத் தமது நாக்கு அசைகிற அளவில் உரக்கச் சொல்லாமல் பலமுறை உச்சரிக்கிறார்கள். மணம் பொருந்தித் தேன்பிலிற்றும் தூய மலர்களை ஏந்திய கையினராக வந்து தூமலர் தூவிப் பெருமானைப் போற்றிப் பணிகின்றார்கள். இந்த வழிபாட்டிலே மிக மகிழ்ந்து திருவேரகம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பான் முருகன்.

இதோ திருமுருகாற்றுப்படை:

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்

திருமுருகாற்றுப்படையிலே முனிவரர் மாட்சியும் பேசப் படுகிறது. திருவாவினன்குடிக்கு வருகின்ற தேவர்கள் முருகனுக்கு உவப்பான அன்பர்களை முன்னிட்டுக் கொண்டு உள்ளே புகுகிறார்கள். அவ்வாறு முன்னாலே திருக்கோயிலுக்குள்ளே புகும் அணுக்கத் தொண்டர் முனிவர்கள். அவர்கள் மரவுரியினால் செய்த உடையை உடையவர்கள்; அழகு பொருந்திய நரை முடியை உடையவர்கள். அந்த முடி நிறத்தாலும் உருவத்தாலும் வலம்புரிச் சங்கைப்போலத் தோன்றுகிறது. உடம்பில் ஒரு தனி அழகு பொலிகிறது. அவர்கள் பலமுறை நீராடுவதனால் மாசு இம்மியளவேனும் இல்லாது ஒளிவிடுகின்ற உருவமுடையவர். அங்கே தூய்மையின் ஒளி சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றது. திருமேனியில் மான் தோலைப் போர்த்திருக்கிறார்கள். அவர்கள் பல நாள்கள் பட்டினி கிடந்து விரதம் காத்தவர்கள். அதனால் மார்பில் தசைப்பற்று அற்றுப்போய் எலும்புகள் எண்ணிக் கொள்ளத்தக்கனவாய் காணப்படுகின்றன. உடல்போல் உள்ளமும் மாசு நீங்கி விளங்குகிறது. பகை, மாறுபாடு என்பன உள்ளத்தில் இல்லை. அவர்கள் கற்றோர் சிறிதும் அறிந்து கொள்ளமுடியாத பேரறிவினை உடையவர்கள். நூல்களைக் கற்ற எல்லோரையும் கற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாது. இறையருளும் ஒழுக்கமும் வாய்க்கப் பெறாதவர்கள் உண்மையான அறிவினை உடையவர்கள் அல்லர். ஆனால்,

இம்முனிவர்களோ கற்றவர்களும் அறியாத மெய்யறிவினைப் பெற்றவர்கள். கற்றோர்க்குத் தாம் வரம்பாக நிற்கும் தலைமையை உடையவர்கள். ஆசையும் சினமும் அற்ற மெய்ஞ்ஞானச் செல்வர்கள்; உள்ளத்தில் துயரென்பதைச் சிறிதும் அறியாத இயல்பினையுடையவர்கள். அவர்கள் யாரிடத்தும் எப்பொருளிடத்தும் வெறுப்பு இல்லாத அறிவுத் தெளிவினையுடையவர்கள். இத்தகைய முனிவர்கள் முன்னே செல்லத் தேவர்கள் முருகப்பெருமானைத் தரிசிக்கத் திருவாவினன்குடிக்கு வருகின்றார்கள். இந்த அற்புதக் காட்சியை நக்கீரர் நமக்குக் காட்டுகிறார்:

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முற்புக

இங்கே கூறப்பட்ட முனிவர்களையும் அந்தணர் என்றே சொல்லிவிடலாம். துறந்தார்களையும் அந்தணர்களையும் முனிவர்கள் என்று அழைப்பது பழைய பெருவழக்கு.

## ஒன்றே குலம்

'சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:' என்பது கீதை, குணத்துக்கும் கர்மத்துக்கும் ஏற்ப அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்படும் நான்கு வர்ணங்களும் வந்தவாறெங்ஙனே என்று விளக்குகின்றான் கண்ணபரமாத்மா.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்று தமிழ்நாட்டின் புகழ்க்கொடி நாட்டிய திருக்குறள் பேசுகிறது.

நாலு குலங்கள் அமைத்தான் — அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு கருமம் — இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே — வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம் — இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும்
நன்மை உண்டென்பான்

என்று பாரதியும் இதை மேலும் தெளிய வைக்கின்ருன்.

நம்மை நாமே அந்தணர்களாக்கிக் கொள்ள வேண்டும். வம்ச பரம்பரையாகச் சாதிப் பிரிவினை வளர்ந்து சமுதாயத்திலே மாசு ஏறிப்போய் ஊறிப்போய் இருக்கிறது.

மகாபாரதத்தில் உதிட்டிரர் சொல்கிருர் ;

"ஓ சர்ப்பராசனே, சத்தியம், தர்மம், நற்குணம், மன்னிக்கும் தன்மை, நன்னடத்தை, பொறுமை, புலனடக்கம், இரக்கம் எவனிடம் காணப்படுகின்றனவோ அவனே பிராமணன் எனப்படுவான். இக்குணங்கள் ஒரு சூத்திரனிடமிருந்து ஒரு பிராமணனிடம் இல்லையாயின், அந்தச் சூத்திரன் சூத்திரன் அல்லன் ; அந்தப் பிராமணன் பிராமணன் அல்லன்.''

தமிழ் நாகரிகம் சிதையாவண்ணம் தடுத்து நிறுத்திய கம்பன், அரச குடும்பத்தில் பிறந்த இராமனையும் வேடர் குலத்துதித்த குகனையும் அரக்கர் குலத்து விபீஷணனை

யும் வானர இனத்துச் சுக்கிரீவனையும் உடன் பிறந்தவர்களாக்கி அல்லவா காவியம் செய்கிறான்.

குகனோடும் ஐவரானோம் முன்பு, பின்குன்று சூழ்வான்
மகனோடும் அறுவரானோம், எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல்ஐய, நின்னோடும் எழுவர் ஆனோம்
புகல்அருங் கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை

குகன், சுக்கிரீவன், விபீஷணன் ஆகியோரைத் தசரதரின் புதல்வர்களுக்குச் சகோதரர்களாக்கி விடுகிறான் கம்பன்.

வாழ்வியலில் பல நுட்பங்களையும் கொண்ட பெருநூல் கந்தபுராணம். இங்கே நாம் பேசிய கருத்துக்கள் அத்தனைக்கும் உருவம் கொடுக்கிறார் கச்சியப்பர்.

சிறியர் என்றும் சிலரைச் சிலரைமேல்
நெறியர் என்றும் நினைவது நீர்மையோ
இறுதி யில்உயிர் யாவும்ஒன் றேயென
அறிதல் வேண்டும்அஃது உண்மைய தாகுமே.

கச்சியப்பருக்குச் சமுதாயச் சிந்தனை எவ்வளவு இருந்திருக்கிறது! 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலரின் தேன்மொழிக்கும் இக்கந்தபுராணச் செய்யுள் விளக்கமாக அமைகிறது.

## முருகன் கவலை

சாதிப் பெயர்களைத் தொனிக்கும்படி வைத்துச் சொல் நயத்தால் சுவையை மிகுதியாக்கி அலங்காரம் பண்ணுகிறார் அருணகிரியார். இதோ அந்த அலங்காரம் :

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வரும்ஆ குலவனைச் சேவல்கைக் கோளனை வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப்
பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

இரும்பு வேலை செய்யும் தொழிலாளி கருமான். செம்மான் தோல்தைக்கும் தொழிலாளி. கருமானுடைய மருகன் செம்மானுக்கு மாப்பிள்ளையாகிறார். ஆகுலவன் வேடுவன். கைக்கோளர் என்பது செங்குந்தர் குலப்பெயர். இவர்கள் நெய்தல் வேலையைச் செய்பவர்கள். வேலன் மலைவாழ் சாதியினன். இந்தப் பாடலிலே எல்லோரையும் நினைவூட்டிக் கீழ்சாதி, மேல்சாதி என்ற பிரிவினையே வேண்டாம் என்று நமக்குச் சொல்வதுபோல் பாடுகிறார் அருணகிரிநாதர். முருகனை வாயார வாழ்த்துவது ஒன்றே சாலநன்று என்றும் சொல்லித் தருகிறார். சாதிப் பெயர்களைத் தொனிக்க வைத்துப் பாடினாலும் இயல்பான பொருளுக்கும் சாதிப் பெயர்களுக்கும் தொடர்புஇல்லை. சொல் நயம் சுவைத்தற்கு உரியது.

'கரிய நிறமுடைய திருமால் மருகனை—செந்நிறமான உருவில் வந்த திருமகளுடைய மகளாகிய வள்ளிநாயகியைப் பிறர் அறியாதே எடுத்துவரும் கவலை உடையவனை—சேவற் கொடியைக் கையிலே கொண்டவனை—தேவலோகத்திலுள்ள அமரர்கள் உயிர் பிழைக்கும் வண்ணம் அவர்களோடு சமரம் புரிந்த சூரனும் மாமரத்தை அழித்த போரில் சிறந்த வேற்படையை உடைய வேலவனை—குலை ஈனுத கமுகமரங்களுடன் பழங்களைத் தருகின்ற மாமரங்களும் பொருந்திய திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட முருகனை வாழ்த்துதல் சாலவும் நன்று' என்பது இந்தப் பாட்டின் அருமையான பொருள்.

சாதிகள் எல்லாம் இறைவனோடு தொடர்புடையன என்ற எண்ணம் நமக்கு வரவேண்டும் என்பது அருணகிரியாரின் கருத்தாக இருக்கலாம். சமுதாயம் வளர வேண்டுமானால் சாதிப் பாகுபாடு இருக்கவே கூடாது. முருகன் செம்மான் மகளைக் களவுகொண்டு வரும் ஆதுலவன். ஆகுலவன் என்றால் கவலை உள்ளவன் என்பது பொருள்.

வேடுவர்பு னத்திலுரு மாறிமுனி சோற்படிவி
யாகுல மனத்தி னொடுபோம் விற்காரனும்

என்று திருவகுப்பிலேயும் அருணகிரியார் பாடுவார்.

முருகனுக்கும் ஒரு கவலை என்ற பொருளில் அருணகிரியார் பாடுவதை நினைக்க நினைக்க நெஞ்சம் உருகாமல் இருக்க முடியுமா? முருகப் பெருமான் மலைக்குறமகள்-வேடர் குலக்கொழுந்தாம் வள்ளிக்கு மாலையிட்டு மணம் புரிந்த வள்ளி சன்மார்க்க நெறியில் பொதிந்து கிடக்கும் பொருள் எத்தனை! எத்தனை!!

---

# உயிரைக் காத்துக்கொள்ள ஒரு பாடல்

தாய்க்குரங்கு ஒரு மரத்திலிருந்து வேறொரு மரத்துக்குத் தாவிக் குதித்துச் செல்லும். அப்போது குட்டி தாயை விடாப்பிடியாக இறுக்கிப் பிடித்துக் கொண்டு இருக்கும். குதித்து விளையாடும் போதெல்லாம் குட்டியும் ஒட்டிக்கொண்டே இருக்கும். குட்டி சிறிதாக இருந்தாலும் பிடி பெரிதாக இருக்கும் பிடி தவறினால் குட்டியின் கதி அதோகதி. தாயைப் பற்றிப் பிடிப்பதில் குரங்குக் குட்டி ஈடும் இணையும் இல்லாதது.

பூனைக்குத் தன் குட்டிகளிடம் அளவு கடந்த ஆசை. அது ஏழு வீடு சென்றாலும் குட்டிகளையும் துக்கிக்கொண்டே செல்லும். தூக்கிக்கொண்டு செல்வதில் ஓர் இரகசியம் இருக்கிறது. குட்டியின் முதுகில் வாய்வைத்துக் கடித்துத் தூக்கிச் செல்லும். தாய் கடித்துத் தூக்கிச் செல்வதால் குட்டிக்கு நோ இருக்குமோ என்றால் இல்லவே இல்லை. எத்தனை குட்டிகள் இருந்தாலும் அத்தனை குட்டிகளையும் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்குத் தூக்கிச் செல்லும். தூக்கிச் செல்கிற வேலை தாயினுடையது; கடித்துப் பிடிக்கும் வேலையும் தாயினுடையதுதான்.

திருவருள் நலன் நமக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவனும் இப்படியே எம்மிடம் நடந்து கொள்கின்றான். குரங்குக் குட்டி தாயைப் பற்றிக் கொள்வதுபோல் நாமும் இறைவனை இடைவிடாது பற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு சிலருக்கு அருள்வருகிறது. வேறு சிலருக்கு இறைவனே வந்து பூனையைப்போல் அன்பு காட்டி, அணைத்து எடுத்து, நோவாமல் கடித்து அருள் பாலிக்கின்றான்.

மேலே கூறப்பட்ட உறவு முறையை மர்க்கட சம்பந்தம், மார்ச்சால சம்பந்தம் என்று சொல்வார்கள். மர்க்கடம் என்றால் குரங்கு; மார்ச்சாலம் என்றால் பூனை.

ஆண்டவன் நாவுக்கரசரை மர்க்கட சம்பந்தமாக ஆட் கொண்டான். அவர் ஆண்டவனை அடைய வேண்டி எத்தனை எத்தனை இன்னல்களுக்கு எல்லாம் ஆளானார். கடலில் தள்ளப்பட்டார்; சுண்ணாம்பு அறையில் அடைக் கப்பட்டார். ஆனால், மாணிக்கவாசகரை எம்பிரான் ஆட் கொள்ளவேண்டும் என்று மார்ச்சால சம்பந்தமாகத் திரு வுருவத்தைக் காட்டி ஆட்கொண்டான். இதை மாணிக்க வாசகரே பாடுகிறார்.

அந்தணன் ஆகி ஆண்டுகொண்டு அருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும்
உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்
பூவணம் அதனில் பொலிந்திருந்து அருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

என்ற இன்னோரன்ன இறைவன் திருவிளையாடல்களுக்கு எல்லைதான் ஏது?

*கண்ணப்பரின் கனிந்த அன்பு*

கண்ணப்பநாயனார் காளத்திநாதனிடம் ஆராத காதல் அளப்பரிதாகி வளர, நாளாறில் கண் இடந்து அப்பினார். இதை மணிவாசகர்,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி

என்று வாயூறிப் பாடுவார். 'நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்' என்றல்லவா இந்த அன்பைப்

பட்டினத்தார் பாடுகிறார். நாமும் அன்பு பாராட்டுகிறோம்; குறை இரக்கிறோம். வேண்டத்தக்கது அறிபவன் அவன் என்பதைத் தெரிந்துகொள்ளாது இது வேண்டும், அது வேண்டும் என்றெல்லாம் கேட்கிறோம். நம்முடைய அன்பிலே வாணிபக் கண்ணோட்டம் இருக்கிறது. அது அகங்காரத்தினால் மெருகிடப்பட்ட அன்பு. அகங்காரம், மமகாரம் என்ற இரண்டும் அங்கே ஏறு நடைபோட்டு ஆட்சி நடத்துகின்றன. கண்ணப்பர் அன்பு நாளாறில் விரிந்தது; கனிந்தது. நான் என்ற முனைப்பும், நல்வினை, தீவினை என்கின்ற நினைப்பும், ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலத் திணிப்பும் அவரிடத்திலே இல்லை. கண்ணப்பர் கண்ணப்பராக இருக்கவில்லை; அன்புப் பிழம்பாகவே இருந்தார். அவரிடத்தில் இருந்த அன்பு ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு உள்ளமும் போய் நான் கெட்ட அன்பு. சேக்கிழார் பெரியபுராணத்தில் கண்ணப்பர் அளந்து அறிய முடியாதவர் என்ற பொருள் தோன்றக் 'கருத்தின் அளவினரோ' என்று பாடுவார். அந்தப் பெரிய புராணப் பாடல் இதுதான்:

முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கின்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
தன்பரிசும் வினைஇரண்டும் சாருமலம் மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ

நாம் அகங்காரம், மமகாரம் ஆட்சிசெய்ய அன்பு செலுத்துகிறோம். இந்த நிலை மாறியாக வேண்டும். ஆண்டவனைப் பிடிக்கப் பார்க்கிறோம். ஆனால், பிடி நல்ல பிடியாகத் தெரியவில்லை. அகங்காரம், மமகாரம் அற்ற நிலையிலே இறுகப் பிடிப்போமேயானால் ஆண்டவனே திணறிப் போய்விடுவான். பிடிக்கிறபிடி 'நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க' என்ற பிடி. இறைவன் ஆருயிர்கள் மாட்டுக் கைம்மாறு கருதாது பெருங்காதல் கொண்டவன். அதனால்தானே அவனைப் பித்தன் என்று

பேசுகின்றோம். அந்தப் பித்தன் பிடிக்கு அகப்படுவான். சந்தேகமே இல்லை.

மணிவாசகர் பாடுவார்.

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே யாதும் ஈறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே

தானே வந்து எம்மைத் தலை அளித்து ஆட்கொண்டருளும் தனி முதல்வனுடைய பேரருள் பேசமுடியாதது.

குறிக்கோள்

நமக்கு ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். இறைவனைச் சிக்னெப் பிடிப்பதுதான் நமது குறிக்கோள்.

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள்இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே

அப்பரே குறிக்கோள் இலாது கெட்டேன் என்று பாடுவாரானால் நாம் எம்மாத்திரம்?

நம்முடைய குறிக்கோள் முருகன் திருவடி பற்றி வாழ்தலாக இருக்கவேண்டும். இந்திரன் மகன் சயந்தன் நல்லவன்; திருவருளே சயந்தனைத் தேடிவருகின்றது. வீர மகேந்திரத்தில் சூரனால் அவன் சிறைசெய்யப் பட்டிருந்தான். அவனிடம் முருகன் சென்றபோது 'நீ யார்?' என்று கேட்கிறான் சயந்தன். தன்னை அறி

வித்துத் 'தருதுயர் மாற்றுவேன்' என்று உறுதி கூறி மகிழ்விக்கின்றான் முருகன். கந்தபுராணம் நாம் வாழ வழிகாட்டும் அற்புதக் கதை. இறைவனுடைய எளிவந்த தன்மையை அது காட்டித் தருகின்றது. வலியச் சென்று அருள் பாலிப்பவன் முருகன். சிறிது முயன்றாலும் பெரும் பயன் அளிப்பது அவன் தனிப்பெருங்கருணை. அடியார்களை வலிந்து சென்று ஆட்கொள்ளும் கோட்பாடு அவன் திருவிளையாடல்.

நாம் திருவடியையே இலட்சியமாகக் கொள்ளாமல் நிலைதடுமாறி நிற்கின்றோம். வெற்றிவேற் பெருமான் அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தை வாரி வழங்குவான். குறககுலக்கொடியாம் வள்ளியை வலிந்து ஆட்கொண்ட பெருமான் குணத்தில் மலையைப் போன்றவன். வள்ளிக்கு முருகன் அருள்புரிந்த திருவிளையாடல் நம்மையும் ஆட்கொள்வான் என்பதைக காட்டித்தருகிறது. காட்டில் வேட்டுவர் குலத்தே வந்து உதித்த வள்ளிக்கு யோகம் தெரியாது; ஞானம் தெரியாது. ஆனால், இறவாத இன்ப அன்பு எது என்பது தெரியும். அப்பெருமாட்டியைப் போலே நாமும் முருகனை உள்ளத்திலே வைத்துப் பக்தி பண்ணினால் நம்மையும் திருடிச் செல்வான் முருகன். இன்னோரன்ன கருத்துக்களைப் பொதிந்து நம்மை வழிப் படுத்த ஓர் அநுபூதி பாடுகிறார் அருணகிரியார்.

அடியைக் குறியாது அறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூ தரனே

இந்த உலகத்திலே ஒன்று நிச்சயமாக வந்து நம்மை அடையும். அதைத் தடுகக எவருக்கும் இயலாது அது தான் மரணம். மரணம வரும்போது உடம்போடு வாழ்ந்த காலத்தில் நமக்கு வேண்டிய இன்பம் எல்லாவற்றையும் ஒன்றும் விடாது தந்து உதவிய ஐந்து பொறி

களுமே நம்மிடமிருந்து நமக்குத் தெரியாமல் விடைபெற்றுக்கொள்ளும். அவை விடைபெற்றுக் கொள்கின்றபோது உடம்பை விட்டு உயிரும் போய்விடும். அப்போது நமக்கு வேண்டிய துணையை நாம் இப்போதே தேடிக்கொள்ள வேண்டும். அந்தத் துணையைவிட வேறு எந்தத் துணையும் நமக்கு அந்த நேரம் வாராது என்பதை அருளாளர்கள் அறிவார்கள். உயிர் விடும்போது திருவருள் நினைவுடன் இருந்தால் இறைவன் துணை நமக்குக் கிடைக்கும். வாழ்நாள் முழுவதும் அவனையே தஞ்சம் என்று இறுக்கிப் பிடித்துக் கொண்டால், வாழ்நாளுக்கு முற்றுப்புள்ளி போடுவதற்கு யமராஜன் வரும்போது நாம் தேடிவைத்த துணை நம் பக்கத்திலே நிற்பதைப் பார்த்து யமன் நடுங்குவான்; செய்வது அறியாது திகைத்து நிற்பான்.

இங்கே கீதையிலே கண்ணபிரான் பேசிய இரண்டு சுலோகங்களை நாம் படிக்க வேண்டும்.

யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே கலேவரம்
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித:

குந்தியின் மைந்தனே, இறுதிக்காலத்தில் ஒருவன் எப்பொருளை நினைத்துக் கொண்டு உடலை விடுகின்றானோ, எப்போதும் அப்பொருளைக் கருத்தில் வைப்பவனாகிய அவன் அதனையே அடைகின்றான்.

அந்தகாலே ச மாமேவ ஸ்மரன்முக்த்வா கலேவரம்
ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்சய:

மரணகாலத்தில் என்னையே நினைத்துக் கொண்டு உடலை விட்டு எவன் போகிறானோ அவன் என் நிலையை அடைகின்றான்; இதில் ஐயம் இல்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் கோஸ்வாமிக்குமிடையில் நடந்த உரையாடலில், ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னார்:- "மனது காமினி காஞ்சனத்தில் உழன்றுகொண்டிருக்குமே

யானால், வாயால் மட்டும் கடைசிக் காலத்தில் பகவன் நாமத்தை உச்சரிப்பதில் என்ன பயன்?

கோஸ்வாமி :- அப்படியானால், அஜாமிளனைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவன் பெரும்பாவங்களைச் செய்தவன் எனினும் சாவதற்கு முன்னர் நாராயணன் என்று தன் மகனை அழைத்தது காரணமாக அவன் காக்கப்படவில்லையா?

ஸ்ரீ ராமகிருஷ்ணர் :- அப்படியானால் நாராயணன் நாமம் அவன் நாவுக்கு வந்ததும் அவனுடைய புண்ணிய கர்மத்தின் பயனேயாகும். அவன் முன்னர் பல நற்கர்மங்கள் செய்தவன் என்றும், பின்னரும் அரிய தவம் செய்தவன் என்றும் அறிகின்றோம்.

இன்னும் அந்தியகாலத்தின் ஸ்மரணையின் பயனை ஓர் உதாரணத்தால் அறியலாம். ஒரு யானையைக் குளிப்பாட்டியதும் மண்ணை வாரித் தன் தலையில் போடும். அது அவ்வாறு செய்ய இடம் அளிக்காது சுத்தமான கட்டுத்தறியில் கட்டிவிட்டால் சுத்தமாகவே இருக்கும்.

ஒரு தரம் பகவன் நாம ஸ்மரணையினால் மனிதன் புனிதனாகினான். ஆனால், அடுத்த விநாடியில் அவன் மனம் பாவத்தில் சென்று அழுக்கு அடைகின்றது. கங்கா ஸ்நானம் பற்றி ஒரு கதை சொல்வார்கள். ஒருவன் கங்கையில் நீராடும்போது அவன் பாவங்கள் கரையில் உள்ள மரங்களில் உட்கார்ந்து காத்துக் கொண்டு இருக்கும். அவன் கரையேறியதும் அப்பிசாசுகள் அவன்மேல் குதித்து அவனை அறியாமல் பற்றிக்கொண்டு மறுபடியும் ஆட்டி வைக்கும்.

ஆகையால் எப்போதும் பகவன் நாமஸ்மரணை வேண்டும். பெருமானிடம் அன்பு வளரவேண்டும் பொன்னிலும் புகழிலும் சிற்றின்பங்களிலும் உள்ள பற்று நீங்க வேண்டும் என்று நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

அந்திய காலத்தில் மட்டும் இறைவனை நினைத்தால் போதும் என்று இருக்கக்கூடாது.''

சாகிற நாளிலே சங்கரா சங்கரா என்று சொல்ல வேண்டும் என்றால் வாழ்கிற நாளிலேயே சங்கரா சங்கரா என்று சொல்லிப் பழகி இருக்கவேண்டும்.

அலங்காரப் பாடல்:

நமக்கு வேண்டியது இறவாத இன்ப அன்பு. அந்த அன்பை ஒவ்வொருவரும் வாழ்கின்ற நாளில் வளர்த்துக் கொள்ள வேண்டும். வளர்த்துக் கொண்டதன் பயனை உயிர் பிரிகிறபோது ஒவ்வொருவரும் உணர்வார்கள்.

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கோத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண் டாயே

( அப்பர் தேவாரம் )

என்று இறைவன் தேற்றரவு சொல்வான். உயிர் உடம்போடு இருக்கிற போதே ஒன்றைச் சொல்லிவைத்து விடவேண்டும். சொல்லிவைப்பது இதுதான்.

மைவரும் கண்டத்தர் மைந்தகந் தாளென்று வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுஉன் அடைக்கலமே

மைபோன்ற கருமை நிறம்பொருந்திய திருக்கழுத்தை உடைய சிவபிரானின் திருக்குமாரனே, கந்தா என்று நின்னை வாழ்த்திக் கைமேல் பயன்பெறும் திருத்

தொண்டை அன்றி வேறொன்றும் நான் அறியேன். நான் கற்ற கல்வியும் எனக்குத் துணையாகாது என்னை விட்டு அகன்று போக, துன்புறும் சுற்றத்தாரும் ஊரா ரும் கதறி அழுது புலம்ப, என்னோடு பழகி நின்ற ஐம் பொறிகளும் என்னை விட்டுவிட, உயிருடன் ஒட்டிப் பிறந்த உடம்பும் விட்டு நீங்க 'அடைக்கலம் அடைக் கலம்' என்று ஏத்தி உன்னுடைய அடைக்கலப்பொருள் ஆவேன்.

உயிர் உடம்பினின்றும் பிரியும்போது திருவருள் நினைவோடு பிரிதல் வேண்டும்.

உயிரைக் காத்துக்கொள்ளும் பாடல் இதுதான்! இந்தப் பாடலைப் பாராயணம் செய்து முருகனை இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

# இறைவன் கழல் ஏத்தும் இன்பம்

உலகம் இன்பத்தை நாடி ஓடிக்கொண்டிருக்கிறது. அங்ஙனம் ஓடும்பொழுது எதிர்பாராத விதமாகத் துன்பம் குறுக்கிடுவதுமுண்டு. ஆனால், இறுதியில் அடைந்த இன்பம் துன்பத்தை மூடி மறைத்து விடுகிறது.

துன்பம் என்ற ஒரு பொருள் இல்லையானால், இன்பம் எத்தகையது என்பதை நாம் அறிய முடியாது. இன்பமும் துன்பமும் உலகில் மாறி மாறியே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

இன்பத்தில் மனிதன் குதூகலமாக இருப்பதையும், துன்பத்தில் ஏங்கி அயர்ந்து போவதையும் நாம் காண்கின்றோம். துன்பத்தில் சோர்ந்து போகாத நிலைக்கு மனிதன் தன்னைப் பக்குவம் செய்துகொள்வதே துன்பத்தைத் துடைப்பதற்கு ஏற்ற ஒரு வழியாகும்.

## பிள்ளைச் செல்வம்

தொட்டிலில் கிடந்து அழுகின்ற பச்சிளங் குழந்தை, பெற்றவள் முகத்தைக் காணும்போது, அவளுடைய 'ஆராரோ ஆரிவரோ, பிள்ளைக் கனியமுதே, பேசும் பொற்சித்திரமே' என்ற அன்பொழுகு தாலாட்டைக் கேட்கும்போது தன்னை மறந்து, அழுகையை மறந்து பல்லில்லா வாயினாலே மெல்லச் சிரித்து ஓர் இன்பத்தை அடைந்து அயர்ந்து தூங்கிவிடுகிறது. அதே குழந்தை சற்று வளர்ந்து குறுகுறு நடந்து சிறுகை நீட்டிப் பெற்றோர் உண்ணும் உணவை இட்டும் தொட்டும் கவ்வியும் துழாவியும் உடலெங்கும் உதறியும் இன்பவிளையாட்டை விளையாடுகிறது. இங்கே குழந்தை ஓர் இன்பத்தை அடைகின்றது. அதிலும் பன்மடங்கான இன்பத்தைப் பெற்றோர் அடைகின்றார்கள். இதை உட்பொருளாகக் கொண்டு பாண்டியன் அறிவுடை நம்பி,

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்உடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே

எனப் பிள்ளைச் செல்வத்தால் அடையும் இன்பத்தை நமக்குத் தெள்ளிதில் காட்டுகின்றார்.

பள்ளிப் பருவம்

இந்நிலையைக் கடந்து பள்ளிப் பருவத்துக்கு வருவோம். மாணக்கன் ஒருவன் தன்னை ஒத்த மாணக்கர்களுடன் ஓடி விளையாடுவதில் இன்பத்தைக் காண்கின்றான். இன்னொருவன் கல்வியில் தன் கருத்தை ஊன்றிச் செலுத்திப் பட்டம் பெற்று மகிழ்ச்சியடைவதற்கு அரும்பாடு படுகிறான். இவற்றுக்கு முற்றிலும் மாறாக மற்றொருவன் பாடசாலைக்குச் செல்லாது காலத்தை அவமே கழித்தலில் இன்பத்தை அடைகின்றான்.

எது எப்படி இருந்தபோதிலும், பள்ளிப் பருவம் மனித வாழ்க்கையில் தனி இன்பத்தைக் கொடுக்கும் ஒப்பற்ற காலமாகும். உலக விசாரங்களைப் பொருட்படுத்தாது, பிற விஷயங்களை ஊன்றி எண்ணாது களங்கமில்லாத உள்ளத்தோடு விளங்குகின்ற காலம் பள்ளிப் பருவம். 'மலையே வந்தாலும் தலையே சும' என்ற ஒரு வீர உணர்ச்சி; எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைத் தேடிக் கொள்வதில் ஒரு துடிப்பு; நாட்டுப்பற்று என்ற இன்ப வெறியினால் எழுச்சியுற்று வாழ்க்கை புதுப் புதுத் துறையில் ஓடவேண்டி ஓயாது உழைக்கும் புத்துணர்ச்சி; இவற்றை எல்லாம் அடிப்படையிற் கொண்டு இன்பத்தை அடையும் வழிக்கு வாழ்க்கைப் படகை ஓட்டுகின்ற காலம் பள்ளிப் பருவம்.

பாடசாலையிலேயே காதலர்களின் இன்ப நாடகம் தொடங்குவதும் உண்டு. காதல் என்ருல் ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த குணமும் நிரம்பப் பெற்ற தலைவன் தலைவியர்களுக்கிடையே ஏற்படுகின்ற உள்ள நெகிழ்ச்சி. காதல் வேறு, காமம் வேறு. காதல் புனிதமானது; தெய்விகமானது. காமம் நஞ்சு. அதனல் ஆண்மை அழியும்; வீரியம் சிதையும்; வாழ்வு பாழாகும். காமம் தருவது துன்பம். காதல் அளிப்பது இன்பம்.

காதல் என்ற நற்பண்பு ஒருவனுக்குத் தெய்விக சக்தியை அளிக்கும் என்ற கருத்தை அற்புதமான ஒரு பாடலிலே தெளிய வைக்கிருன் நம்முடைய புலவன் பாரதி.

ஆதிசக்தி தனைஉடம்பில் அரனும் கோத்தான்;
அயன்வாணி தனைநாவில் அமர்த்திக் கொண்டான்;
சோதிமணி முகத்தினளைச் செல்வ மெல்லாம்
சுரந்தருளும் விழியாளைத் திருவை மார்பில்
மாதவனும் ஏந்தினன்; வானேர்க் கேனும்
மாதர்இன்பம் போற்பிறிதோர் இன்பம் உண்டோ?
காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள்நிலை அவளாலே எய்த வேண்டும்

கடவுள் நிலை காதலால் வரும் என்ருல் காதல் தெய்விகமானதுதானே!

நீண்டு வளர்ந்த நெடுமுடியை நிதம்
நீருண்ட மேகம் தழுவலையோ?
நீலக் கடலிற் புரண்டுவரும் திரை
நேராய்ஒன் றேன்றினைக் கவ்வலையோ?
ஓடும் சிறுநதி ஆழியுடன் கூடி
ஒன்ருய்க் கலந்து குலாவலையோ?

ஓலமிடும் வண்டும் கோல மலர்களில்
ஒன்றி யிருந்துதேன் உண்ணலேயோ?
இந்நிலந் தன்னிலே தனைந் தனியாக
எய்திடும் ஓருயிர் எங்குமுண்டோ?

என்று பாடிக் காதல் இன்பம் இயற்கையின் நியதி என்று கூறுகிறான் ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி.

காதல் இன்பம்

ஓர் ஆடவன் ஒரு பெண்ணைக் காதல் மேலிடப் பார்க்கின்றான். அப்பொழுது அப்பெண் எதிர்நோக்காமல் நாணித் தலை குனிந்து நிலத்தையே நோக்குகின்றாள். ஆடவன் நோக்காதபோது அவனை நோக்கித் தனக்குள்ளே மகிழ்கின்றாள். அவளுக்கு ஒரு புன்சிரிப்பும் வருகிறது. இந்நிகழ்ச்சியை வள்ளுவர்,

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்

எனத் தம் குறள் கொண்டு காட்டுகின்றார். எப்படி இருக்கிறது அவர்கள் இருவரும் அடைகின்ற இன்பம்!

வீதியில் ஓய்யாரமாக நடந்து செல்கின்றான் கட்டழகன் ஒருவன். மேல் மாடத்திலிருந்து அக்கட்டழகனுடைய கம்பீரத் தோற்றத்தைப் பார்க்கின்றாள் கட்டழகி ஒருத்தி. ஊழ்வினை காரணமாக அவனும் அவளைப் பார்த்து விடுகிறான். காதலர்கள் கதைப்பதாகிய நிகழ்ச்சி ஒன்று அங்கே நடைபெறுகின்றது. வார்த்தைகள் வாயினால் வெளிவரவில்லை. வாய் பயனற்றதாகி விடுகின்றது.

இராமனும் சீதையும் சந்திப்பதாகிய நிகழ்ச்சியைக் கம்பநாடன் வருணிக்கிறான்.

பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்

இதனை வள்ளுவர்,

> கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல

என அருமையாகக் காட்டுகின்றார். கண்களினால் பேசப்படுகின்றதாகிய இன்பம் வாயினால் சொல்லும் தரத்ததன்று.

ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணும் கணவனோடு வாழ்கின்ற வாழ்க்கையில் அடையும் இன்பததை மிகவும் உயர்வுடையதாகக் கருதினாள் என்பதைத் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம்.

பசுமையாயிருக்கின்றது முற்றாத வரகு; அதனை உலர்த்துவதற்கு இடமில்லை. கிடைத்த இடம் பாறை. அந்த வரகிலும் முன் இரவல் கொடுத்தவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும். அதனைச் சமைக்க விறகில்லை. காட்டுக்குச் சென்று விறகு கொண்டு வரவேண்டும். கறிவகை குப்பையில் முளைத்த கீரை; அதற்கு உப்பு இல்லை. உண்கலம் இரவல்; சோறுகொண்டு பிறல் அடைக்கும் நிலை. வேளைக்கு வேளை இவ்வுணவேனும் கிடைக்குமா என்றால் அதுவும் இல்லை. ஒன்று விட்டு ஒரு பொழுது தின்று கிடக்க வேண்டும். இவ்வளவு இனனல் இருந்த போதிலும் கணவனுடன் வாழ்கின்ற புக்ககத்து வாழ்க்கையே இன்பமுடையது என்கின்றாள் ஒரு பெண். பிறந்த வீட்டில் நன்றாக மழை பெய்து ஈரமுள்ள நிலம். அரசனே உழவனாகிப் பனை நுகத்தில் யானையைப் பூட்டி உழுகின்றான். விதைப்பது வெள்ளி; விளைவது பொன். செல்வம் பெருகுகின்றது. இத்துணைச் செல்வ வாழ்வில் வளமாக வாழ வாய்ப்பு இருந்தும் பிறந்தகத்து வளவாழ்வின் இன்பம் வேண்டாம் என்கின்றாள் அப்பெண். என்னே அத்தமிழ் மகளின் மனப்பண்பாடு! பாட்டு இதோ:

இராமழை பெய்த இராவீ ரத்துச்
செங்கோல் வேந்தன் உழவ ளுகிப்
பனைநுகம் கொண்டு யானைஏர் பூட்டி
வெள்ளி விதைக்கப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே;
செங்கால் வரகுப் பசுங்குரல் கொய்து
கன்று காத்துக் குன்றின் உணக்கி
ஊடுபதர் போக்கிமுன் உதவினோர்க் குதவி
காடுகளை இந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை உப்பின்று வெந்ததை
இரவற் ருலம் விரைவுடன் எடுத்துச்
சோறு கொண்டு பீறல் அடைத்து
ஒன்றுவிட் டொருபொழுது தின்றே கிடப்பினும்
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே

அத்தமிழ் மகள் புக்ககத்துக் காண்கின்ற இன்பம் கற்பனைக்கும் எட்டாதது.

## பேரின்பம்

இதுவரை நாம் பேசி வந்த இன்பம் காலத்துக்குக் காலம் மாறுபட்டுச் சென்றதைக் கண்டோம். இனிமேல் நாம் பேசப் போவதாகிய ஓர் இன்பம் நிலையானது; அழிவற்றது. அதுதான் பேரின்பம். நாம் முன்கண்ட அனைத்தும் சிற்றின்பங்கள். அவை நிலை இல்லாதன. அவ்வப்போது இன்பம் கொடுப்பன. மனிதனை உலக மாகிய நாடக மேடையில் ஆடச் செய்வன. இதனால் இத்தகைய இன்பங்களை வெறுத்து எல்லாம் மாயம், உலகமே இந்திரசாலம் என்ற முடிவுக்கு வந்து, மூக்கைப் பிடித்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்து இருக்கவேண்டும்; நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடிக் கடுந்தவம் செய்ய வேண்டும் என்று கருதிவிடக்கூடாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என வள்ளுவர் கூறியாங்கு இவ்வுலகத்தில் வாழ்ந்தால், அவ்வாழ்க்கை பேரின்பத்துக்கு அடிகோலுவதொன்றாகும். இல்லற வாழ்க்கையில் அனுபவிக்கப்படுகின்றதாகிய இன்பம் பேரின்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

ஆணிடமுள்ள ஈசனையே பெண் காதலிக்க வேண்டும். பெண்ணிடம் உள்ள சக்தியையே ஆண் மனமார வணங்க வேண்டும். காதலை உள்ளத்திற் கோயில்கொண்ட தெய்வப் பொருளின்பால் திருப்பவேண்டும். அதுவே உண்மைக் காதல் என்ற அடிப்படையில் வாழ்ந்தால், இல்லறம் நல்லறம் ஆகும்.

உடல் வற்றி உருக்குலைந்து சொறி நாயிலும் கேவலமாகச் சோற்றுக்கு அலைந்து எச்சிற் சோற்றுக்கு நாய்களுடன் வாசலில் காத்திருக்கும் ஏழை ஒருவனை நடமாடும் தெய்வமாகக் காணவேண்டும். 'ஏழை ஒருவன் யாசித்து வந்தால் சிவபிரானே அந்த ஏழையின் வடிவத்தில் உனக்குப் புண்ணியஞ் செய்ய ஒரு சந்தர்ப்பம் அளிக்க வந்துள்ளார் என நினைந்து, தாள் மடக்கி உடலொடுக்கிப் பணிவுடன் ஏதாவது கொடு' என்கிறார் சுவாமி விவேகானந்தர். ஈதலால் வரும் இன்பம் முத்திக்கு வித்தாகும்.

மனிதன் இவ்வுலகத்தில் தான் செய்ய வேண்டியதை மறந்து, மனத்தில் எழும் ஆசைகளுக்கும் உலகில் காணும் இடம்பப் பொருள்களுக்கும் அடிமையாகித் தர்மத்தை மறந்து தன்னலம் கருதி அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவற்றால் வாழ்க்கையில் அலைப்புண்டு நெறியல்லா நெறிகளில் உழலக்கூடாது. காலத்தை வீணாகக் கழித்து விட்டவர்களையும் மெல்ல மெல்ல நற்செயல்களிற் செலுத்துவதற்குப் புறநானூற்றுச் செய்யுளொன்று வழி கற்பிக்கின்றது.

பல்சான் றீரே, பல்சான் றீரே
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயன்இல் மூப்பின் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே

நல்லனவற்றைச் செய்வதற்கு முடியாவிட்டாலும் அல்லாதனவற்றைச் செய்யாது வாழ்வதில் இன்பம் காண வேண்டும.

ஆகாயத்தில் பட்சிபோல் பறக்கலாம். தண்ணீரில் மீன் போல் நீந்தலாம். இவையெல்லாம் சுலபமானவை. ஆனால், பூமியில் மனிதன் மனிதனாக உலாவுவது மிகக் கடினமான செயல்.

காலத்திரையில் பட்டம் பதவி, செல்வம் முதலிய எல்லாம் உலக மேடையில் வேடம் போட்டு ஆடிச் செல்லும் என்பதை மறந்து விடக்கூடாது. இடம்பமும் ஆரவாரமும், பகட்டும், மினுக்கும், வாய் நீளமும் வாழ்வைக் கெடுக்கும். மனிதனின் அகந்தையும ஆணவமும் தெய்வ சக்தியைச் சுவரிட்டு இருட்படுத்தும். இவற்றைத் தகர்த்து, அன்பினால் இதயக் கதவைத் தட்டி, ஆண்டவனைக் கூவி முறையிட்டால் அருட்கதவு திறக்கும். தண்ணீரில் மூழ்கியவன் ஒரு மூச்சுக்கு எவ்வளவு தவிப்பானோ, அங்ஙனமே கடவுட் காட்சிக்கு மனிதன் தவிக்க வேண்டும். 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்' என்று இறைவனை வேண்டிக்கொள்ள வேண்டும். வேண்டுவார் வேண்டு

வதை ஈயும் இறைவன் வணங்கத் தலை வைத்தான்; வார்கழல் வாழ்த்த வாய் வைத்தான்; இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தான். எனவே, அவன் திருப்புகழைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாள் என்று உணர வேண்டும். இயற்கையின் எழில் நலமும் இறைவன் அருள் நலமும் கண்ட திருஞானசம்பந்தப் பெருமான் உண்மையான இன்பம் எதுவென்று நமக்குச் சொல்கின்றார்.

நிறைவெண் கோடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலம்மேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே

இறைவன் கழல் ஏத்தும் இன்பமே ஈறில்லா இன்பம். 'இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு' என்றே சுந்தரரும் தேவாரம் பாடுகின்றார்.

இன்பம் இன்பம் என்று நாம் சொல்வதெல்லாம் அப்போதைக்கப்போது இன்பம் பயப்பன. நமக்கு வேண்டியது மாறாத பேரின்பம். திருப்போரூர்ச் சந்நிதி முறையிலே சிதம்பர சுவாமிகள் பாடுகிற ஒரு பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது.

இன்போ ரணுவாய் இடர்அதற்கு மாமலையாம்
புன்போகம் வேண்டிப் புலம்பாதே — என்போடே
உள்ளம் உருகவரும் ஒண்போரூர் ஐயன் அருள்
வெள்ளமுற நெஞ்சே விரும்பு

இதனை எத்தனை முறை பாடினாலும் தகும்.

ஒண்போரூர் ஐயன் முருகன். அவன் கழல் ஏத்தினால் அருள் வெள்ளம்போல் வரும். எனவே, நமக்குக் கிடைத்த கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைத் திருவருளை

அடைவதற்காகவே வழிப்படுத்துவோம். அன்றேல் திரு வருட்பிரகாசவள்ளலாரின் பாடல் நமக்குப் பொருத்தமாக வந்து அமைந்துவிடும். இதுதான் அந்தப் பாடல்:

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள் பெருமானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த அழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்கும் செவி
பந்தமற நினைஎணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீரென நடுங்கும் நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள்கோ டுங்கை
சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

# புதுப்போர் பழம்போர்

## குறுந்தொகைப்பாடல்

உலகம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது; தொடர்ந்தும் வாழப்போகின்றது. அணுக்குண்டினுலும் ஐதரசக் குண்டினுலும் உலகம் அழியப்போவதில்லை. உலகைக் காத்துக் கொள்ள முருகப்பெருமான் இருக்கின்ருன். அணுக்குண்டும் ஐதரசக்குண்டும் அவன்முன் எம்மாத்திரம்? முருகன் திருவருள் இருக்கும்போது உலகம் அழியப்போவதில்லை என்ற இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாரதம் பாடிய பெருந்தேவனுர் குறுந்தொகை என்னும் நூலின் கடவுள் வாழ்த்திலே சொல்லியிருக்கின்ருர்.

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்று லுலகே

இதன் பொருள்:— தாமரை புரையும் காமர் சேவடி-தாமரை மலரைப் போன்ற அழகிய செம்மையாகிய திருவடியையும், பவழத்தன்னமேனி - பவழத்தை ஒத்த சிவந்த நிறத்தையும், திகழொளி - விளங்கும் ஒளியையும், குன்றி யேய்க்கும் உடுக்கை - குன்றிமணியைப் போன்ற சிவந்த ஆடையையும், குன்றின் நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல் - கிரவுஞ்ச மலையினது நடுவிடம் பிளக்கும்படி விசிய அழகிய ஒளியையுடைய நெடிய வேற்படையையும், சேவல் அம்கொடியோன் - கோழிச் சேவலை வரைந்த கொடியையுமுடைய முருகப் பெருமான், காப்ப - பாது காத்து அருளுதலினுல், உலகம் ஏம வைகல் எய்தின்று - உலகத்தில் உள்ள உயிர்கள் இன்பமயமாகிய நாள்களை

அடைகின்றன, ஆதலின் உலகுக்கு இடையூறு இல்லை. (ஏமவைகல் - பிறவித்துன்பம் சாராத நாள்கள் எனினும் பொருந்தும்.)

மாயையின் கோலம்

சூரபன்மன் ஆட்சி கொடிது! கொடிது!! அவன் ஆற்றலை அளத்தல் அரிது! அரிது!! ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் ஆண்ட பெருமை அவனுக்குரியது. அவன், மாயையின் வலியோனாகி மால் முதலோரை வென்று காயமதழிவு இன்றாகிக் கடவுளர்க்கு அலக்கண் செய்தவன். வானவர் சூரபன்மனால் அடைந்த துன்பம் அளப்பில. அறுபத்தாறுகோடி அசுரர்களைத் தன் சேனை வீரர்களாகக் கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களை அரசுபுரிந்த மாயாவியாகிய சூரபன்மனை முப்பத்துமுக்கோடி தேவர்களால் அழிக்க முடியவில்லை. வரம் தந்து வலியராக்கும் வானவரின் வலிமை சூரனுக்கு முன் மங்கிவிட்டது. இந்திரனுடைய ஆயுதங்களே சூரபன்மனுடைய மாயத்துக்கு முன் எதிர் நிற்க முடியாது வலி இழந்தன. அத்தகைய வலிமையுடையவன் சூரன். 'உற்றதோர் மேன்மை நாடி உன்னை நீ பிரமம் என்றே தெற்றெனத் தெளிதி' என்ற உபதேசத்தினாலும் 'கொலையொடு களவு காமம் குறித்திடும் வஞ்சம் எல்லாம் நிலையெனப் புரிதி' என்ற கட்டளையினாலும் வளர்ந்தவன் அவன். 'தருமம் என்றொரு பொருள் உளது' என்று காசிபர் நல்லவழி சொல்லி இளமையில் படிப்பிக்கத் தொடங்கியபோது அந்தப் பாடம் செப்பலாகாது என்று தடுக்கிறாள் மாயை.

நன்பெருஞ் செல்வமும் நவையில் கோற்றமும்
இன்பமும் அழிவிலா திருக்கும் ஆயுளும்
மன்பெரும் சீர்த்தியும் மறுவில் வாழ்க்கையும்
அன்புடை இனையவர் அடைதல் வேண்டுமால்

நம் காதல் மைந்தர்கள் நன்பெருஞ் செல்வமும் சூற்ற மற்ற வெற்றியும், இன்பமும், அழிவற்ற ஆயுளும், நிலை பெற்ற புகழும், மாசிலா வாழ்க்கையும் பெறுதல் வேண்டும்.

மறைதேரி முனிவர் வாய்மை ஆகிய
உறுதியை மொழிந்தனை உயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க் கன்றி நாம்அருள்
சிறுவருக்கு இத்திறம் செப்பல் ஆகுமோ

என்று மறுத்துரைத்துத் திசைமாற்றி வளர்த்தவள் விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை. அதனால் அண்டர்கள் அடங்கினர்; அரக்கர் அஞ்சினர்; எண் திசைக்காவலர் ஏவல் புரிந்தனர். அது மாயையின் கோலமாயிற்று. சூரன் தலைகீழாக நடக்கத் தொடங்கி ஞன். சூரன் சபையிலே சிங்கமுகன் இறுதியாகக் கூறிய அறிவுரைகள் தானும் அவன் காதில் விழவில்லை.

## சிங்கமுகனின் உபதேசம்

'அண்ணா, இதுகாறும் அமைச்சரும் பிறரும் வீரமே பேசினர். தம் திறமையை விரித்தனர். மாற்றார் வலியை இகழ்ந்தனர். அவர்களில் ஒருவரும் நல்ல புத்தி உனக் குச் சொல்லவில்லை. விண்ணவர் நாட்டை வென்று அழித்தாய்; வானவரை வன்சிறையில் அடைத்தாய்; வான்சுமக்கும் தேவரை மீன் சுமக்க வைத்தாய். அன்னார் துயரம் இன்னமும் தீர்ந்தபாடில்லை. அவர் துயர் போக் கவே முருகன் தோன்றியுள்ளான். அவன் சிவனார் திருக் குமாரன்; பரம்பொருளின் தோற்றம்; ஞானம்தான் உரு வாகிய நாயகன்.

பெறல ருந்திரு வுடையநீ அறத்தினைப் பேணி
முறைபு ரிந்திடா தாற்றலால் அமரரை முனிந்து
சிறையில் வைத்தனை அதுகண்டு நின்வலி சிந்தி
இறுதி செய்திட உன்னினன் யாவர்க்கும் ஈசன்

ஐயனே, சீலம் இல்லார்க்கு உணர ஒண்ணுத சிற் பரனை நீ பாலன் என்று கூறினுய்; அவன் உயிர்க்குயி ராய் நிற்கும் அமலன்.

அருவும் ஆகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன் நிமித்தமும் ஆகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக்கு ஆதியாய் உயிர்க்குஉயி ராய்நின்ற அமலன்

ஞானந் தானுரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்என் ருல்அஃ தெளிதோ
மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெரும் தலைமை

இத்தகைய பரம்பொருளைப் பகைத்தவர் பிழைப் பரோ? நீயும் நின் சுற்றமும் நின் செல்வமும் நிலை பெற்று வாழவேண்டுமானுல் வானவரை வன்சிறையினின் றும் விட்டுவிடு' என்று பொன்மொழி பேசினுன் சிங்க முகன். சூரன் காது செவிடாயிற்று.

பழம் போர்

யுத்தம் எழுந்தது. 'கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே' என்ற பழமொழிக்கு இலக்கானுன் சூரன். எல்லோரும் மாண்டனர். சூரனும் தேர் இழந்து, வில் இழந்து, குடை இழந்து, முடி இழந்து நின்ருன். முன்வைத்த காலைப் பின்வையாது அமரே புரிவேன் என்று முருகனேடு போர் தொடுத்தான். கடைசி நாளில் கடும்போர் புரிந் தான். அப்போரிலே பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நின்ற முருகனைப் பார்க்கின்ருன் சூரன்.

ஒற்றென முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற பராபர முதல்வன் என்றே
சோற்றனன் சோற்ற எல்லாம் துணிபுஎனக் கோண்டி லேனல்
இற்றைஇப் பொழுதில்ஈசன் இவன்எனும் தன்மை
கண்டேன்

இங்கெனது உயிர்போல் உற்ற இளவலும் இளைய சேயும்
செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவன்என்று எண்ணல்
கண்டாய்
பங்கயன் முதலோர் காணுப் பரமனே யாகும் என்றார்
அங்கவர் மொழிந்த வாறும் சரதமே ஆன தன்றே.

முருகப் பெருமானுடைய பேரழகை நேரிற்கண்டு களிப்புற்று நிற்கிறன். மெய்யறிவு வருகின்றது. அப் பெருமானைத் தன்கைகளால் தொழுதல் வேண்டும்; நாவினால் துதித்தல் வேண்டும் என்று உணர்கிறன். ஆனல், மாயை மீண்டும் அவன் அறிவை மயக்குகிறது.

ஒன்றொரு முதல்வ னுகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றும்இப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப துண்டோ

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி அளியர்போல் உறுவன்
என்னின்
ஆனதோ எனக்கிது அம்மா ஆயிரகோடி அண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் போன்றி டாவோ

சூரன் செருக்குற்று மீண்டும் போர் செய்து வீழ்கின்றன்.

அகங்கார மமகாரப் பிழம்பாகிய சூரபன்மாவையும் வசப்படுத்தி வாழ்வு அளித்தவன் முருகன். கச்சியப்பர் இதை நமக்குச் சொல்லித் தருகின்றார்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்
றுய்ந்தான்

முருகப் பெருமான் செய்கின்ற காரியங்கள் அத்தனையும் அவன் திருவிளையாடல்! அந்தப் பெருமான் சூரபன்மனை எதிர்த்துப் போராடியதும் ஒரு திருவிளையாடல். சூரபன்மனை அழிக்கவேண்டும் என்பது முருகப் பெருமானின் திருக்குறிப்பாக இருந்திருந்தால், படை எடுத்து எழுந்தருளி வந்து போர்தொடுக்க வேண்டுமா?

சூரனே முதலோர் தம்மை இமைப்பினில் தொலைக்க
உன்னின்
மூரலால் அடுவன் கொண்ட முனிவினால் அடுவன் வாய்மைச்
சீரினால் அடுவன் நாட்டச் செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற் பாலார்

பாரிடர் சேனையோடு படர்ந்ததும் இலக்கத் தோன்பான்
வீரர்கள் புடையில் போற்ற மேயதும் படைகள் பற்றிச்
சூரனை அடுவான் வந்த சூழ்ச்சியும் தூக்கின் மாதோ
ஆரண முதலாம் மேலோர்க்கு அனைத்தும்ஓர் ஆட லேகாண்

சூரனுக்கு நல்லறிவு வரச் செய்தபோது சூரனே சொல்கிறான். 'என்பால் நண்ணினன் அமருக்கென்கை அருளென நாட்டலாமே.' ஆம்! இது ஒருவகையான அருள். சூரன் முருகனைப் பகைவன் என்று எண்ணினான். முருகன் சூரனை அவ்வாறு எண்ணவில்லை. அப்பெருமான் போர்க்களத்தைக் கோயிலாக்கிப் போரைத் தரிசனம் ஆக்கி அருள் செய்ய எழுந்தருளி வருகிறான்.

முருகப் பெருமான் சூரனுடைய ஆணவத்தைப் போக்கி அவனை அடிமை கொண்டான். அதனால் தேவர்களுக்கும் வாழ்வு வந்து அமைந்தது. இதனைத் தேவர்களே பாடிப் பரவுகிறார்கள்.

கார்தடிந்து துய்க்கும் கனைகடலின் நீர்வறப்பப்
போர்தடிந்து செல்லும் புகர்வேல் தனைவிடுத்துச்
சூர்தடிந்தாய் அன்றே தொழும்அடியேம் வல்வினையின்
வேர்தடிந்தாய் மற்றெமக்கு வேறோர் குறையுண்டோ

மாறுமுகம் கொண்டுபொரு வல்லவுணர் மாளாமல்
நூறு முகம்எட்டு நோதக் கனபுரியத்
தேறு முகம்இன்றித் திரிந்தேமை ஆளவன்றோ
ஆறு முகம்கொண்டே அவதரித்தாய் எம்பெருமான்

நீதி முறைஅதனில் நில்லா அசுரர்புரி
தீது பலவுளவும் தீர்ந்தோம் பழியகன்றோம்
வேத நெறிதொல்லை வெறுக்கையொடு பெற்றனமால்
ஏதும் இலையால் எமக்கோர் குறைஎந்தாய்

மன்ற அவுணர் வருத்திடஇந் நாள்வரையும்
பொன்றி னவர்என்னப் புலம்பித் திரிந்தனமால்
இன்று பகைமாற்றி எமக்குஅருள்நீ செய்கையினால்
சென்ற உயிர்மீண்ட திறம்பெற்ற னம்ஐயா.

மாயையின் மகனாகிய சூரனும் அவன் தம்பிமாரும் அசுர சாம்ராச்சியத்தை நிறுவியபோது முப்பத்துமுக் கோடி தேவர்களுக்கும் தலைவனாக இருந்து வானுலகைப் பெருமிதத்தோடு ஆண்ட இந்திரன் அரசு ஒழிந்தது; இன்பலோகம் எனப்படும் தேவ உலகம் சிறைக்கூட மாயிற்று; சொர்க்கம் நரகமாயிற்று; இந்திரனும் ஏனைய தேவர்களும் செருக்கு அடங்கித் திருவருளையே

வேண்டினார்கள். அசுர இயல்பு தலைகாட்டவே, உலகம் தத்தளித்துத் தடுமாறி நிலைமாறியது. அப்போது,

செந்நி றத்திரு மேனியும் திருமுகம் ஆறும்
அன்ன தற்கிரு தோகையுடைத் தோள்களும் ஆக
முன்ன வர்க்குமுன் ஆகிய பராபர முதல்வன்
தன்னு தற்கணால் ஒருதனிக் குமரனைத் தந்தான்.

முருகப் பெருமான் தோன்றித் தனிநாயகனாகி அசுரர்களோடு போர்புரிந்து உலகத்துக்கு வாழ்வு அளித்தான். அவன் அருள் இல்லையானால் இந்தநிலை வந்திருக்க முடியாது.

சீருவருசூர் சிதைவித்து இமையோர்
கூறு உலகம் குளிர்வித் தவனே

என்று அருணகிரியார் அநுபூதியிலே பாடுவார்.

## அகப்போர்

உலகம் தேவாசுர சம்பத்துக்களுடன் வாழ்கின்றது. மும்மலங்களிலும் அழுந்தி ஆன்மா துன்புறுகின்றது.

ஆங்காரப் போக்கசம் கோபக் களஞ்சியம் ஆணவந்தான்
நீங்கா அரண்மனை பொய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவிலா சம்இத்தே கம்கந்தல்
பாங்காய் உனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே

என்று பட்டினத்தார் பாடுவார். ஆணவம், காமம் குரோதம் முதலிய இழிந்த குணங்கள் வந்தடையும்போது மனித வாழ்வு இழிந்த வாழ்வாகி விடுகின்றது. மனிதன் இழிநிலை அடைகின்றபோது அசுரசம்பத்து நிறைய இருக்கும். அப்போது அவன் தலைகால் தெரியாது நடக்கத் தலைப்படுவான். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று மனம்போன போக்கெல்லாம் போகத் தலைப்படு

வான். அதனால் வினைவிலங்கு இறுக்கிப் பிடிக்கும். எழு கடல் மணலை அளவிடின் அவற்றிலும் அதிகமான பிறவி வந்து சேரும்.

ஆனால் ஒன்றை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். ஒருவன் முற்றிலும் நல்லவன் என்றோ அல்லது முற்றிலும் தீயவன் என்றோ முடிவு செய்யக்கூடாது. நல்ல குணங்களும் தீய குணங்களும் அவனிடம் கலந்தே இருக்கின்றன. சில வேளைகளில் நல்ல குணங்கள் — தேவ சம்பத்துக்கள் அடங்கி வாளா இருக்கத் தீய குணங்கள் — அசுரசம்பத்துக்கள் மேலோங்கிப் படாதபாடு படுத்திவிடுகின்றன. இதனை இன்னொரு வகையாகச் சொன்னால், மனிதனிடத்திலேயும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் ஆரம்பமாகின்றது. இந்தத் தேவாசுரப் போருக்கு முருகன் முன்னின்று உதவவேண்டும். சூரனோடு போர் செய்து வாழ்வளித்த பெருமான் நம் உள்ளத்தில் நிகழும் போருக்கும் வேல் கொண்டு வரவேண்டும். அப்போது அசுரசம்பத்துக்கள் ஒழியும். வாழ்வு வளமாகும். இதனை நமக்கு நினைவூட்டுவதற்காகவே அவன் எப்போதும் ஞானவேலைத் திருக்கரத்திலே தாங்கி இருக்கின்றான். நம்முடைய அகப் போர் புதுப்போர்; அன்று நடந்தது பழம்போர்;

அகப்போரிலே சூரசங்காரம் நிகழ்ந்தால் உலகம் இன்புறும்; பிறவித் துன்பமும் இல்லாதொழியும் முருகன் காவற்தெய்வம்; வாழ்வுக்கு வளம் தரும் வள்ளல். அகத்திலே இருக்கும் சூரனை அழித்தால் வருவது அமர வாழ்வு. இதோ ஒரு திருப்புகழ் நம்மைப் பழநிமலைக்கு அழைத்துச் செல்கின்றது; திருவடி இன்பம் காட்டுகின்றது.

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
  உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
  பிறவிஅற நினைகுவனெ னாசைப் பாடைத் தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
  தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
  விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே

பாவத் தொழில்களைச் செய்த அசுரருடைய ஊர்களைச் சூறையாடி (சுழல்காற்றுப்போல வீசி) அழித்த பெருமாளே, தொழுது வழிபடும் அடியவர்களுக்குக் காவற்காரனாக இருந்து காத்தருளும் பெருமாளே, வெற்றிக் கவிகளை உலகுக்கு உதவிய அற்புத மூர்த்தியாகிய (சம்பந்தப்) பெருமாளே, வீரக் குறவர் குலக் கொடியாம் வள்ளிநாயகிக்குத் தக்க சமயத்தில் உதவி ஆட்கொண்ட பெருமாளே, ஒருவேளை கூட உனது இரண்டு திருவடிக் கமலங்களில் அன்பு வைத்து அறிய மாட்டேன்; உனது பழநிமலை என்னும் ஊரை வணங்கி அறியேன்; இப் புவியில் உயர்வுள்ள அருமை வாய்ந்த தவ வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றேன் அல்லேன். எது எப்படி இருந்த போதிலும், பிறவி ஒழிய வேண்டும் என்ற நல்ல நினைவு என்னிடத்தே இருக்கின்றது. ஆதலால் ஆசைகளை விட்டொழிக்க மாட்டேனே, முருகா.

தொழுது வழிபடும் அடியவர்களுக்கு அப்பெருமான் காவற்காரன். எனவே, உள்ளத்தில் சூரன்போர் ஆரம்பமாகிறபோது அப்பெருமானின் கைவேல் சும்மா இருக்குமா?

எம்பெருமான் முருகன் ஓராறு திருமுகங்களோடும் ஈராறு திருக்கரங்களோடும் வேல் முதலிய படைக் கலங்களோடும் வீரவாகு முதலிய இலக்கத்தொன்பதின் மருடனும் இரண்டாயிரம் பூதவெள்ளங்களாகிய படைத் துணைகளுடனும் எழுந்தருளிச் சூரனை நேர்ப்படுத்தினர். அப்பெருமானை வந்தித்து வணங்கினால் அவன் மயிலேறி வந்து நமக்கும் அருள்சேரத்தருவான். அவன் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

கச்சியப்பரின் இந்தக் கந்தபுராணப் பாடலைப் பாடுவோம், பாடுவோம்; பாடிப் பரவுவோம்.

# மனைவி ஏது, கல்யாணம் ஏது?

அருட்காதல்

அருணகிரிநாதர் முருகப் பெருமானுடைய அழகிலும் இளமையிலும் சொக்கி, அவனை நல்ல மணமகனைக் காண்கின்றார்.

இந்திரன், தெய்வயானை அம்மையாரது திருக்கரத்தை முருகப் பெருமான் திருக்கரத்தில் வைத்து, "எளியேன் மகளை எம்பிரான் ஏற்றருள்வீர்" என்று வேதமந்திரம் கூறித் தாரைவார்க்கின்றான். இந்திரன் வார்த்த மந்திர நீரை முருகப் பெருமான் ஏற்றுக்கொள்கின்றார். பிரம்ம தேவன் மாங்கல்யநாணை மனத்தினால் படைத்துக் கொடுக்கிறார். முருகப் பெருமான் அதனை வாங்கிச் சுரகுஞ்சரி அம்மை கழுத்தில் தரிக்கிறார். தீவலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலிய சடங்குகளும் சிறப்புற நிறைவேறுகின்றன. திருமணம் கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது.

குறமகள் வள்ளிநாயகியாருக்குத் திருவருள் புரிய வேண்டும் என்று திருவுளம் கொண்ட முருகன் செய்த திருவிளையாடல்கள் எத்தனை! எத்தனை!! அந்த வஞ்சியைக் காதலித்து. அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நிற்கிறான். தினைப்புனம் காத்து நின்ற வள்ளியின் முன்னே கிழக்கோலம் புனைந்து வருகின்றான். அம்மங்கை தன் செங்கையால் தந்த தேனையும் தினைமாவையும் அருந்தி மகிழ்கின்றான். சமயம் பார்த்து யானையை அழைக்கிறான். மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி அப்பெருமாட்டியை மணந்து கொள்கின்றான்.

இவை எல்லாம் அருணகிரிநாதருக்குத் தெரியாமலா போய்விட்டன? அந்த ஈராறு கையழகனுக்கு-இசைவான மயில் அழகனுக்கு இன்னும் ஒரு மங்கை நல்லாளைத் திருமணம் செய்ய அருணகிரியாரின் கருணையுள்ளம் மலர்கின்றது.

கடல் வற்றும்படி வேற்படையை முன்னாள் விடுத்து அருளிய பெருமானே, வீரம் படைத்த சூரர் குலத்துக்கு யமனாக வந்த பெருமானே, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் உட்பொருளாக விளங்குபவன் நானே என்று மார்பினைத் தட்டும் பெருமைக்கு உரிய பெருமானே, நீலநிறத்தைக் கொண்ட மேகம் போன்ற மயில் மேலே நீ எழுந்தருளி வந்த பெருவாழ்வைத் தரிசித்து அக்காட்சியின் பயனாக உமது எழிலில் மயங்கிக் காதல் கொண்ட பேதைப் பெண்ணுக்குத் தேவரீருடைய திருமார்பில் அழகு ஒழுக விளங்குகின்ற நறுமணம் நிறைந்த மலர்மாலையைத் தந்து அருள்புரிய வேண்டும்.

அருணகிரியார் திருவாய் மலர்ந்த அந்தத் திருப்புகழ் இதோ:

நீலங்கோள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கோண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கோண்டு வேலைப்பண் டேறிவோனே
வீரம்கோள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் போருளோனே
நானென்று மார்தட்டும் பேருமாளே

வேல் உண்டு, வினை இல்லை; மயில் உண்டு, பயம் இல்லை என்று முருகபக்தர்கள் உள்ளத்திலே உரம்பெறுகிறார்களே! அழகன் என்ற சொல்லுக்குப் பொருள் முருகன் என்று சொல்லவா வேண்டும்? பச்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைத் திருவரையும், சீறடியும், செங்கையும், ஈராறு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும் விரிகிரணம் சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும் வைத்த

கண் வாங்காமல் பார்க்கப் பார்க்க அழகு சொட்டிக் கொண்டே இருக்கின்றன. அப்பெருமானின் உதட்டிலே தவழும் புன்னகை பரவசம் ஊட்டுகிறது. கம்பீரமாக நிற்கின்ற நிலை திவ்விய ரூபசௌந்தர்யத்தையும் வீரத்தையும் பறைசாற்றுகின்றது. அவனைக் காணக் கண் பல்லாயிரம் வேண்டும்!

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான்முகனே

அப்பெருமானின் அற்புதக் காட்சியைக் கண்டு களிக்க நாலாயிரம் கண் இல்லையே என்று அருணகிரியாரே அங்கலாய்க்கிறார். பேதைப் பெண் அப்பரமநாயகன் மீது காமுற்று அருட்காதல் கொள்வதில் தப்பு ஒன்றும் இல்லையே!

இங்கே பேசப்படுகின்ற பெண் வேறு யாரும் இல்லை. பக்குவ ஆன்மாவை நாயகியாகவும், அந்தச் சிங்கார வேலனை நாயகனுவும் உருவகஞ் செய்கிறார் அருணகிரியார் பாடல் நாயகி நாயக பாவத்தில் அமைந்திருக்கிறது. இந்த அற்புதத் திருப்புகழின் முதல் நான்கு அடிகளில் அகத்துறைப் பாடல்களின் நறுமணம் வீசுகின்றது. வெற்றி வடிவேலனின் அநுக்கிரகத்தை வேண்டிக் காத்துக்கிடக்கும் பக்குவ ஆன்மாவுக்குத் திருவருள் நலன் கிடைக்க வேண்டும் என்ற கருத்தைக் கவிச்சுவையும் கருத்தாழமும் பொலியப் பாடுகின்ற திறன் அதிஅற்புதமானது!

### வள்ளி திருமணம்

வள்ளி திருமணம் சுவையான கதை. எத்தனையோ நாடக மேடைகளிலும் வெள்ளித்திரைகளிலும் பார்த்தும் அலுப்புத்தட்டாத கதை! தேனென்று பாகென்று உவமிக்

கொணுத் தெய்வ வள்ளியைத் தேடிப் புறப்படுகிருன் முருகன். வேடனாக வேடம் போடுகிருன். வேட்டையாடி வந்த மானைத் தேடிவரும் வில்லாளியாகிருன். தினைப் புனம் காக்கும் வள்ளியைச் சார்ந்து காதல் பேசுகிருன். வள்ளிக்குக் கோபம் வருகிறது. அண்ணன்மாரையும் தந்தையையும் அருகில் வரவேண்டும் என அழைக்கிருள். வேடன் வேங்கைமரமாகிருன்; விருத்தனாக மாறுகிருன். விநாயகனை வேண்டுகிருன். யானை வருகிறது. கடல் போல் முழங்குகிறது. வள்ளி அஞ்சி நடுங்குகிருள். இறுகத்தழுவி முருகனை அடைகிருள். திருத்தணி முருகன் குறமகள் மருவிய பெருமான் ஆகிருன்.

வள்ளி நாச்சியாரை முருகப் பெருமான் ஆட்கொண்டது மிகமிகச் சிறந்த பண்பு. வள்ளிமலைத் திருப்புகழ் இதனை வள்ளி சன்மார்க்கம் எனப் பாராட்டுகிறது. வள்ளி திருமணம் முருகனுடைய பெருங்கருணைத் திருவிளையாடல். பாசக் கட்டில் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா, உள்ளத்தில் அன்பு கொண்டு 'முருகா முருகா' என்று அழைத்தால், அந்த அழைப்பை ஏற்று ஓடோடியும் வந்து ஆன்மாவைப் பிரபஞ்சச் சேற்றிலிருந்து எடுத்துத் திருவடியிற் சேர்ப்பிப்பான் முருகன் என்பதைக் காட்டித் தருகிறது வள்ளி திருமணம்.

நண்பர் ஒருவர் கேட்டார்: "ஐயா, உங்கள் சைவ சித்தாந்தம் உலகப் புகழ்பெற்றது. ஆனால், அந்த அருமையான தத்துவஞானம் பெற்ற நீங்கள் ஆண்டுதோறும் திருக்கோயில்களிலே, திருக்கல்யாண உற்சவம் தவருது கொண்டாடுகிறீர்களே! இறைவனுக்கு மனைவி ஏது, கல்யாணம் ஏது? இதுதான் எனக்கு விளங்கவில்லை."

பக்குவ ஆன்மாவை நோக்கிப் பரமான்மா வந்து அருள்புரியும் ஆடலை அறிவதற்கும் முன்னைத் தவம் வேண்டும். பக்குவ ஆன்மா, பரமான்மாவைச் சேர்தல் திருமணம் அன்றி வேறு என்ன? திருவடி நீழலிலே

சிவானுபவம் பெறுதல் திருக்கல்யாணம்தானே! அந்த எக்களிப்பைத் தில்லையில் அருளிய அச்சோப்பதிகத்திலே பாடுகிறார் மணிவாசகர்.

முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

முத்திநெறி அறியாத மூடர் ஐம்புல வேடர்க்கு ஒப்பாவார். அம்மூர்க்கருடன் முயல்வது ஐம்புல வேடருடன் சேர்ந்து வளர்ந்து அயர்த்தலாகும் பத்திநெறி அறிவித்தல் தம்முதல் குருவுமாய் எழுந்தருளல். சித்தமலம் அறுவித்தல் தவத்தினில் உணர்த்தவிடல். சிவமாக்கி ஆளுதல் அரன்கழல் செல்லுதல்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

எனச் சிவஞானபோதம் கூறியவாறு குறக்குலக்கொடி குகன் கழல் செல்கிறாள்.

வள்ளி நாச்சியாரை முருகப் பெருமான் அழைத்துச் சென்று விடுகிறான். அப்பெருமாட்டியைக் காணாத நம்பிராசனின் புத்தி சுழல்கின்றது. கவர்ந்த கள்வனைத் தொடர்ந்து செல்லவேண்டும் என்று யுத்த சன்னத்தராய்ப் புறப்படுகின்றார்கள் வேடுவர்கள். அவ்வாறாகிய ஆரவாரவாசனையை அறிந்து அச்சம் மேலிடப் பொறாமல் உற்று ஆறுமுகப்பெருமானிடம் வள்ளி சொல்கின்றாள்: "வேடர்கள் பலரும் ஒருங்கு திரண்டு அம்பும் வில்லும், வாளும் கைவேலும், மழுவும் ஈட்டியும் கொண்டு வருகின்றார்கள். என் ஆத்ம போதம் துணுக்கம் எய்துகின்றது. என் செயலாவது யாதொன்றும் இல்லை" செய்வது அறியாது சரண் அடைகின்றாள் வள்ளி. எந்தையாகிய சுப்பிரமணியப் பெருமான் உபதேசிக்கின்றார்;

வருந்தலை வாழி நல்லாய் மால்வரை யோடு சூரன்
உரந்தனை முன்பு கீண்ட உடம்பிடி இருந்த நும்மோர்
விரைந்தமர் புரியச் சூழின் வீட்டுதும் அதனை நோக்கி
இருந்தருள் நம்பின் என்னு இறைமகட் கெந்தை சொற்றுன்

'புன்புலச் சேட்டைகட்கு அஞ்சி வருந்தற்க; யாம் யாவையும் சூனியம் செய்வோம். அதனைக் கருத்துட் கொண்டு எம்முள் அடங்கி எம்மை முன்னிட்டுச் சும்மா இரு.'

இந்த உபதேசம் ஆன்மாவை ஆட்கொள்ளும் பெரிய தத்துவம்.

வேடுவர்கள் அறியாமையினுற் பகைவர்களாய் மாறு பட்டு, கண்டாரைப் பிணிக்கும் பேரழகினையுடைய சுப்பிர மணியப்பெருமான் மீது வெய்ய பாணங்களைத் தொடுக் கிறுர்கள். கிருபாசமுத்திரமாகிய அப்பெருமான் மேல் அவை படுகின்றன. முருகனுக்கென்றே விட்ட பாணங்கள் வள் ளிக்குப்பட்டன போன்ற உணர்ச்சி பெருக நடுக்கம் உற்று வள்ளி நிற்கும் நிலை இருமையின் ஒருமை எய்திய நிலை.

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும் பொழில் அம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்ருய் வரும்இன்பத்
துன்பங்களே

எனத் திருக்கோவையார் பேசும் நிலை அது!

சிவமாகி ஆண்டருளும் தத்துவம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வளர்ந்த சைவதர்மம், சித்தாந்த சைவம் அல்லது சைவ சித்தாந்தம் எனப் பெயர் கொண்டு தமிழகத்தில் வளர்ந்து வருகிறது. சித்தாந்தம் என்ற சொல்லுக்கு முடிந்த முடிபு என்பது பொருள். எவைகளைப் பற்றிய முடிபு என்ற வினு இங்கே எழு

கின்றது. கடவுள், உயிர், உலகம் என்ற முப்பொருள்களைப் பற்றிய முடிபுகள் என்பது அந்த வினாவுக்கு உரிய விடை. இம்முப்பொருள்களைப் பற்றிச் சமய நூல்களும் தத்துவ சாஸ்திரங்களும் ஆராய்ந்து வெவ்வேறு முடிபுகளுக்கு வந்துள்ளன. பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களும் ஒன்றால் மற்றொன்று தோற்றுவிக்கப்படாமல் என்றும் உள்ள உண்மைப்பொருள்கள் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும். பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் அநாதி என்று சைவ சித்தாந்தம் முழங்குகின்றது. பதி - கடவுள். பசு - உயிர். பாசம் - கட்டு, கயிறு. உயிர் என்னும் ஆன்மா பாசம் என்னும் மும்மலக் கயிற்றினால் கட்டப்படுவதனாலேயே சைவ சித்தாந்தம் உயிரைப் பசு என்று வழங்கிவருகின்றது. கடவுளின் திருவருளினால் கடவுளை வணங்கி ஆணவம், கன்மம் மாயை என்னும் மும்மலங்களிலிருந்தும் விடுதலை பெற்று, உயிர் கடவுளுடன் இரண்டறக் கலத்தலே வீடுபேறு அல்லது மோட்சம் என்பதாம். முத்தி என்னும் இந்தப் பேரின்பப் பேற்றை அடையப் பதிஞானம், பசுஞானம் உயிருக்கு ஏற்படவேண்டும்.

அரன் திருவடியாகிய சிவஞானம் சாரும்போது உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசியும். அவ்வாறு நசியும்போது உயிர் அம்மலத்தின் வேறாகப் பிரிந்து நிற்கும். அம்மலத்தின் வேறாக நின்ற உயிர் தன் இயற்கையில் தனித்து நிற்றல் கூடாமையால் சிவத்தோடு சேர்ந்து நிற்கும் அக்கினி எவ்வாறு இரும்பைத் தன்மயமாக்குகின்றதோ, அவ்வாறே இறைவன் உயிரோடு சகசமான அத்துவிதக் கலப்பினாலே தனக்கு உரிய, அளவிட்டு அறிய ஒண்ணாத எண்பெருங்குணங்களையும் 'அவ்வுயிர் சிவானந்தப் பெரும் பேற்றினை அடையும் பொருட்டு விளங்கக் காட்டுவார். இவ்வாறு பெற்ற சிவஞானக் கலப்பினால் உயிர் எண்பெருங்குணங்களையும் அடைந்ததாயினும், பஞ்சகிருத்தியங்களுக்கு அவ்வெண்குணங்களும் உரித்தாகா; சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்தாக இருக்கும்.

அத்துவிதம்

உயிர்கள் பெறும் சாலோக, சாமீப, சாரூபமாகிய மூன்றும் நிலையுடையன அல்ல. இவை அபரமுத்தி. சாயுச்சியம் ஒன்றே பரமுத்தி. பழத்திற் சுவையும், மலரில் மணமும், நெருப்பிற் சூடும், வீணையில் இன்னிசையும் அவ்வப்பொருளில் அடங்கிப் பிரிப்பின்றிக் கலந்து நிற்றல் போலப் பரமுத்தி அடைந்தோர் சிவனோடு அத்துவிதமாகக் கலந்து இருப்பர். அத்துவிதம் என்றால் இரண்டன்மை என்பது பொருள். சிவமும் ஆன்மாவும் பேதம் உறத் தோன்றாதபடி ஒன்றுபடச் சேர்ந்ததனால் தற்போதமாகிய ஆன்ம போதம் நிகழாத - சிவபோதமே நிகழுகின்ற - பேரின்ப அநுபவம் நிகழத்தக்க கலப்பு அத்துவிதம் எனப்படும். அத்வைதம் என்ற வடசொல் அத்துவிதம் எனத் திரிந்தது.

சிவமும் சீவனும் இரு வேறு பொருளாயினும் முத்திக் கலப்பில் சீவன் மலமும் ஆன்ம போதமும் கெட்டு சிவ போதம் மேலிட்டுச் சிவமயமாய் ஒன்றுபட்டு விளங்கும். சிவனும் சீவனும் இருவேறாகத் தோன்றாததன்மையால் இரண்டும் அல்லவாய் — மற்று அவை ஒரு பொருளாய் விடுமோ எனில், அந்த நிலையில் சிவம் ஆண்டானும் சீவன் அடிமையுமாய்ச் சிவத்துள் சீவன் அடங்கிப் பேரின்பம் அநுபவித்தலின் பொருட்டன்மையால் ஒரு பொருளும் அல்லவாய் — அவ்விரண்டும் பிரிவு அறக் கலந்த கலப்புநிலை இரண்டு என்றும் ஒன்று என்றும் கூறுவதற்கு ஏலாமையால் அத்வைதம் எனப்பட்டது.

அத்வைத நிலையை அசுத்தத்தோடு அத்வைதப்பட்ட நிலையில் சீவன் அறியாது. பந்தங்கள் நீங்கிய சுத்தமான நிலையில் சீவன் சிவமாய் அறிந்து அநுபவிக்கும். இந்த அநுபவம் சிவாநுபவம்; சிவபோகம். சீவன் சிவத்தை அறிந்து அநுபவிக்கின்ற சுத்தநிலை சுத்த அத்வைதம் எனப்படும். சுத்தமான அத்வைதம் வேதாந்த சித்தாந்தம்; ஞானபாதம்.

ஆன்மா முத்தி அடையும் முறை

ஆன்மா முத்தி அடையும் முறையை வள்ளிநாயகி யாரது திருமணச் சரித்திர வாயிலாக யாழ்ப்பாணம் புலோலிநகர் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் திறம்பட விளக்குகிறார். இதோ அவர் விளக்கம்.*

"வள்ளிநாயகியாரது திருமணச் சரித்திரம் ஆன்மா முத்தியடையும் முறையோடு முழுப்பொருத்தம் உடையது. இந்நியாயங்களால் இக்கருத்தை ஒட்டித் திருமணச் சரித் திரத்தைக் கூறுவாம்.

சிவபிரானைக் குறிப்பவராகிய சிவமுனிவர் மூலப் பிரகிருதியாகிய மானை (மான் என்று மூலப்பிரகிருதிக்குப் பெயர்) அருட்கண்ணால் பார்த்தருளிய அளவில் அதிலுள்ள தத்துவங்கள் தோன்றிப் புவனாதிகளாகிய கர்ப்பம் உண்டா யது. அக்கர்ப்பத்திலே காத்தற் தொழிலைச் செய்யும் சிவசத்தியாகிய விஷ்ணுவின் புதல்வி எனப்படும் ஆன்மா காரண சூக்கும தேகங்களைப் பெற்றது. பின்னர் அது வள்ளிக்குழியாகிய தூல சரீர கர்ப்பத்திற் புகுந்தது. அதனாலே அவ்வான்மாவுக்கு வள்ளிநாயகி என்ற பெயர் உண்டாயது. வள்ளிநாயகி வேட்டுவராசனாகிய ஐம் பொறியுடைய கையிலும் அதன் மேல் அவன் மனைவியாகிய ஐம்புலன்கள் கையிலும் அகப்பட்டுக் கர்மேந்திரியங்களா கிய ஏனைய வேடர்கள் ஏவல் செய்ய வளர்ந்து வந்தாள்.

ஐம்பொறிகளை வேடர் என்பது சிவஞான போதத் தில் உள்ளது (சூத் 8). இராசகுமாரன் வேடர் கையில் அகப்பட்டுத் தன்னை வேடன் எனக் கருதி வளர்ந்து வர அவன் தந்தையாகிய இராசன் அவனைக் கண்டு அவர் களினின்றும் பிரித்து தன்னுடைய நாட்டுக்குக் கொண்டு போய் மகுடஞ் சூட்டிய முறை, ஆன்மா ஐம்புலன்களில் அகப்பட்டுத் தன்னை அவையாகப் பாவித்து மயங்கச் சிவ பிரான் அருட் குருவாக வந்து அதை அவற்றின் நின்றும் நீக்கி முத்தி கொடுத்தற்கு உவமையாகக் கூறப்படுகின்றது.

* கந்தபுராண விளக்கம் — வள்ளியம்மை திருமணப்படலம்.

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தோல் உயிரை
மன்னும்அருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்
(சூத். 8-1)

என்னும் சிவஞானசித்திச் செய்யுளும் இதையே கூறும். இங்கே மன்னவன் மகன் வள்ளி அம்மையும் இராசன் சிவகுருநாதனாகிய குமாரக் கடவுளும் ஆதல் பொருந்தும். இனி, ஆன்மாவானது 'புறச்சமய நெறி நின்றும் அகச் சமயம்புக்கும்' (ஷை சூத். 8-11) எனக் கூறியபடி பல்வகைச் சமயங்களாகிய படிகள் வழியாகச் சைவத்துக்கு வருதல் வள்ளியினுடைய வாழ்க்கையிற் காணலாம்.

மயிற் பீலித் தொட்டில் வாழ்க்கை மெய்யுணர்வு சிறிதும் இல்லாத உலகாயதம் முதலிய புறப்புறச் சமயங்களையும், மண்சோறு கறிகாய்ச்சுதல் புறச்சமயங்களையும். பேதைப் பருவமும் பெதும்பைப் பருவமும் அகப்புறச் சமய அகச் சமயங்களையும், பன்னிரண்டாம் ஆண்டுப் பருவம் சைவ வாழ்க்கைத் தொடக்கத்தையும் குறிப்பன.

பசுவினை விளைவாகிய தினை விளைவைக் காத்திருந்த ஆன்மா அப்பசு வினை முதிர்ந்த பின்னர் சைவ நெறியைச் சார்ந்து சிவ வினை செய்தல் வேண்டும். சைவ நெறியைச் சாருதற்குச் சமய தீட்சை பெறல் வேண்டும். இதற்குத் தகுதியாதற்குச் சத்திநிபாதம் வேண்டும். இச்சத்திநிபாதம் மலத்தைப் பக்குவப்படுத்துவதாகிய ஆதிசத்தியால் ஆவது யாண்டும் கருமங்களை முற்றுவிப்பவராகிய நாரதர் ஆதிசத்தியாம், அவர் வள்ளிநாயகியாரிடம் சென்றனர். இது சத்திநிபாதம் எனப்படலாம். அதன்

பின்னர் அவர் முருகக் கடவுளை அடைந்து, வள்ளி நாயகியாரது நிலையை அவருக்கு உரைத்தனர். குமாரக் கடவுளாகிய குருமூர்த்தம் வள்ளியிடம் சென்றது குமாரக் கடவுள் அவளைக் கண்டு அவளுக்கு வாசக தீட்சை செய் தனர். அவள் சிவரூபமாகிய ஆன்மா என்றும், ஐம்புல வேட்டுவப் புதல்வி அல்லள் என்றும் கூறி, அவளுடைய உண்மைப் பெயர் ஆன்மா என்றும் அவளுடைய ஊர் சிவபிரானது திருவடி என்றும், ஊர்க்குச் செல்லும் வழி சிவசத்தி என்றும் அறிவுறுத்தி இவ்வாய்மைகளையே தியானிக்க வேண்டும் என்றும், பிறவற்றை நினைத்தலாகா தென்றும் கட்டளை இட்டருளினர்;
(பராமுகந்தவிர்தி — 72)

நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேள் ஞாலம் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினர் புளினர் ஆனோர்க்(கு)
ஆய்ந்திடும் உணர்ச்சி யொன்றும் அயன்படைத் திலன்கொல்
என்றான்

வாரிரும் கூந்தல் நல்லாய் மதிதளர் வேனுக் குன்றன்
பேரினை உரைத்தி மற்றுன் பேரினை உரையா யென்னின்
ஊரினை உரைத்தி ஊரும் உரைத்திட முடியா தென்னில்
சீரிய நின்சீ றூர்க்குச் செல்வழி உரைத்தி என்றான் (**70, 71**)

அவர் வள்ளிநாயகியாகிய ஆன்மாவுக்கு இவ்வாய்மை களை விளக்கி நிற்க, அவளை என்றும் வளர்த்த வேடரா கிய ஐம்பொறிகள் அவளுக்கு முற்பட்டன. அவை பசு கரணங்களாகவே இருந்தமையால் குருவைக் காண மாட்டாமல் போயின. "போர்வை எனக் காணார் புவி" (திருவருட்பயன் — 45) என்றார் உமாபதிசிவம். ஆத லால் அவர் அவ்வேடர் முன்னிலையில் வேதாகம சாத்திர அறிவே வடிவு கொண்ட பிறிதோர் பொருளாகிய வேங்கைமரம் போல நின்றனர். அறிவு ஏறும்போது

மேலும் ஆழ்ந்த அறிவைத் தேடும் முயற்சியில் பொறிகளுக்கு வெறுப்புண்டாயினும் அவ்வறிவு தமக்குத் துணையாகத் தக்கதென உணருங்கால், அப்பொறிகள் அதை விரும்புவது போல வேட்டுவராசனும் முதல் அவ்வேங்கையைக் குறித்து அஞ்சினனுயினும் பின்னர் அது தனக்குத் துணையாகத் தக்கதென்று எண்ணி அதில் அன்பு கொண்டான். பொறிகளின் சேட்டையாகிய வேடுவர் விலக அவனுக்குக் குருவிலே கருத்துச் சென்றது. குருமூர்த்தி அவனைப் பார்த்து, 'இப்புனத்தைக் காத்தல் உன் மேன்மைக்குத் தக்க தொழில் அன்று; உனக்கு மேலான பதவி உண்டு. உன்னைத் தேவப்பெண்களும் வணங்கத் தக்கதாக வைத்தல் என்னுலாகும்' என்ருர். இதன் கருத்து: நீ பசுவினை செய்து ஐம்புலன்களால் வரும் இன்பங்களை நுகராதே. நான் உனக்கு முத்தி இன்பத்தைத் தந்து தேவர்களும் உன்னை வணங்கத்தக்கதாகச் செய்வேன். குருமூர்த்தி இங்ஙனம் சாத்திர தீட்சை செய்தனர்.

புல்லிது புல்லிது புனத்தைக் காத்திடல்
மெல்லியல் வருதியால் விண்ணின் பால்வரும்
வல்லியர் யாவரும் வணங்கி வாழ்த்திடத்
தொல்லியல் வழாவளந் துய்ப்ப நல்குவேன் (88)

இஃதொரு பரம உபதேசம். பசுவினையை விடுத்துச் சிவவினையை நாடுதற்கும் விடய இன்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை விழைதற்கும் சாதனமாய உபதேசம் இதுவாம். இச்செய்யுள் எமது நாவில் என்றும் சூக்குமமாயேனும் உறைய வேண்டியதொன்று. விஷய சுகங்கள் எம்மைக் கவருங்கால் இச் செய்யுள் அவற்றின் மயக்கத்தைத் தீர்க்கத் தக்கது. நாம் எமது பெருமையை உணராது சிறியவராக எம்மை நினைந்து சிறு தொழில்களில் முயன்று சிற்றின்பங்களைப் பெருந் தாகத்தோடு தேடுகின்ருேம் எமது வல்லபத்தின் கோடியில் ஒரு பாகமேனும் எமக்குத் தெரியாமையால் நாம் கீழோராய்ச்

சோம்பராய்ப் பதர்களாய்க் கெடுகின்றோம். நாம் பெரும் வலியேமாயினும் புல்லிய இன்பங்களாற் தாக்குண்டு மாள்கின்றோம்! சிவபெருமானுக்கு எதிராக மான் மழுக்களைச் செலுத்தத் தக்க வன்மையையுடைய தாருகவன முனிவர்கள் ஒரு வெறும் பெண் வடிவக் காட்சி மாத்திரையில் வலி இழந்து பிறரால் ஆட்டப்படும் பாவைகள் போலாயினர். கல்வி கற்கும் மாணக்கர் தமது விவேகத்தையும் கற்கும் திறனையும் அற்பமாகக் கருதிக் கற்கத் தக்கதிற் கோடியில் ஒரு பங்கேனும் கற்கின்றிலர். கற்குங்கால் தம்மைப் புல்லராக நினைப்போர் வளர்ந்த பின்னரும் தம்மைச் சிறப்பித்துத் தம்மை அடிமைகளாக்குவர். ஒரு குருவினது பிரதான கடன் மாணக்கனின் ஆற்றலையும் பெருமையையும் வியஞ்சகப்படுத்தி அவனை 'விண்ணின்பால் வரும்' ஆடவரும் வணங்க வைப்பதாம். இச் செய்யுளிலுள்ள உபதேசம் திருவைந்தெழுத்திற் சூக்குமமாக விளங்குவது.

ஆன்மாவாகிய வள்ளி அம்மையார், "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேனைப் பரிசுத்தரான தேவரீர் தீண்டலாமா?' என்றனர். அதன்பின் ஐம்பொறிகளாகிய வேட்டுவராசனும் வேடரும் வந்தனர். இப்போது ஐம்பொறிகள் ஒருவாறு வசப்படும் காலமாதலால் குமாரக்கடவுள் வேங்கை மரமாக மறையாமல் ஒரு கிழவர் போல நின்று அவர்களுக்குத் திருநீறிட்டார்.

இது தீட்சையிலே செய்யப்படும் முதற்கிரியையாகிய திருநீறிடல். இதனாலே சரீரமானது ஆணவத்துக்கு அடிமையாயிருந்த நிலைமையினின்று சற்றே திருந்திச் சிவவழிபாட்டுக்குந் துணைசெய்யும் தன்மையை எய்தும். வள்ளிநாயகி குருவாகிய குமாரக்கடவுளுக்கு நைவேத்தியமாகத் தேன், கனி, மா முதலியவற்றைக கொடுத்து அக்கினியின் ஏழு நாக்குகளாகிய ஏழுமலைகளைக் கடந்து அவ்வக்கினியின் உதரமாகிய சுனையிற் செல்லும் நெய்யாகிய பானியத்தை அவர்பாற் சேர்த்தாள். அப்போது குமாரக் கடவுள் பிரணவமாகிய யானை முன்நிற்பச் சிவமாகிய

தாம் இடையே நிற்ப, அதன் பின்னர், ஆதிசத்தியோடும் மலத்தோடும் சேர்ந்த வள்ளியாகிய ஆன்மா நிற்ப, திருவைந்தெழுத்தின் அநுபவஞானத்தை ஆன்மாவுக்கு வருவித்துச் சமயதீட்சை செய்து சிவலோக இன்பத்தையும் தமது திருவடிக் காட்சியையும் கொடுத்து, 'நீ செய்த தவத்தின் பயனாக இது கிடைத்தது' என்றார்.

மூந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கோன்ஞர்வை வேலும் குலிசமும்வ ஏனைப்படையும்
போன்ஞர் மணிமயிலும் ஆகப் புனக்குறவர்
மின்ஞள்கண் காண வெளிநின் றனன்விறலோன் (116)

சமய தீட்சை பெற்ற ஆன்மா சரியை மார்க்கத்தை அநுசரித்து வந்தது. சரியை மார்க்கம் பெரும்பான்மையாகச் சரீரத் தொழிலையும், சிறுபான்மையாக மனத்தொழிலையும் உடையது. சரியை மார்க்கம் முறையாக அநுட்டித்த பின் கிரியை மார்க்கம் அநுட்டிக்கப்படுவது. அது பெரும்பாலும் மனத்தொழிலை உடையதாதலால் வள்ளியாகிய ஆன்மாவை கிரியை மார்க்கத்திற் செலுத்துவதற்காக வள்ளியினது தோழியாகிய மனத்தை வசப்படுத்துவதற்குக் குமாரக்கடவுள் திருவுளங் கொண்டனர். அத்தோழியையும் அவர் இசைவித்து அம்மார்க்கத்துக்கு வேண்டியதாகிய விசேட தீட்சை செய்து ஆன்மாவைக் கிரியா பாதம் யோக பாதங்களில் செலுத்தி மறைந்தனர். இதனால் யான், எனது என்பவைகள் கெட ஆகாமியமாகிய தினை காத்தல் நின்றது. பின்பு அவள் வீட்டுக்குச் சென்றாள். அங்கே வீட்டில் உள்ளோராகிய இந்திரியங்கள் ஒன்றிலும் அவள் பற்றில்லாதவளாய் குமாரக்கடவுளின் அருவத் திருமேனியை நினைந்து சிவயோகம் செய்து வந்தாள். பொறி புலன்கள் தங்கள் பழைய வாசனையைக் கொண்டு அவளைத் தம் வழிப்படுத்தக் கருதின. அவள் அவற்றுக்கு இடம் கொடுத்தாளல்லள். அவளில் நேர்ந்த வேறுபாட்டின் காரணத்தை அவைகள் ஆராய்ந்து, தமது தலைவராகிய முருகனது தீண்டுதலால் இது நேர்ந்ததென அறிந்தன.

அவைகள் இதனால் அயர்ந்து இருக்கக் குமாரக் கடவுள் முன்னமே வசப்பட்ட மனமாகிய தோழி வழியாக வள்ளியைப் பெற்று, அத்தோழியையும் வேடரையும் நீங்கி அவளுக்குக் கைவல்லியத்தைக் கொடுத்துத் தம்மையே தனித் துணையாக்கிக் கொண்டு சென்றனர்.

வேடுவராகிய பொறிபுலன்கள் ஆன்மா தம்மை முற்றாக மறந்ததனால் அவியுமுன் உயர்ந்தெழும் விளக்கொளி போல் அவளைக் கவரற்குத் தம்மால் இயன்ற இறுதி முயற்சிகளைச் செய்தன. அம்முயற்சிகளை ஒழித்தற்காகக் குமாரக்கடவுளுடைய சேவல் கூவிற்று. அதன் சத்தத்தினால் ஐம்பொறிகளாகிய வேடர் மயங்கி விழ்ந்தனர். ஆன்மாவானது மல பந்தத்தினின்றும் அற நீங்கிற்று. அப்போது நாரதர் தீவிரதர சத்தியாக வந்து வள்ளியிற் பதயக் குமாரக் கடவுள் வேடர்களாகிய பசுகரணங்களை வள்ளியைக் கொண்டே எழுப்புவித்துத் தமக்கு உரிய சிவகரணமாக்கி யாவரும் உவப்ப இறுதித் தீட்சையாகிய நிர்வாண தீட்சை என்னும் திருக்கலியாணத்தைச் செய்தருளினர். அதன் அங்கமாகிய நயன தீட்சையால் அவளது ஆன்மநிலையை (வேட்டுவ வடிவத்தை) நீக்கினர்.

அன்னதோர் வேலை தன்னில் அறுமுக முடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை தனைஅரு ளோடு நோக்கக்
கோன்னவில குறவர் மாதர் குயிற்றிய கோலம் நீங்கி
முன்னுறு தெய்வக் கோலம் முழுதொருங் குற்ற தன்றே (**197**)

அப்போது ஆன்மா உமா சமேதராகிய சிவபிரானைக் கண்ணுற்றுச் சிவதரிசன நிலையைப் பெற்றது. பின்னர், குமாரக் கடவுள் மலமுயற்சிகளெல்லாம் தணிந்த நிலையாகிய தணிகை மலையிலே சிவபோக சாயுச்சியங்களை ஆன்மாவுக்குச் சேர்த்தருளினர்.''

சிவலோக இன்பம் திருவடிக்காட்சி

முப்பொருள் உண்மையை ஒருவாறு விளக்குதற்கு எழுந்தவை புராணங்களாகும். புராணங்களிலுள்ள

உண்மைகளைப் பிரித்தறியாது புராணங்களைத் திரிபாக விளங்குவதால் வேண்டா வினக்கள் எழுகின்றன

பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவும் மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேஅவை
அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே

'சிவனுடைய பெருமையை விளக்கும் சிவபுராணங்கள் சற்றேனும் தவறில்லாதன. அவற்றின் மேன்மைக்கு வேதங்களே சான்றுவன. அவற்றில் உள்ளன அனைத்தும் வாய்மையே. அவ்வாய்மைகளை அறிஞர்கள் நுண்மையாக ஆராய்ந்தாலன்றி அறியமாட்டார்கள்'. இது கச்சியப்ப சிவாசாரியரின் தரும உபதேசம்.

பன்னிரு தடந்தோள் வள்ளல் தாமே எளிவந்து எம்மை ஆண்டு அடிமை செய்யும் திருவருள் நலன் வள்ளியம்மை திருமணத்திலே தெரிகின்றது. ஐம்புல வேடரின் மத்தியிலே வாழ்கின்ற ஆன்மாவை ஆண்டவன் ஆட்கொள்ளும் அற்புத தத்துவம் வள்ளி திருமணம். இத்தனையும் தெரிந்த பின்பும் மனைவி ஏது, கல்யாணம் ஏது என்ற வினா எழத்தான் வேண்டுமா?

செங்கே ழடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே

எனத் திருமுருகனைப் பாடிப்பரவினால், வேல் உண்டு வினை இல்லை, மயில் உண்டு பயம் இல்லை, குகன் உண்டு குறை இல்லை என்ற நெஞ்சத்துறுதி நமக்கு வரும். அப்போது, 'என் செயலாவது யாதொன்றும் இல்லை' என்ற பூரண சரணாகதி நிலை தோன்றும். இந்நிலையில், அந்த வெற்றிவேற் பெருமான் நம்மையும் திருக்கல்யாணம் செய்து சிவலோக இன்பத்தையும் திருவடிக்காட்சியையும் தருவான்.